89 A/L
Paper Class
Phy - சௌந்தி
செ, வியா. 4-00
Che - செல்வா
சனி, ஞா. 2-30
பிரிவு II 5 30-6. 30
Bot - பாலா
சனி.ஞா 3-30
Zoo-ஞானம் சனி,ஞா 8-15
NIRU TUITION CENTRE
KONDAVIL

வார முரசொலி
VARAMURASOLI

A/L 89 கலை வர்த்தகம் PAPER CLASS
Eco - சின்னத்தம்பி
சனி, ஞாயிறு 5-00
Acc - மரியதாஸ்
திங் - புதன் 6-00 a. m.
Com. - தேவா
செ, வியா. 6-30 a m
Day மீட்டல் வகுப்பு
காலை 7-30—9-30
நடைபெறுகின்றன
NIRU TUITION CENTRE
KONDAVIL

முரசு 3 ஒலி 105 ஞாயிற்றுக்கிழமை 26-03-1989 (பங்குனி 13) ஷஃபான் 17 விலை ரூபா நான்கு

★ தமிழக சட்டசபையின் உறுப்பினர்கள் கைகலப்பு

# ஜெயலலிதா படுகாயமுற்றார்

# கருணாநிதி முகத்தில் பலத்த அடி

## மூப்பனார் மீதும் தாக்குதல்; அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் மண்டையில் காயம்

## தலைவிரிகோலத்துடன் ஜெயலலிதா அழுதார்
## அ. தி. மு. கவினருக்கு மாத இறுதிவரை தடை

(சென்னை)





தமிழக சட்டசபையில் நேற்று திடீரென ஏற்பட்ட வாக்குவாதம் இறுதியில் சபை உறுப்பினர்களுக்கிடையே கைகலப்பாக மாறியதால் சற்றேனும் எதிர்பாராத வகையில் பல முக்கியஸ்தர்கள் படுகாயமடைய நேர்ந்தது. கடந்த சில நாட்களாக சர்ச்சைக்குரியவராக விளங்கிய எதிர்க் கட்சித்தலைவரான செல்வி ஜெயலலிதாவும், தி. மு. க. அரசின் உள்ளூராட்சி அமைச்சரான வீரபாண்டி ஆறுமுகமும் நேற்று மாலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்: இத்தாக்குதலின் போது முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் மூக்குக்கண்ணாடி உடைத்துநொருக்கப்பட்டது. இந்திரா காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு தலைவரான மூப்பனாரும் தாக்குதலுக்குள்ளானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பல உறுப்பினர்கள் கண்ணாடி வெட்டுகள், மற்றும் தாக்குதல்களால் காயமடைய நேர்ந்துள்ளது, கடந்த வருடம் ஜனவரியில் திரு. பாண்டியன் சபாநாயகராகவிருந்த போது முதலாவது தாக்குதல் நிகழ்வு தமிழக சட்டசபையில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (16ம் பக்கம் பார்க்க)

## தம்மை கொல்ல முயன்றதாக
## ஜெயலலிதா குற்றச்சாட்டு!

தமிழக சட்டசபைக்குள் வைத்து தம்மைக் கொலை செய்ய முயற்சி எடுக்கப்பட்டதாகவும் ஒரு அமைச்சர் இதில் முக்கிய பங்குவகித்ததாகவும் தாக்குதலுக்குள்ளான ஜெயலலிதா நேற்று பத்திரிகையாளர்களிடம் கூறினார்

சபையிலிருந்து அழுதவாறு, தலைவிரி கோலமாக வெளியேறிய இவர், தாம் அணிந்திருந்த சேலை, சட்டைகளையும் நிருபர்களிடம் காட்டினார்

தம்மை மானபங்கப்படுத்த எடுத்த நடவடிக்கைகளையிட்டு ஆளுநர் அலெக்ஸான்டரைச் சந்தித்து மகஜரைக் கைய

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## கருணாநிதியின் மூக்குக் கண்ணாடி
## அடித்து நொருக்கப்பட்டது

பட்ஜட்டை தாம் படிக்கத் தொடங்கிய போது அ தி.மு. க. உறுப்பினரான செங்கோட்டுவன தம்மை நோக்கிப் பாய்ந்து தமது மூக்குக்கண்ணாடியை உடைதததுடன், பட்ஜட் புத்தகத்தால் முகத்தில் தாக்கி காய மேற்படுத்தியதாக கலைஞர் கருணாநிதி நேற்று பததிரிகையாளாகளிடம் தெரிவித்தார்.

செங்கோட்டுவனுக்கு உற்சாகமூட்டும் விததத்தில் ஜெயலலிதா வார்த்தைப்பிரயோகங்களைப் பயன்படுத்தியதாகவும் கலைஞர் சுட்டிக்காட்டினார்.

மைக்குகள், பட்ஜட் புத்தகங்கள், மேசைச்சட்டைகள் நேற்றைய தாக்குதலுக்கு ஆயுதங்களாகப் பயன்படுத்தப்பட்டன

தி மு கவின் உறுப்பினர்கள் பலர் கலைஞர் கருணாநிதியைச் சுற்றி நின்று அவரை பவுத்திரமாக வெளியே கொண்டு சென்றதால் அவர் குறைவான காயங்களுடன் தப்பமுடிந்தது.

## பிரிவதற்கு முந்திய கைலாகு!



பாகிஸ்தானுக்கு இந்திய தூதராகச் செல்லும் திரு. டிக்ஸிற், ஜனாதிபதி பிரேமதாஸவைச் சந்தித்து, கைலாகு கொடுத்து, பிரியாவிடை பெறும் காட்சி இது.

● நிலைமையை நேரில் பார்வையிடச்சென்ற ஈரோஸ் குழுவினர் கண்டது

# குமுழமுனையில் 76 வீடுகள் முற்றாக தீக்கிரை

முல்லைத்தீவு - குமுழமுனை பகுதியில் எழுபத்தியாறு வீடுகள் முற்றாக தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாகவும் நித்திகைக்குளம் பகுதியில் இரண்டு ஹெலிகப்டர்கள் ஷெல் வீச்சு தாக்குதல்களை மேற்கொண்டதனை தாம் நேரில் அவதானித்ததாகவும் அப்பகுதிக்கு நேரில் விஜயம் செய்த ஈரோஸ் பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர் ஈரோஸின் பாராளுமன்ற குழுத்தலைவர் திரு இரட்ணசபாபதி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் இ பரராஜசிங்கம் (பரா), எஸ் எட வேர்ட் உட்பட மொத்தம் ஒன்பது பேர் கொண்ட குழுவொன்று சில தினங்களுக்கு முன்னர் முல்லைத்தீவில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் விஜயம் செய்திருந்தது இக்குழு நேற்றுக் காலை யாழ்ப்பாணம் திரும்பியது. குமுழமுனைப்பகுதியில் எரிக்கப்பட்ட வீடுகளில் தற்பொழுது பல புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன அப்பகுதியில் வசித்த மக்கள் அகதிகளாக வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர் நித்திகைக்குளம் பகுதியில் தொடர்ந்தும் தாக்குதல்கள் நடந்து கொண்டிருக்கின்றது கடந்த ஐந்தாம் திகதிக்குப் பின்னர் அலம்பிலுக்கு அப்பால் எவரும் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. நாயாறு, செம்மலை பகுதிக்கு எவரும் போக முடியாத நிலை காணப்படுகின்றது என இக்குழுவில் சம்பவம் நடைபெற்ற இடங்களுக்கு சென்று திரும்பிய உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார் சம்பந்தப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிட ஈரோஸ் பிரமுகர்கள் குழு அனுமதி கோரிய போதிலும் குமுழமுனைக்கு அப்பால் செல்வதற்கு அனுமதி வழங்கப் → 16 ஆம் பக்கம் பார்க்க

# சிறு விளம்பரம்


## விற்பனைக்கு

சுக்கில வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் திருக்கணித பஞ்சாங்கம் எம்மிடம் தொகையாகவும் சில்லறையாகவும் கிடைக்கும் கூடுதலாக வாங்குவோருக்கும் வியாபாரிகட்கும் விசேடகழிவு. விற்பனையாளர் மக்மில்லன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். 03652

## தேவை

அனுபவமுள்ள ''பிளேட்டின் மெஷின் மைன்டர்'' தேவை. ஓரளவு பயிற்சி பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். தேவி அச்சகம், 114/19, நாவலர் வீதி. யாழ்ப்பாணம். 03712

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 9000 லீற்றர் அளவுள்ள இரண்டு அறைகளைக் கொண்ட பவுசர் தாங்கி விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய விலாசம். சண்முகரத்தினம் எரிபொருள் நிரப்பு நிலையம். காரைநகர். 03638

## விற்பனைக்கு

National T.V அல்மாரி கட்டில், ஈசற் றேடியோ மேசைகள் மணிக்கூட்டு கடைக்கு ஏற்ற கபேட் கண்ணாடி மேசை மற்றும் பல உடன் விற்பனைக்கு உண்டு. நடராசா குருக்கள் வாசம் வீரமாகாளி அம்மன் கோவில் வளவு நல்லூர் 03724

## தேவை

பிற்றுமக்ஸ் வீடியோ டெக், ஈசற், திருத்தமுடியாதரெலிவிஷன்வீடியோ டெக் ஈசற் றேடியோக்கள் உடன் தேவை. விபரங்களிற்குJaffnaTechnical Institute ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவை அருகாமை) யாழ்ப்பாணம். 03580



# உள்ளூர் திரைகளில்

## ஹரன் வெண்திரையில்

10-30, 2-30, 4-45

**NINJA U. S. A.**

கலர்

பயங்கர சண்டைகள் நிறைந்த படம்

03719

## நியூ சாந்தி வெண்திரை

10.30- 2. 30- 4. 30

**INSTANT JUSTiC**

(ADULTS ONLY)

அடுத்து:-

**ENTER THE DRAGON**

(NEWPRINT)

03720



## சேவை

கலர் படப் பிரியர்களே; கலர் பிலிம் ரோல்களை கொம்பியூட்டர் மூலம் கழுவி பிரதியாக்கம் செய்து கொள்ளுங்கள் பிரதி 4/90 குயிக் ஸ்ரார் 163, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 03610

## விற்பனைக்கு

யாழ்-பருத்தித்துறைவீதி, பத்தாம் கட்டை ஆவரங்கால், பொக்கிணியன் தாழ்வுவயல் நெற்பரப்பு6 பெறவிரும்பும் தொகை குறிப்பிட்டுக் கடிதத் தொடர்பு; விளம்பரதாரர் இல. 260, முரசொலி, யாழ்ப்பாணம். 03618

## வகுப்புக்கள்

சிங்களம், ஆங்கிலம்.5-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் 3 . 4 . 89-ல் ஆரம்பமாகின்றன. உங்கள் வீடுகளிலும் ஆங்கிலம், சிங்களம் கற்பிக்கப்படும். விபரம் (நேரிலும் கடிதமூலமும்) I . E . T 11B, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (விவேகானந்தா அச்சகத்திற்கு எதிர் மேல் மாடி) 03727


# இன்று திறப்பு விழா

கொழும்புத்துறை புனித வளன் வாசிகசாலை திறப்பு விழா இன்று பிற்பகல் இடம் பெறும். யாழ். உதவி அரசாங்க அதிபர் இத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளுவார்.

# சங்காபிஷேகம்

எழுதுமட்டுவாள் விழுபளை கண்ணகை அம்மன் ஆலய மகா சங்காபிஷேகம் 29ஆம் திகதி புதன்கிழமை காலை பிரதமகுரு பிரதிஷ்டாகிரியா கலாபமணிவை மு.பரமசாமிக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது மாலைஅலங்கார உற்சவமும் நடைபெறவுள்ளதாக பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

# ஐந்து பிரிவுகளில் முதலாம் இடம்

(சங்கானை)

பண்டத்தரிப்பு கொத்தணிப் பாடசாலைகளுக் கிடையில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் ஐந்து பிரிவுகளில் முதலாமிடத்தை பெற்றுள்ளது. 13 வயது ஆண்கள் பிரிவு, 13 வயது பெண்கள் பிரிவு, 17 வயது ஆண்கள் பிரிவு, 19 வயது ஆண்கள் பிரிவு. 19 வயது பெண்கள் பிரிவு ஆகிய பிரிவுகளில் இந்த மகா வித்தியாலயம் முதலாமிடத்தை பெற்றது.


## விற்பனைக்கு

குளிர் சாதனப் பெட்டி (உஷா), மீன் தொட்டி இரண்டும் மலிவு விற்பனையில் உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி சக்தி ஸ்ரோர்ஸ், கே.கே.எஸ். ரோட் கொக்குவில் சந்தி. 03738

## விற்பனைக்கு

Honda M. B. 5 உடன் விற்பனைக்கு உண்டு விலை விபரம் நேரில் பேசலாம் காலை 9 முதல் மாலை 5 வரை தொடர்பு: வீரசிங்கம் நியூசாந்திசினிமா, யாழ்ப்பாணம். 03734


# மைதானத்தில் பெறும் அனுபவம் மாணவனை முழு மனிதனுக்கும்

(சங்கானை)

''கல்வி மாத்திரம் ஒரு மாணவனை உருவாக்குவதில்லை. மைதானத்தில் பெறும் அனுபவங்களும் மாணவனை முழுமையடையச் செய்கின்றன. விளையாட்டுப்போட்டிகளில் மாணவர்கள் பங்கு கொள்வதால் அவர்களிடையே தேங்கிக் கிடக்கும் திறமைகளும் ஆற்றல்களும் வெளிக்கொண்டு வரப்படுகின்றன. அத்துடன் தலைமைத்துவப் பண்பையும், ஒற்றுமை, சகிப்புத் தன்மை ஆகிய நற்பண்புகளையும் மாணவர் மத்தியில் ஏற்படுத்துவதற்கு விளையாட்டுப் போட்டிகள் சிறந்த சாதனமாக அமைகின்றன.''

மாதகல் சென். ஜோசப்மகா வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டியில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய வைத்திய கலாநிதி எஸ்.சண்முகதாஸ் குறிப்பிட்டார்.

மகாவித்தியாலய அதிபர் திரு ச. அருள்சுப்பிரமணியம் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமையன்று நடைபெற்ற இப்போட்டியில் சிறப்பு விருந்தினர்களாக உடற்கல்வி அதிகாரி திரு. எஸ். அருணகிரிராஜாவும், ஓய்வு பெற்ற அதிபர் திரு அ. தம்பிப் பிள்ளையும் கலந்து கொண்டனர். இவ் வித்தியாலயத்திற்கு தமது சொந்தச் செலவில் தண்ணீர் தாங்கியொன்றை அமைத்துக் கொடுத்த திரு. ச பவன் இப்போட்டியில் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு புதிதாக அமைக்கப்பட்ட தண்ணீர் தாங்கியை திறந்து வைத்தார்.

சேர இல்லம், சோழ இல்லம், பாண்டியன் இல்லம் ஆகிய இல்லங்களுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பாண்டியன் இல்லம் அதிக புள்ளிகளைப் பெற்று வெற்றிக்கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது. போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை திருமதி த. சண்முகதாஸ் வழங்கினார்.

# மறைந்த அதிபருக்கு அஞ்சலி

(சங்கானை)

மாதகல் சென். ஜோசவ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற பாடசாலை தின விழாவில் மறைந்த முன்னாள் அதிபர் அமரர். நீ. ஜேம்ஸ் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு இரண்டு நிமிட மௌனஞ்சலி செலுத்தப்பட்டது. வித்தியாலய அதிபர் திரு.ச. அருள் சுப்பிரமணியம் உப அதிபர். திரு ஈ. திருச்செல்வவிநாயகமூர்த்தி உட்பட மற்றும் பலர் இரங்கலுரை நிகழ்த்தினார்கள்.

இவ் விழாவில் கடந்த 1988-ம் ஆண்டில் வகுப்புகளில் பாடங்களில் திறமை பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. பாடசாலையிலிருந்து இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் திருமதி. தே. பாலச்சந்திரன், திரு. பி அருன் ஆகியோருக்கும் பிரிவு உபசார வைபவமும் நடாத்தப்பட்டது.


# BOND INSTITUTES

58 A, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.

## A/L - Physical, Chemistry

திரு. மகாதேவா B.Sc. (Dip-in-Ed)

சனி, ஞாயிறு 9.15

ஆரம்பம்: 25 - 03 - 89

இட நெருக்கடி காரணமாக புதிய அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

03730



உ

ஓம் விராட் விஸ்வப் பிரமணே நம

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விபவ வருடம் பங்குனித்திங்கள் 14-ம் நாள் [27. 03. 89] திங்கட்கிழமை பகல் 11. 11 மணிமுதல் 1. 13 மணிவரையுள்ள மிதுனலக்கின சுப முகூர்த்த வேளையில்

எமது புத்திரன் திருநிறை செல்வன் **நகுலேஸ்வரன் (கண்ணன்)** அவர்களுக்கும்

எமது புத்திரி திருநிறை செல்வி **ஜெயபாமா (பாமா)** அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வந்து மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

3-ம் நாள் (29. 03. 89) மணமகள் இல்லத்தில் பிற்பகல் 4 மணிக்கு வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

நன்றி

தங்கள் நல்வரவை நாடும்

திருமதி தம்பையா மகேஸ்வரி
மற்றும் குடும்பத்தினரும்
பொற்தொழிலாளர் வீதி
சங்கத்தானை - சாவகச்சேரி

திரு. திருமதி திருநாவுக்கரசு
மற்றும் குடும்பத்தினரும்
நம்பர் 4, அரசடி லேன்
தட்டாதெரு - யாழ்ப்பாணம்

03733



# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## வைத்திலிங்கம் இராசையா

(இளைப்பாறிய மலேயன் பென்சினியர் சுங்க திணைக்களம், மலேசியா)

பிறப்பு 13-09-1898 இறப்பு 06-04-1988

திதி: 26-03-1989

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெருமக்கள்,
கிராமத்து மக்கள்

03706

# வார முரசொலி

# பெண் அமைப்பு தேவையா?

# மேடைப் பேச்சுக்களினால் சமுதாயத்தை சீரழிக்காதீர்!

'பெண்கள் அமைப்பு' என்றவாறான ஒரு இயக்கம் இன்று நம்மிடையே இயங்கி வருகின்றது. பெண்களுக்கு மட்டுமல்ல ஆண்களுக்கும் அமைப்புக்கள் இன்றியமையாதனவே. தனிமனிதன் தனித்து இயங்க முடியாது ஒவ்வொருவரும் ஒரு குடும்பத்தின், ஒரு சமூகத்தின், ஒரு நாட்டின் அங்கத்தவரே. ஒருவன் தன் குடும்பத்தோடுமட்டும் வாழாது சமுதாயத்தோடும் இணைந்து வாழ்ந்து சமுதாயத்தின் பிரச்சனையையும் தன் பிரச்சனையாகக் கொண்டு வாழ வேண்டியது அவனது கடமையும் உரிமையுமாகும். இதற்கு இவ்வாறான அமைப்புக்கள் இன்றியமையாதனவே. ஆனால் அமைப்புக்களின் நோக்கம் சமுதாயத்தைச் சீர்திருத்துவனவாக நல்வழி காட்டுவனவாக அமைதல் வேண்டும் என்பதனையும் அமைப்பாளர்கள் அறிவு படைத்தோர் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

புத்திஜீவிகள், ஆய்வாளர்கள் ஒன்று கூடும் இடமாகிய உயர்தரக் கல்வியினை வளர்க்கும் உயர்கல்வி ஸ்தானத்தில் 8-3-1989-ம் திகதி நடைபெற்ற ஓர் அமைப்பின் உரையாடலை 11-3-1989-ம் திகதி 'முரசொலி' வெளியிட்டிருந்தது இதனை யாவரும் அறிந்திருப்பார்கள் என்பதில்ஐயமில்லை. 'எப்போது ஒரு குழு இன்னோர் குழுவினால் நசுக்கப்படுகின்றதோ அப்போதே நசுக்கப்படும் குழுவினால் ஒரு தனி அமைப்பு உருவாக்கப்படுவது அவசியமாகின்றது அதாவது பெண்ணினம் எப்போது ஆண்வர்க்கத்தினால் நசுக்கப்பட ஆரம்பித்ததோ அப்போதே இவ் அமைப்புக்களும் ஆரம்பித்து விட்டன' என ஒரு பெண்மணி அதுவும் ஒரு தந்தைக்கு மகளாகப் பிறந்து ஒரு அண்ணாவுக்கு தங்கையாகி ஒரு அன்புக் கணவனுக்கு மனைவியாகி ஒரு ஆண் மகனுக்கு அன்னையாக விளங்கும் பெண்மணி குறிப்பிடுகின்றார்.

**இந்திரா சிற்றம்பலம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

தந்தையின் அன்பினாலும் அண்ணாவின் அரவணைப்பினாலும் அன்புக் கணவனின் துணையுடனும் வாழ விரும்புகின்ற, வாழ்ந்து கொண்டிருக்கின்ற பெண்ணினமே எந்த ஆணினால் அடக்கப்படுகிறீர்கள். எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்த ஒருவனுக்காக ஆடை அணிகளால் தம்மை அலங்கரித்து மணமேடையில் அவனுக்காகக் காத்திருந்து, அவன் தரும் அன்புப் பரிசை ஏற்று அவன் போடும் மூன்று முடிச்சுக்குக் கட்டுப்பட்டு, சபையோர் சாட்சியாக கழுத்தை நீட்டுவதோடு மட்டுமல்ல அம்மியில் கால் தூக்கி வைக்க முடியாத நிலையில் அவன் உதவியைப் பெற்றே அதனையும் செய்து அவனுடன் அவனுக்காக வாழ்ந்து கொண்டிருக்கும் பெண் இனமே யாரினால் நசுக்கப்படுகிறீர்கள்? எவ்வாறு நசுக்கப்படுகிறீர்கள்?

அன்புக் கணவனின் அரவணைப்பில் வாழ்ந்து அவனது அனுசரணையுடன், ஆதரவுடன் இன்ப உலா வரும் பெண் அமைப்பு இயக்க உறுப்பினர்களே ஏன் வெறும் மேடைப் பேச்சுக்களினால் வளர்ந்து வரும் சமுதாயத்தைச் சீரழிக்கிறீர்கள்.

"ஆணும் பெண்ணும் சேர்ந்து குடும்பம் நடத்த வேண்டும் ஆண்கள் எம்மை நசுக்குகிறார்கள் எனவே அவர்களுடன் எம்மால் தொடர்ந்தும் இருக்க முடியாது என்று கூறிக் கொண்டு பெண்களால் தனித்துப் பிரிந்து செல்லவும் முடியாதுஎன்று கூறும் அமைப்பாளர்களே, அப்படியாயின் ஆண்கள் தேவை அவர்கள் வீட்டிற்குள்ளேபொம்மையாக குழந்தைகளைப் பெறுவதற்கு ஒரு தந்தையாக மட்டும் இருந்தால் போதும் என்ற ஒரு நிலை உருவாக வேண்டும் என்பதுதான் உங்கள் அமைப்பின் நோக்கமா?

இன்றைய சமுதாயத்தில் அதுவும் இலங்கை வாழ் தமிழ்ப் பெண்களின் சமுதாயத்தில் கல்வியில், பட்டத்தில், பதவியில், சட்டத்துறையில், தலைமைத்துவத்தில் எங்கு பெண்கள் பின் தங்கி இருக்கின்றார்கள்?

எதிர்க்கட்சித் தலைவிபெண்ணாமது பல்கலைக்கழக மாணவர்கள் அமைப்பில் கூடுதலான இடம் பெறுபவர்கள் பெண்கள். பெண்ணுக்கு அறிவு இருக்கிறது, வலிமை இருக்கிறது அவளுக்கு அதனை செயற்படுத்த உரிமை இருக்கிறது. சுதந்திரம் இருக்கிறது. அகப்பை பிடித்தபெண் இன்று 'பேனா' பிடிக்கின்றாள். அதனால் அவளுக்கு எதனையும் செய்ய முடியும் அதற்காக இன்பமாக வளரும் இல்லற வாழ்க்கையில்ஆயுதம் ஏந்திப் போராட இளம் பெண்குழந்தைகளைத் தூண்டாதீர்கள்

பெண்ணுக்கு விடுதலைவேண்டும். அதாவது இரவில் எட்டு மணிக்கு தெருவில் செல்வதற்கு உரிமையில்லையாம். இவ்வுரிமை உங்களுக்குஉண்டு. ஆண் உரிமையாக இரவில் திரிகிறான் மேலாடையின்றி எங்கும் செல்கிறான் அப்படி நீங்களும் செல்லுங்கள்உரிமை அங்கு மறுக்கப்படவில்லை அறிவுக்கண் திறக்கப்பட்டால் அங்கு எது உங்களுக்கு தடையாக இருக்கிறது என்பதனைப் புரிந்து கொள்வீர்கள் ஆணுக்கு நீங்கள் அடங்கவும் வேண்டாம். அடக்கவும் வேண்டாம். இதற்கு ஒரு அமைப்பும்தேவையில்லை.

நசுக்கும் ஆணினத்திற்காக நசுக்கப்படும் பெண்ணினம் விடுதலை கேட்கிறது. அதற்கு அவர்களின் எடுத்துக்காட்டு "தலைப்பிள்ளையாக ஆண் மகனைப் பெற்ற தாயையும் தலைப்பிள்ளையாக பெண் பிள்ளை பெற்ற தாயையும் சமுதாயம் தரம்பிரிக்கிறதாம்". இது ஓர் அடக்கு முறையாம்.

இதில் ஆணினத்தின் பங்கு என்ன? இது சமுதாயத்தில் வழங்கப்பட்டுவந்தது. அதுவும்

[14-ம் பக்கம் பார்க்க]

பெண் நிலைவாதம், பெண் விடுதலை, பெண்கள் அமைப்பு என்றவாறு பலதரப்பட்ட குரல்கள் எங்கள் பெண்கள் மத்தியிலிருந்து இப்போது வெளிவருவதை தினமும் எங்களால் கேட்கக் கூடியதாகவிருக்கின்றது. இதனால், "எங்கள் பெண்கள் எங்கே போகின்றார்கள்" என்ற கேள்வியும் எழுந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது இந்த நிலை தொடருமானால் "ஆண்களை வாழ விடுங்கள்" என்ற குரல் எழுப்பி, 'ஆண்கள் அமைப்பு' உருவாக வேண்டுமென்ற கோரிக்கையும் முன்வைக்கப்படும் கட்டம் உருவாகலாம். இவ் விடயம் சம்பந்தமாக ஆக்கபூர்வமான கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தகுதியானவை பிரசுரமாகும். சொந்தப் பெயர், பூரண முகவரியுடன் அனுப்பப்படல் வேண்டும்

## செயற்கரிய செய்தோர்

### பெருஞ்சேரல் இரும்பொறை

புலவர்கள் அரசர்களின் கொடை, வீரம், குண நலன்கள், அறவாழ்வு அனைத்தையும் புகழ்ந்து பாடினார்கள். அரசர்களும் புலவர் பெருமையை அறியத்தவறவில்லை.

பெரும் சேரவிரும்பொறை என்னும் அரசன் கொடையும், வீரமும், குணநலனும் மிக்கவன். தமிழ்ப் புலவர்களிடத்து அவன் வைத்திருந்த மதிப்புக்கு அளவே இல்லை. பதிற்றுப் பத்தில் எட்டாம்பத்தைப் பாடிய அரிசில் கிழார் என்னும் புலவரின் பாடல் அழகில் மயங்கிய இவன் புலவருக்கு அரசு முழுவதையும் கொடுத்தான். புலவர் இவனுடைய பெரும்பண்பை வியந்து அரசை அவனிடமே திருப்பக் கொடுத்துப் பரிசில் பெற்றுச் சென்றார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சேரவிரும்பொறையைக் காண மோசிகீரனார் என்னும் புலவர் சென்றார்.

அப்போது அரசன் அங்கு இல்லாமையால் அவன் வரவுக்காகக் காத்திருந்த புலவர் வெற்றிமுரசு வைக்கும் கட்டிலிற் படுத்து உறங்கி விட்டார்.

வெற்றிமுரசு வைக்கும் கட்டிலில் ஒருவர் உறங்குவது கொலைத்தண்டனைக்குரிய குற்றம். இதனை மோசிகீரனார் அறிந்திருக்கவில்லை

சேரவிரும்பொறை திரும்பிவரும்போது புலவர் கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்தார். புலவர் பெருமை அறிந்த அந்த அரசன் புலவர் நீண்டதூரம் நடந்தமையினால் சோர்ந்து படுத்திருப்பதைக் கண்டான் புலவருக்கு மேலும் வசதி செய்ய விரும்பிய அரசன் அங்கிருந்த சாமரம் எடுத்து வீசினான். புலவர் கண் விழித்தபோது சேரவிரும்பொறை சாமரம் வீசிக் கொண்டு நின்றான். புலவர் துடிதுடித்துப் போயினார். அரசனின் பெரும்பண்பைக் கண்ட அவர் கண்களில் நீர் பெருகியது.

"அரசே முரசு கட்டிலில் அறியாது உறங்கிய என்னை நீ வாளால் இரண்டு துண்டாகும்படி வெட்டாமல் விட்ட செயல் ஒன்றே நீ தமிழ் முழுதும் அறிந்தவன் என்பதற்குச் சான்றாகுமே. அத்துடன் அமையாது என்னை அணுகி உன் வலிமை பொருந்திய முழவுத்தோள் கொண்டு சாமரம் வீசினாயே அதற்கு என்ன காரணம்? இவ்வுலகில் புகழ் இல்லாதோர்க்கு உயர்ந்த உலகம் இல்லை என்று சான்றோர் கூறியதைக் கேட்டுவிட்டாயா" என்றார்.

## தரிசனம்

தமிழர்கள் வாழ்வின் மங்களகரமான வைபவங்களில் நாதஸ்வர–தவில் இசை மிக முக்கியமான இடத்தை வகித்து வருகின்றது.

இந்துக் கோவில்களின் அன்றாட நித்திய நைமித்திய பூஜைகள் முதல், வருடாந்த மகோற்சவங்கள் வரையான சகல உற்சவங்களிலும் நாதஸ்வர–தவில் இசை இரண்டறக் கலந்தது.

திருமணங்கள், ருது சோபன வைபவங்கள் போன்ற எந்தவொரு இல்ல மங்கல நிகழ்வும் நாதஸ்வர இசையின்றி நடைபெறுவதில்லை.

இந்த வகையில் நாதஸ்வர தவில் வாத்தியக் கலைஞர்கள் தமிழர் தம் வாழ்வில் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றனர்.

இருப்பினும் இவர்கள் இதுவரை சரியான வகையில் கௌரவிக்கப்பட்டதாக குறிப்பிட்டு கூற முடியாது.

ஆங்காங்கே, அவ்வப்போது. சில நாதஸ்வர, தவில் வித்துவான்கள் பட்டமளித்து, பாராட்டு வழங்கி, பதக்கம் சூட்டிக் கௌரவமளிக்கப்பட்டுள்ளனர்.

நாதஸ்வர கலாநிதி என். கே. பத்மநாதனுக்கு ஸ்ரீலங்கா அரசு 'கலாசூரிய' பட்டமளித்துக் கௌரவமளித்தது. இவைகளைத் தவிர குறிப்பிடத்தக்கவாறு வேறு எந்த கௌரவிப்பு நிகழ்ச்சிகளும் நடந்ததாகத் தெரியவில்லை.

இதற்கென சரியான அமைப்புக்கள் எம் மத்தியில் இல்லாமையும், கலைஞர்களுக்கிடையே நிலவி வரும் வித்துவக் காய்ச்சலும் கலைஞர்கள் சரியாகக் கௌரவிக்கப்படாமைக்கு முக்கிய காரணிகள்.

இவைகள் அனைத்தையும் முறியடிக்கும் வகையில் நாதஸ்வர வாரிதிகள், கானமூர்த்தி– பஞ்சமூர்த்தி சகோதரர்கள் இன்று கௌரவிக்கப்படுவது ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகும்.

இந்த அபூர்வ சகோதரர்களின் நாதஸ்வர கான இணையின் வெள்ளிவிழா இன்று பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறுவது மகிழ்வு தருகின்றது.

கலைஞர்களை வாழும் போதே கௌரவிக்கும் தமிழர் பண்பின் ஒரு வெற்றிக் கல் இன்றைய வைபவம்.

நகமும் தசையும் போல, மலரும் மணமும் போல சகோதரர்கள் நீடுழி வாழஇறைவனை இறைஞ்சுவோம்.

**எஸ். திருச்செல்வம்**
பிரதம ஆசிரியர்
முரசொலி / வாரமுரசொலி

# தமிழில் தோற்றம்பெறும் "ஹைக்கூ" கவிதை வடிவம்

ஜப்பானிய கவிதை வடிவங்களிலேயே மிகவும் சிறந்ததெனப் போற்றப்படும் 'ஹைக்கூ' கவிதை வடிவம் இப்போது தமிழ்க்கவிதையிலும் தோற்றம் பெற்றுவிட்டது. மூன்று வரிகளையே உடைய இக் கவிதை 'சின்னதாகவிருக்கும் பெரிய அற்புதம்' எனப் போற்றப்படுகின்றது.

ஜப்பானில் இரண்டுவிதமான கவிதை வடிவங்கள் அதிகமாக கையாளப்பட்டு வருகின்றன ஒன்று 'தன்கா' எனப்படும் குறுங்கவிதை வடிவம் மற்றது 'சோக்கா' எனப்படும் நீளமான வடிவம். 'தன்கா' எனப்படுகின்ற குறுங் கவிதையிலிருந்து தோன்றிய வடிவமே 'ஹைக்கூ' ஆகும். இக்கவிதை வடிவம் பதினாறும் நூற்றாண்டில் அரும்பி பரிணமம் பெற்று பதினெட்டாம் நூற்றாண்டில் சிறந்ததொரு பரிமாணத்தைப் பெற்றது.

வரிகள் குறைவாக இருப்பதால் வாசிப்பவரின் கவனத்தை இக்கவிதை நன்றாக ஈர்த்துக் கொள்கிறது. வாசிக்கும் நேரத்தைவிட அதிலுள்ள அர்த்தங்களைச் சிந்தித்துக் கண்டுபிடிப்பதிலும், அது சொல்லும் காட்சியினைக் கற்பனை செய்து பார்ப்பதிலும் வாசகன் அதிநேரம் செலவிட வேண்டியிருக்கும். அந்தத் தேடுதலில்தான் சுவையும், சுகமும் கலந்திருக்கும். தமிழ் கவிதைக்கு முதன் முதல் அதிர்ச்சி வைத்தியம் செய்தவரும், கவிதையில் பல சோதனை முயற்சிகள் செய்து புதுமையைப் புகுத்தியவருமான மகாகவி பாரதி சுருங்கச்சொல்லி விளங்க வைக்கும் இந்த ஜப்பானிய கவிதை வடிவத்தை மிகவும் விரும்பியவராக இருந்திருக்கிறார் ஜப்பானிய கவிஞரொருவரின் வீட்டுக்குள் திருடன் ஒருவன் புகுந்து அனைத்துப் பொருட்களையும் திருடிக்கொண்டு செல்கிறான். அதை 'ஹைக்கூ' வடிவத்தில் இப்படிச் சொல்கிறார் அந்தக் கவிஞர்.

'திருடன் வந்து திருடிச் சென்றான்
அவன் விட்டுச் சென்றது–
ஜன்னலும் நிலவும்'

இந்த முறையைத் தாம் மிகவும் விரும்புவதாகப் பாரதி கட்டுரையொன்றில் குறிப்பிட்டிருக்கின்றார். அத்தோடு ஜப்பானிய கவிஞரான 'யோகுல் நாச்சி' என்பவரைப் பற்றியும் பாரதி தமது கட்டுரையில் எழுதியிருக்கிறார்.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக பல போராட்டங்களையும், கண்டனப்புயலையும் கடந்து தற்போது சமகாலப் பிரச்சனைகளையும், யதார்த்தங்களையும், போராட்ட உணர்வுகளையும் மக்கள் முன் கொண்டு வந்து மக்கள் மனங்களில் முக்கிய இடத்தினைப் பெற்றிருக்கும் ஊடகமான புதுக் கவிதையினையே கவிதையல்ல என இன்னும் வாதாடிக் கொண்டிருக்கும் மரபுக்காரர்கள் தமிழ் 'ஹைக்கூ' கவிதை வடிவத்தினைக் கண்டு என்ன சொல்லப் போகின்றார்களோ என்ற கேள்வி ஒருபுறமிருக்க– இக்கவிதையைக் கையாள்

**விவேக்**

பவர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும் என்பது இங்கு குறிப்பிட வேண்டிய ஒன்றாகவுள்ளது. இன்று நாம் புதுக்கவிதை எழுதுகிறோம். புதிய புதிய இளைஞர்கள் புதுக்கவிஞர்களாக முயன்றுகொண்டிருக்கின்றனர்.

உவமைகளை வித்தியாகமாக, புதுமையாகக் கையாள வேண்டுமென்பது ஒன்று இரண்டாவது- சொல்லப் போகும் செய்தியை வாசிப்பவரின் இதயத்தில் சுருக்கென்று தைக்கும் வகையில் சொல்வது. மூன்றாவது சொற்களை நளினமாக சுருக்கமாக கையாள்வது. இம்மூன்றும் புதுக் கவிதைக்கு அவசியம் என்பதை புதியவர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும். இம்மூன்றில் ஒரு அம்சமேனும் இல்லாவிட்டால் அது புதுக்கவிதையாகாது. இதே போல் 'ஹைக்கூ' வடிவக் கவிதை எழுதுபவர்களும் அம் முறையை நன்கு விளங்கி வைத்துக் கொண்டு எழுதுதல் அவசியம்.

கவிஞர் அமுதபாரதி எழுதிய 'புள்ளிப்பூக்கள்' என்ற தொகுப்பே தமிழில் முதன் முதலாக வந்த 'ஹைக்கூ' வடிவ கவிதைத் தொகுப்பாகும். அதைத் தொடர்ந்து தமிழகத்தில் மேலும் சில தொகுப்புகள் வெளிவந்துள்ளன 'புள்ளிப்பூக்கள்' தொகுப்பில் பேராசிரியரும் கவிஞருமான அப்துல்ரகுமான் அவர்கள் 'ஹைக்கூ' கவிதையைப்பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''உலகக்கவிதை வடிவங்களிலேயே எனக்கு மிகவும் பிடித்தது 'ஹைக்கூ' தான் அது சின்னதாக இருக்கும் பெரிய அற்புதம். வடிவத்தைப் பார்த்தால் வாமனன் மாதிரி; ஆனால், 'தாரை' வார்த்தாலோ விசுக்கென்று விண்ணுக்கும் மண்ணுக்குமாய் விசுவரூபம் எடுத்து மூவுலகையும் அளந்து விடுகிறது திரிவிக்கிரமன்மாதிரி 'ஹைக்கூ' வுக்கும் மூன்றடிதான் 'ஹைக்கூ' வைப் படிப்பதற்கு முன் 'வார்த்தை' ஒரு கவிதையின்மூன்று அடிகளையும் ஒரே மூச்சில் அள்ளி விழுங்கி விடாதீர்கள். முதல் இரண்டு அடிகளையும் மெதுவாகப் படித்து நிறுத்தி கொள்ள வேண்டும். பிறகுதான் மூன்றாவது அடியைப் படிக்க வேண்டும்.

எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்லிக் கொண்டிருப்பது கவிதையின் வேலை இல்லை; கட்டுரையின் வேலை. நம்மில் பலருக்கு இந்த கலைத் தத்துவம் புரிவதில்லை. ஒரு காட்சியை காட்டுவதோடு 'ஹைக்கூ' வின் வேலை முடிந்து விடுகிறது. அதில் உள்ள அர்த்தங்களைத் தோண்டி இறைத்துக்கொள்வது வாசகனின் பொறுப்பு. இந்த வகையில் வாசகனும் கவிதையில் ஒரு கூட்டுப்படைப்பாளி.

'அழகிய பொருட்கள் நிலையற்றவை. ஆனால் அழகு என்ற தத்துவம் நிரந்தரமானது! இந்த ஸென் (zen) மதத் தத்துவத்தையும் 'ஹைகூ' கலைப் பொட்டலம் கட்டி கையில் கொடுத்து விடுகிறது.

ஒரு காட்சியில் வாழ்க்கையின் அற்புதமான தரிசனத்தை, தத்துவ உண்மையின் மின்னல் வீச்சை ஏற்படுத்துகிற வல்லமை ஒவ்வொரு 'ஹைக்கூ' வுக்கும் உண்டு''

புள்ளிப்பூக்கள் தொகுப்பில் வந்த 'ஹைக்கூ' வடிவ கவிதைகள் சில—

**வெற்றி**

முன்னால் நீண்டது முள்
சோர்வற்ற எனக்காகபின்னால்
பூத்தது பூ

**யார்?**

அந்தக்காட்டில்
எந்த மூங்கில்
புல்லாங்குழல்?

**அசையும் அழகு**

புள்ளியிட்ட வானைவிட
மானே கவர்ச்சி
மான் ஓடும்

**இரவில்**

நில வென்ன மேற்பார்வையோ
வானம் விழ திருக்க
எத்தனை நட்சத்திர ஆணிகள்!

# இலக்கியத்தில் இனியதொடர்

## 'மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவன்'

**புலவர் ம.பார்வதிநாதசிவம்**

தமிழுக்குப் பெருமை தேடித் தரும் இலக்கியங்களில் ஒன்று புறநானூறு, சங்க இலக்கியமாகிய இந் நூல் அரசரது கொடையையும வீரத்தையும் பாடுவதையே நோக்கமாகக் கொண்டது. அதே நேரத்தில் மனித வாழ்வுக்கு வேண்டிய பண்புமணிகள் அனைத்தையும் வழங்கும் களஞ்சியமாகவும் உள்ளது.

'மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவன்' என்பது புறநானூற்றில் ஒரு தொடர் ஒரு பெண்ணை அறிமுகம் செய்யும் போது இவள் இவனுடைய மனைவி என்று அறிமுகம் செய்வது உலக வழக்கம். ஆனால் ஆடவன் ஒருவனைப் பொது இடத்தில் அறிமுகம் செய்யும் போது இவன் யார் தெரியுமா? இவன்தான் இத்தகைய சிறப்பு வாய்ந்த பெண்ணின் கணவன் என்று பெண்ணுக்கு முதன்மை கொடுப்பதில்லை.

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்ற திருவள்ளுவரும் சங்கப்புலவர்கள் பலரும் பெண்ணுக்குச் சிறப்புக் கொடுத்திருக்கிறார்கள் 'வண்டார் கூந்தல் ஒண்டொடி கணவ' என்றும் 'சுடர் நுதல் புரையோன் கணவ' என்றும் பெண்ணைச் சிறப்பித்துப் பாடிய பாடல்கள் சங்க இலக்கியத்தில் உண்டு.

இரவு நேரத்தில் ஒருவர் வீட்டிற்குள் செல்கிறார். சுவரில் அழகிய சித்திரங்கள் தீட்டப் பெற்றிருந்தன. வேலைப்பாடமைந்த சிற்பங்கள் அங்கு இருந்தன. அலங்கரிக்கப் பெற்ற மேசைகளும்– மேசைகளுக்கு அருகில் பெரும் தொகையான நூல்களைக் கொண்ட அலுமாரிகளும் இருந்தன ஆனால் விளக்கு மட்டும் வீட்டில் இல்லை. இதனால் வீட்டுகுட் சென்றவருக்கு இவை இருந்தும் இல்லாதவையாகவே இருந்தன.

ஒருவனிடம் செல்வம் இருக்கலாம், கல்வி இருக்கலாம், வேறுபலவும் இருக்கலாம். ஆனால் மாட்சிமைப்பட்ட மனைவி வீட்டில் இல்லையானால் இவையனைத்தும் விளக்கில்லாத வீட்டில் இருந்த பொருள்கள் போலவே தெரியாமற் போய்விடும். உள்ளதென் இல்லவள் மாணாக்கடை என்றார் வள்ளுவர் எனவே தான் மனைவியை மனைக்கு விளக்கு என்றார் புறநானூற்றுப் புலவர்.

பெண் கவிதை போன்றவள். கவிதை உருவத்தினாலும் அழகியதாக இருக்க வேண்டும் அது கொண்டிருக்கும் கருத்தினாலும் அழகியதாக இருக்க வேண்டும். பெண்ணும் உருவத்தினாலும் அழகியவளாய் இருத்தல் வேண்டும். உள்ளத்தினாலும் அழகியவளாய் இருத்தல் வேண்டும். எனினும் உள்ள அழகுக்கே புறநானூற்றுப் புலவர் முதலிடம் கொடுக்கிறார்.

அதனால் உள்ள அழகை முதலிற் குறிப்பிட்டு மனையில் ஒளிசெய்யும் விளக்குப் போல மாட்சிமைப்பட்ட குணநலன்களால் புகழைச் செய்பவள் என்று கூறி உருவ அழகும் உடையாள் என்பதை வாணுதல் என்றார். புலவர் சுருக்கமாக ஒளி பொருந்திய நெற்றி என்று கூறினாலும் அவரது கவி உள்ளம் ஒளி பொருந்திய நெற்றிக்கு ஏற்ற முகம், விழி, இதழ்கள், கூந்தல், உடல் அமைப்பு அனைத்தையுமே குறிப்பிடுகிறது.

கணவன் எத்தகைய சிறப்புடையவனாயினும், விருந்தை உபசரிக்கவும், கருத்தொருமித்து ஆதரவுபடும் இன்பம் எய்தவும் தித்திக்கும் மழலை மொழி கேட்கவும் மனைக்கு விளக்காகிய வாணுதல் இல்லையெனின் வாழ்க்கை இலட்சியமற்றதாகிவிடும்.

எனவே மனைக்கு விளக்காகிய வாணுதல் என்பது மனையில் ஒளி செய்யும் விளக்குப் போல மாட்சிமைப்பட்ட குணநலன்களால் புகழாகிய ஒளியைச் செய்யும் அக அழகும் அதே நேரத்தில் கணவனின் கண்ணுக்கு இனியளாகிய புற அழகும் உடையாள் எனப் பொருள் தருகின்றது.

# இந்த வாரம் உங்கள் பலன்

**யாழ்சோதிடர். ச. அரியநாயகம்**

**26-03-1989—01-04-1989**

**மேடம்:** சத்துருபயம், இடமாற்றம், பெரியோர் உதவி, வாகன மாற்றம், திடீர் பிரயாணம், சகோதரர் வழி உதவி, வணிகர் கடற்றொழில் செய்வோர் லாபமடைவர்.

**இடபம்:** புத்திரசுகம், புகழ் தேடிவரும், எண்ணிய கருமம் நடக்கும், வெளியூர் பயணம், தடைப்பட்ட பணம் கிடைக்கும், தூரதேசம் போனவர் வருகை,

**மிதுனம்:** மங்களகாரிய நிச்சயம், விருந்துபசாரம், பெரியோரால் நன்மை, மனை மகிழ்ச்சி, பெற்றோர் வழி உதவி, வாகன லாபம்.

**கடகம்:** புகழ் தேடி வரும், கல்வியால் நன்மை, காதலர் ஒன்று சேருவர், வாகன மாற்றம், வணிகர் கடற்றொழிலாளர், இயந்திரத்தொழிலாளர் லாபமடைவர்.

**சிங்கம்:** வாக்கு வசிகரம், இராஜயோகம், எண்ணியது நடக்கும், மனை பூமி வந்து சேரும், புத்திரசுகம், கலைஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள்.

**கன்னி.** காதலர்களுக்கு மகிழ்ச்சியானவாரம். எண்ணியது நடக்கும், புண்ணியவழிபாடு, புகழ்தேடிவரும், புதுத் தொழில், தூரத்துச் செய்தியால் நன்மை.

**துலாம்:** வாகன லாபம், பெரியோர் ஆசி, புகழ் தேடி வரும், எண்ணியது நடக்கும், புண்ணிய வழிபாடு, வாகன லாபம், வணிகர், கடற்றொழிலாளர் நன்மை பெறுவர்.

**விருச்சிகம்:** பெண்களால் பகை, பெரியோராசி, வாகன மாற்றம், வணிகர்கள் லாபம், தூரதேசம் போனவர் வருகை, மாமன் வழி உதவி, புதுத் தொழில்.

**தனுசு:** மனை யலங்காரம், விவாக நிச்சயம், மன நிறைவு, பிரயாணசுகம், திடீர் புகழ் மூத்தசகோதரர் உதவி, பெரியோர் ஆசி.

**மகரம்:** எண்ணியது நடக்காது. வாகன நஷ்டம் தொழில் தடை, பெரியோர் ஆசி, கல்வியால் புகழ், பிரிந்த காதலர் ஒன்று சேருவர்.

**கும்பம்:** வாகன சுகம், பெண் வழி உதவி. புதுத் தொழில், பணவரவு. இளைய சகோதரர்வழி உதவி, வணிகர் கடற்றொழிலாளர், இயந்திரத் தொழிலாளர் நன்மையடைவர்.

**மீனம்:** கல்வியால்தொழில், காதலர் ஒன்று சேருவர். விவாக நிச்சயம், வெளியூர் செய்தியால் நன்மை. விருந்து பசாரம், இளைய சகோதரர், மாமன்வழி உதவி.

O/L MATHS
ஆசிரியர்
T. தயாபரன் B.S.c
கந்தர் மடம் யாழ்ப்பாணம்
01736

## மாதம் ஒரு பிறமொழிக்கதை




**கென்யக் கதை**
**ங்குகி வா தியோங்கோ**
**ஆங்கிலம் வழி தமிழில்**
**சாந்தன்**

அவனால் தூங்க முடியவில்லை. சுவர் வெடிப்புகளுடே குடிசையினுள் நுழைந்த நிலவின் மெல்லிய ஒளிக்கோடுகள் தரையில் ஆங்காங்கு விழுந்திருந்தன எல்லாவற்றையும் விழுங்கிக் கொண்டு விட்ட இந்த இருளை வெறுமனே வெறித்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. வையாகிக்கு யாரிடமாவது பேச வேண்டும் போலிருந்தது. தன் நம்பிக்கைகளை, ஆசைகளை, அவாக்களை யாரிடமாவது பகிர்ந்து கொள்ள வேண்டும். படிப்பு பற்றிய அவன் திட்டங்களை; நிச்சயத்திற்கும் விடுதலைக்குமான அவன் தேடலை.

இரண்டு தடவைகள் தன் தாயிடஞ் சொல்ல முயற்சித்தான். ஏதோ அவளைக் கேட்க வேண்டும் போல. ஆனால் ஒவ்வொரு தரமும் அவள் முன் நின்று அவளின் நடுங்கும் குரலைக் கேட்ட போது, தான் ஏதோ சம்பந்தமில்லாதவற்றைப் பேசிக் கொண்டிருப்பதாய் உணர்ந்தான், தாயின் குரல் நடுக்கம் அவனுள் சஞ்சலங்களைத் தூண்டி விட்டது.

எதற்குத்தான் அவன் அவாக்கொள்கிறான்? இந்த அவதி? அவனுக்கே தெரியவில்லை. என்றாலும் அந்த நம்பிக்கைகளும் ஆசைகளும் அவனை அலைக்கழித்தன. அவன் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து வந்தன. ஒரு சிறுவனாக, தந்தையின் மந்தைகளை மலையிலும் வெளியிலும் மேய்த்த காலங்களிலிருந்தே அவன் நாடி நின்றது எதை? விளக்க முடியுமா?

அவன் யோசிக்க விரும்பவில்லை ஆனால் நினைவுகள் பெருகி வந்து இதயத்தை நிரப்பின. வாழ்வின் விசித்திரமான அத்தியாயங்கள் எல்லாம் அவன் முன் விரிந்தன. சிறிய வயதிலேயே இறந்து போய்விட்ட தங்கைதான் அவனுக்கு நெருக்கமான ஒரே சிவனாயிருந்தாள். அவன் அவளை மிக நேசித்தான்– அந்த நெருக்கத்திற்கு நேசந்தான் பெயர் என்றால் அவன் இந்த மலைகளிலும் அவற்றின் மக்களிலும் வைத்ததும் நேசந்தான் ஆனால் அவன் தங்கையிடமிருந்து பெற்றதை அவர்களிடம் பெற முடியவில்லை.

அவன் அப்போது மிகவும் சின்னவன். அது இந்த மறுபிறப்பிற்கு எவ்வளவோ காலங்களுக்கு முன். தெளிவில்லாதிருந்தாலுங் கூட, இவையெல்லாந் தனக்கு இன்னமும் நினைவிருக்கிறதே என அவன் வியந்தான். தங்கை இறந்து போனாள். அந்த இறப்பு இவ்வுலகின் எல்லாவற்றினதும் முடிவுமாய்ப் போனது. புதைத்த பின் மனிதர்கள் ஆவிகளாகி விடுகிறார்கள், வையாகி தன் தங்கை ஆவியாவிருப்பாளா என யோசித்தான் ஒரு சிறிய நல்ல ஆவி. அவள் தன்னைக் கண்காணித்துக் கொண்டிருப்பாளா? அவன் சுற்றிலும் பார்த்தான். பயந்துதான். ஒரு குற்ற உணர்வு உறுத்தியது.

வையாகிக்கு இப்படியான நம்பிக்கைகளிருந்தன மலைவாழ் மக்கள் நம்பியவற்றை அவனும் நம்பினான். இவற்றை மாற்றக் கூடியதாக சிறியானு மிஷனினால் பெரிதாக ஒன்றும் செய்து விட முடியவில்லை. வெள்ளை மனிதர்களின் போக்கைப் பார்த்து அவன் பழுதாகி விடக்கூடாது என்று தந்தை எச்சரித்திருந்தார் என்றாலும் சிலநேரங்களில் அவன் இவற்றைச் சிந்திக்கவே செய்தான் மலையில் அவன் பரப்ப விழையும் கல்வி அவர்களைப் பழுதாக்காதா?

அவன் தூங்க விரும்பினான். படுக்கையில் புரண்டான். கண்களை மூடியவாறு நினைவுகளை விரட்ட முயன்றான். வெள்ளையரின் வருகையில் விளக்க முடியாததொன்று இருப்பதாக அவனுக்குப் பட்டது. மலையில் எதிர்ப்பிருக்கவில்லை, இப்போது தங்கள்செல்வாக்கைப் பரப்பியபடி உள்நாடெல்லாம் ஊடுருவி விட்டார்கள். அந்தச் செல்வாக்கு பாதகமானதாயிருக்கலாம், அதன் உச்சத்தில் தான் முதொனி செத்துப் போனது. தெளிவைத் தேடித் தன்னுள் நிகழ்ந்த போரில் பின் வாங்கா நிலையில்தான் அவள் இறந்தாள். அவள் இறந்ததன் பின் எல்லாம் மோசமாய்த்தான் விட்டன. பலருக்கும் உள்ள போராட்டந்தானென்றாலும், முதொனியின் உறுதி எத்தனை பேருக்குண்டு?

தான் எங்கிருக்கிறேனென வையாகி வியந்தான். அவன் எல்லாவற்றையும் சீர்படுத்தி இருளில் ஒளியேற்ற முயற்சிக்கிறானா அல்லது அவனும் குழப்பத்தின் பங்காளிதானா? அவன் தங்கை, முதொனி இன்னும் எத்தனையோ பேர் அவன் மனதில் நிழலாடினார்கள் நிலையில்லா நிழல்கள். தோன்றியும் மறைந்தும் இணைந்தும் அழிந்தும் ஆடும் நிழல்கள்.

திடீரென ஒரு கணம் ஒன்றுமே இல்லாத மாதிரி அவன் வாழ்வு முழுவதுமே வெளித்து விட்டது போல இருந்தது. ஒரு கணந்தான் மீண்டும் அந்த மூட்டம் சூழ்ந்து கொண்டது தெளிவல்லாத; இருள், வாழ்வின் வடிவமே மறைந்து விட்ட மாதிரி அவன் அசையாது கிடந்தான்–கொஞ்சம் பயந்து எதை நினைப்பதென்றோ எப்படித் தப்புவதென்றோ தெரியாதிருந்தது.

மூட்டம் மெல்ல மெல்ல விலகத் தொடங்கிற்று. உருவங்கள் தெளிவுறலாயின. உருப்பெற்ற வடிவம் கலைந்து அழியுமென வையாகி எதிர்பார்த்தான் ஆனால் அப்படியாகவில்லை உருவம் தெளிவாய்த்திடமாயிருந்தது. அவனால் அதை விரட்ட முடியவில்லை. உற்றுப் பார்த்த போது அது அவனைக்கவர்ந்தது. அது ஒரு பெண்ணின் வடிவம்–யார் என்று அவனால் மட்டுக்கட்ட முடியவில்லை.

அதுவுங் கூட மறைந்தே விட்டது. இன்னும் அவனால் தூங்க இயலவில்லை. படுக்கையில் உட்கார்ந்து இருளை வெறிப்பதில் பயன் என்ன? அவன் கட்டிலிலிருந்து எழுந்து நின்ற போது அது கிறீச்சிட்டது. உடுப்புக்களை மாட்டிக் கொண்டான்; நிதானமாக ஆனால் தன் காதலியைச் சந்திக்கப் போகிற ஒருவனைப் போல லேசாக உள்ளார்ந்த பரபரப்புடன். குடிசைக்கு வெளியே வந்தான். மக்குயுவிற்குப் போய் கமாவையோ அல்லது தன்னைப் புரிந்து கொள்ளக் கூடிய–தான் பேசக் கூடிய–யாரோ ஒருவரையோ சந்திக்கலாமென்றிருந்தது.

நிலவும் விழித்திருந்தது; பளபளப்பாய், பிரகாசமாய் முழு மலையும் சூழலும் அந்த வெண்மையைப் போர்த்திருந்தன. பகலில் சிறிதாயும் சாதாரணமாயும்தெரிந்த எல்லாம் இப்போது இரக்கமும் பயமும் அளிப்பனவாய் மாறி ஒரு பரலோக தோற்றங் கொண்டிருந்தன. மலையில் சப்தங்கள் கேட்கின்றனவா என்று வையாகி கவனித்தான். ஆனால் அமைதியாயிருந்தது. செடிகளுக்கும் மரங்களுக்கும் ஊடே போகும்போது அந்த அமைதியும் நிலவொளியும் இணைந்து பிரமாண்டமுற்று உயிர் கொண்டதாய் அவன் உணர்ந்தான். முழு சிருஷ்டியையும் தன் தங்கை தந்தையின் ஆவிகளையும் உணர வையாகிக்கு விருப்பமாயிருந்தது; தயக்கமாயுமிருந்தது

அவனுள் அடங்கி இருந்த உணர்வு இப்போது தலையெடுத்ததில் யாருடனாவது பேச வேண்டுமென்ற ஆவல் ஏறியது. நிலவொளி தொடக் கூடியதாயும் மென்மையாயும் ஆகிவிட்டதாய் உணர்ந்தான். அதன் மந்திரத்தில் அவன் மயக்குண்டான். வையாகி, கைகளை அகலவிரித்து நிலவை நெஞ்சோடு தழுவ முயன்றான். நிலா, தன்னைச் செவி மடுப்பதாய் உணர்ந்ததில் அதன் குளிர் மூச்சைத் தன் அருகில் உணர அவன் ஆவலுற்றான். உடம்பின் தசை நார்கள் யாவும் விறுவிறுத்து விறைப்புக் கொண்டன.

மீண்டும் அவனிடம் பரபரப்புக் குடிகொண்டது; அந்த அவாவும். அவை முட்டி நிரம்பியதில் தன்னுள் ஏதோஒன்று வெடித்துவிடும் போலுணர்ந்தான். தேடல் தேடல். வாழ்வு முழுவதுமே திருப்தியுறாத் தேடல்தானா? வெறுமை எனபதால் விட்டு துரத்தப்படுகிற ஓட்டந்தானா வாழ்க்கை என்பது? வையாகிக்குப் புரியவில்லை. ஒருவருக்குமே ஒரு போதும் புரிந்திருக்கவும் மாட்டாது போலும். அது அப்படித்தான்.

வையாகி, தன் இனத்தாரின் சேவைக்காக அர்ப்பணிக்கப் பட்டிருந்தான் தன்னைப் பற்றி நினைவில்லாமல். தினசரி மற்றவர்களுக்காகவே கவலைப்பட்டு வாழ்கிறவாழ்க்கை. ஆனால், அது கூட பிரயோசனமில்லாததாயும் நிறைவற்றதாயும் பட்டது மக்களுக்காக தன்னை வாட்டிக்கொள்ள இப்போதெல்லாம் அவன் முயன்றான். என்றாலும் இந்த விஷயம் அவனைத் துரத்தவே செய்கிறது.

இருந்தாற்போல, தன் தேவை எதுவெனத்தான் உணர்ந்ததாய் அவன் நினைத்தான் சுதந்திரம் அவன் ஓட விரும்பினான்; விரைவாய் எங்காவது அல்லது ஒரு ஆவி போல எங்கென்றில்லாமல் எங்கும் சுற்றி சுழல. அப்போது அவனுக்கு எல்லாம் இருக்கும்—ஒவ்வொரு பூவும் ஒவ்வொரு மரமும். அல்லது அவன் நிலவுக்குக் கூடப் பறக்கலாம். அது சாத்தியமாகவே பட்டது. வையாகி தன் கண்களை வான் நோக்கி உயர்த்தினான் அவன் இதயம் வேட்கை கொண்டது. எனினும் அவனால் ஓடமுடியவில்லை; பறக்கவும் முடியவில்லை. ●

---

# கோழிச் சண்டை

**வளவை வளவன்**

பேட்டுக்கோழி ஒன்று தனியே நின்று குப்பையைக் கிளறி மேய்ந்தது தனிமையிலும் இனிமையை அநுபவித்த போதும் ஏதோ ஒரு குறை இருப்பதை அது உணர்ந்து கொண்டது போல் சற்றுத் தடித்த குரலில் கொக்கரித்து நின்றது.

தனித்தனி அறைகளாகப் பிரிக்கப்பட்டு இருந்த கோழிக் கூட்டினுள் அறைக்கொன்றுகப் பல சேவல்கள் தனித்துவமாக அடைக்கப்பட்டிருந்தன. பேட்டுக் கோழியைக் கண்டவுடன் சேவலொன்று கொக்கரித்துச் சிறகடித்துக் கூவியது. ஏனைய சேவல்கள் எல்லாம் கெளுவாகத் தலையைத் திருப்பிக் கெயபிரப் பார்வையை சிதறின.

பேட்டுக்கோழி மெல்லக் கூட்டின் பக்கம் சென்றது

கூடுகளினுள்ளே நின்றவாறு ஒவ்வொரு சேவலும் ஆர்ப்பரித்தன.

ஊடலோ காதலோ ஒரு உணர்வு வெளிப்பட்டு விட்டதைப் புரிந்து கொண்ட பேடு, சிரித்து விட்டுச் சொன்னது, பாவம் உங்கள் சிறையை நீங்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை என்று

சேவல்கள் ராஜ பாட்டையில் நடந்து ஆர்ப்பரித்தன. வெளியே வந்தால் நீங்கள் விருப்பியபடி எவ்வளவு சந்தோஷத்தை எல்லாம் அநுபவிக்க முடியும் இப்படிச் சிறையில் கிடப்பதால் நீங்கள் என்னத்தைச் சாதித்து விடப் போகின்றீர்களோ? என்று ஒரு கேள்வியைப் போட்டது பேடு.

உன்னைப் போல் குப்பையைக் கிளறச் சொல்கிறாயா? எமக்கு இங்கே என்ன குறை? நமது எஜமான் எல்லா விதமான உணவுகளையும் தந்து எமக்கு நல்ல உடற்பயிற்சிகளையுமல்லவா கற்றுக் கொடுக்கின்றார் என்றது சேவல்களில் ஒன்று.

'மனிதர்கள் கரகோஷம் செய்து மகிழும் அளவிற்கு நாங்கள் மலயுத்த வீரர்களாக மாற்றப்பட்டிருப்பது எஜமானலன்றி எமது இனத தவராலலல' என்றது ஒன்னொரு சேவல்.

தொட்டால் சுடுவது நெருப்பு என்றால் தொட்டுப் பார்கக நினைப்பவர்களைப் போல் நீங்கள் பேசுகின்றீர்கள் உங்கள் புத்தி மழுங்கிப் போய் விட்டது. சந்திக்க வேண்டிய வேளை சந்திக்கின்றேன் என்று கூறிப் பிரிந்தது பேடு.

அன்று அதிகாலையிலிருந்தே நல்ல உணவு சேவல்களுக்குப் போடப்பட்டு தண்ணீரும் பானங் கலந்து வைத்து விட்டு காத்திருந்தான் எஜமானன்.

உண்டு குடித்து மிக உஷாராகச் சேவல்கள் இருந்த போது எஜமான். அவைகளைப் பிடித்துக்கால்களைக் கட்டிப் போடடு எங்கோ எடுத்துச் சென்றான்.

கோவில் வீதியில் அவை சாக்கொன்றினாலான சிறு கூட்டிற்குள் விடப்பட்டன. இரண்டு சேவல்களை வெளியே ஒன்றின் தலையை மற்றதின் தலையில் மோதி வைத்துத் தரையில் விட்டான் எஜமானன்.

சேவல்கள் இரண்டும் சண்டையிடத் தொடங்கின. கொத்துவதும் பாய்ந்து தாக்குவதும் பிசிர் முட்களால் பிடுங்குப்படுவதுமாகக் கோழிச் சண்டை நடைபெற்றது

பார்வையாளர்கள் சில்லறைகளை வீசிக் கொண்டிருந்தனர்

சேவல் சோடிகள் மாற்றப்பட்டு சண்டை தொடர்ந்த போது எஜமானின் உண்டியல் நிறைந்து கொண்டே இருந்தது

பூவிலும் தலையிலும், அலகிலும் கொத்திப் பிடுங்கி ஒவ்வொரு சேவலிலும் இரத்தக் காயங்கள். சேவல்கள் களைத்துப் போய் படுத்துக்கொண்ட போது எஜமான் அவற்றை எடுத்துக் கொண்டு வீடடிற்குச் சென்று கூட்டினுள் மீண்டும் அடைத்து உணவிட்டான்.

அந்த உணவை உண்ண முடியாது களைத்துப்போய் கிடந்தனசேவல்கள்.

பேடு வந்து எப்படித் தெரிகிறது? என் வார்த்தைகளா? உங்கள் எஜமானின் கருணையா என்று கேட்டது.

சேவல்கள் களைப்பு மாற உண்ணத் தொடங்கின உனக்குப் பைத்தியமா? பார் நமக்கு என்ன விதமான உணவைத் தந்திருக்கிறார் நமது எஜமான் என்று பேசிக் கொண்டன சேவல்கள்

நாளைய சண்டையில் உங்களை விட்டு உழைக்க இப்போது உணவிட்டிருக்கிறான் அவனது கருணை உங்களிலல்ல தனது பணப் பெட்டியில் தான் என்றது பேடு.

குப்பை கிளறும் உன் பொறாமை எமக்குப் புரிகிறது நீ போய் விடு என்று அதட்டின சேவல்கள்.

பேடு நிதானந்தவறாமலும் அமைதியாகவும் சொல்லியது. மாற்றான் சிறையை சோலை என்று நம்பிவிட்டீர்கள் என் சொல எங்கே விளங்கப்போகிறது உங்களை மோத விட்டு விட்டு அந்த எஜமான் தன் வாழ்வைவளப்படுத்திக் கொள்ளட்டும். நான் வருகிறேன் என்று சொல்லிவிட்டு சென்று மறைந்தது

நாளைய சண்டைக்கான தயாரிப்பில் எஜமான் ஈடுபடத் தயாராகக் கூண்டருகே வந்து நின்றார்.

தூரத்தே பேட்டுக் கோழி எதையோ முணு முணுப்பது கேட்டுக் கொண்டே இருக்கிறது. ●

## வைத்திய கலசம்

# புற்றுநோயை ஆரம்பத்தில் கண்டறியுங்கள்

டாக்டர் எம். கே. முருகானந்தன் M. B. B. S. (Cey)

- புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்தால், அதனைப் பூரணமாகக் குணப்படுத்த முடியுமாதலால் ஒவ்வொருவரும் புற்றுநோயின் ஆரம்ப அறிகுறிகளை அறிந்து வைத்திருப்பது அவசியம். இவ் அறிகுறிகள் இருப்பதால் மாத்திரம் ஒருவருக்கு புற்றுநோயென நிச்சயப்படுத்த முடியாது. சில தருணங்களில் இவை ஆபத்தற்ற சாதாரண நோய்களின் அறிகுறிகளாக் கூட இருக்கலாம். எப்படியிருப்பினும் இத்தகைய அறிகுறிகளைக் கண்டால் வைத்திய ஆலோசனை பெறுங்கள்.
- உடலின் எந்தப் பகுதியிலும் திடீரென ஏதாவது கட்டி தோன்றுவதும், முன்பே இருந்த கட்டி திடீரென வளர்ச்சியடைவதும் சந்தேகத்திற்கு உரியதாகும். சில புற்றுநோய்க் கட்டிகள் மெதுவாகவும் வளரக் கூடும். எதற்கும் வைத்திய ஆலோசனை பெறுவது நல்லது. மார்பில் தோன்றும் எந்தக் கட்டியையும், அலட்சியப்படுத்தாது வைத்தியரிடம் உடனடியாகவே செல்லுங்கள்.
- மிகச் சாதாரண அறிகுறியான பசியின்மையும் உடல் மெலிதலும் புற்றுநோயின் ஆரம்ப அறிகுறியாக இருக்கலாம். இவை சாதாரண காய்ச்சல், மனப்பதற்றம், மனவிரக்தி போன்ற பல்வேறு ஆபத்தற்ற நோய்களின் அறிகுறியாக இருக்கலாம, அல்லது கசநோய், புற்றுநோய், எயிட்ஸ், நீரிழிவு போன்ற கடுமையான நோய்களின் அறிகுறியாகவும் இருக்கலாம். எனவே தாமதிக்காது வைத்திய ஆலோசனை பெறுங்கள்.
- விரைவில் ஆறுத புண்களும் சந்தேகத்திற்குரியன உடலின் எந்தப் பகுதியிலாவது தோன்றிய புண் இரண்டு மூன்று வாரங்களுக்குள் மாறுவிட்டால் கட்டாயம் வைத்திய ஆலோசனை பெறுங்கள். புற்றுநோயால் மாத்திரமன்றி நீரிழிவு, கசநோய், எக்ஸிமா, நாளப்புடைப்பு (varicose veins) போன்ற வேறு நோய்களாலும் புண்கள் குணமாவது தாமதமாகலாம். வாயினுள் தோன்றும் புண்கள் (முக்கியமாக வலியின்றித் தோன்றுபவை) மிகவும் சந்தேகத்திற்குரியவை.
- உட்கொள்ளும் உணவை இலகுவாக உள்ளே செல்லாது நெஞ்சினில் தடைப்படுவது ஒரு முக்கிய அறிகுறி. ஆரம்பத்தில் சோறு, பிட்டு போன்ற கடினமான உணவுகளுக்கு, இடையிடையே இத்தடை ஏற்படும். பின் தொடர்ச்சியாகவும், இறுதியில் நீராகாரத்திற்குக் கூடத் தடை ஏற்படும். வேறு சில அரிய நோய்களாலும் இத்தகைய தடைகள் எற்படலாம். எனினும் அது களப்புற்று நோயால் (carcinoma of oesophagus) ஏற்படவில்லை என்பதை வைத்திய ஆலோசனை மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- உணவுச் சமிபாடின்மை பலரும் அடிக்கடி எதிர்நோககும் ஒரு பிரச்சனை. தவருன உணவுகளை உண்ணுதல், தவருன நேரங்களில் உண்ணுதல், மனேவயல் சிககல்கள் போன்றவை காரணமாகலாம். சிலர் வாழ்நாள் முழுவதும் கூட சமிபாடின்மை, வயிற்றுப் பொருமல் போன்றவற்றுடன் வாழ்கிருர்கள். ஆனல் ஒருவருக்கு திடீரென சமிபாடின்மை தோன்றுவதோ, அல்லது முன்பே இருந்தது அடிக்கடி ஏற்படுவதோ, குறைந்த அளவு உணவுடனேயே வயிறு நிரம்புவதோ, உணவின் பின் வயிற்றில் அசெளகரியமாக இருப்பதோ இரப்பை புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம்.
- குரல் கரகரப்பு, குரல் அடைத்தல் போன்ற அறிகுறிகளும் பல காரணங்களால் ஏற்படலாம இவ் அறிகுறிகள் இருவாரங்களுக்கு மேல் நீடித்தாலோ, வரவர அதிகரித்துக் கொண்டு போனலோ தொண்டை நோய் வைத்தியரை அணுகுவது உசிதமானது
- நீடித்த இருமல், ஆஸ்த்மா, கசநோய், புரொன்கைடிஸ், போன்ற நோய்களால் மாத்திரமின்றி சுவாசப்பை (நுரையீரல்) அல்லது குரல்வளைப் புற்றுநோயாலும் ஏற்படலாம் என்பதை மனதிலிருத்துங்கள்
- திடீரெனத் தோன்றும் மலச்சிக்கல், மலச்சிக்கலும வயிற்ருேட்டமும் மாறிமாறித் தோன்றுதல், போன்றவை பெருங்குடல் புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம். மலவாயிலால் இரத்தம் வருவது, சிறுநீரில் இரத்தம் கலந்திருப்பது, இரத்தவாந்தி எடுப்பது போன்ற அறிகுறிகளும் சிலவேளைகளில் புற்றுநோய்களால் ஏற்படலாம். மாதவிலக்கின் அளவிலும், இடைவெளியிலும் திடீரென ஏற்படும மாற்றங்களும் அலட்சியப்படுத்தக் கூடாதவை. உடலுறவின் பின் பெண் உறுப்பால் இரத்தப் பெருக்கு ஏற்படுவது உடனடி வைத்திய ஆலோசனை பெறவேண்டிய மிக முக்கிய அறிகுறியாகும்; ஏனெனில் அது கர்ப்பப்பை புற்றுநோயால் ஏற்படலாம்.
- செங்கண்மாரி அல்லது மஞ்சட்காமாலை பெரும்பாலும் ஈரல் அழற்சியாலேயே ஏற்படுகிறது. ஆனல் செங்கண்மாரி இரண்டு வாரங்களுக்கு மேல் நீடித்தால் அது ஈரல் சிதைவு, பித்தப்பை, பித்தக்குழாய் ஆகியவற்றில் கட்டி, கல் அடைசல் போன்றவையும் காரணமாகலாம் சதையத்தில் (Pancreas) ஏற்படும் புற்றுநோய் ஒரு முக்கிய காரணம். எனவே நீடித்த செங்கண்மாரிக்கு நாட்டு வைத்தியத்தில் காலந் தாழ்த்தாது தகுந்த, பொறுப்பான வைத்திய ஆலோசனை பெறுங்கள்.




## இதய இன்பம்

1269 ஆம் ஆண்டு ஜான் பாலியல் என்பவன் மரணம் அடைந்தான். உயிராக நேசித்த கணவனுடைய இருதயத்தை விட்டுப் பிரிந்திருக்க அவனுடைய மனைவி விரும்பவில்லை. அதனல், அவள் அவனுடைய உடலிலிருந்த இருதயத்தை மட்டும் பிரித்து எடுத்து ஒரு தந்தப் பேழையில் வைத்து அதனை எப்போதும் தன்னுடனேயே வைத்துக் கொண்டிருந்தாள்.

அவ்வாறு வைத்துக் கொண்டிருந்த அவள் தான் இறந்ததும், தன் இருதயத்தோடு அதையும் வைத்துப் புதைக்கும்படி கேட்டுக் கொண்டாள். தான் இருக்கும் போதே தனக்கு ஒரு சமாதியையும் கட்டிக் கொண்டாள்

அந்தச் சமாதிக்கு 'இதய இன்பம்' என்று பெயர். இதிலிருந்து தான் தன் காதலியைக் குறிக்கும் 'ஸ்வீட் ஹார்ட்' என்னும் பெயர் வழங்கத் தொடங்கியது.

## ஐந்திணையும் வாழ்வும்

சங்ககாலத் தமிழ் மக்கள் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற ஐவகை இயற்கைப் பிரிவுகளோடு ஒன்றுபட்டு வாழ்க்கை நடத்தியுள்ளனர். மலையும் மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சிநிலத்தில் வாழும் மக்கள் தேனெடுத்து, பூப்பறித்து, விலங்குகளை வேட்டையாடி மகிழ்வர்.

குறிஞ்சிக்கும், முல்லைக்கும் இடையில் உள்ள இடம் மழையின்மையால் பாலைநிலம் எனப்பட்டது அங்கு வாழ்வோர் வழிச் செல்வோரைத் தாக்கிப் பொருள் பறித்து வாழ்க்கை நடத்துவர்

காடும், காடுசார்ந்த இடமுமாகிய முல்லைநிலத்தில் வாழ்பவர்கள் ஆனிரைகளை மேய்த்து அவற்றின் பயனை நுகர்வார்கள்.

வயலும், வயல்சார்ந்த இடமுமாகிய மருதநிலத்தில் வாழ்பவர்கள் உழவு தொழிலைச் செய்வார்கள். இவர்கள் பேரூர், மூதூர்களில் வளம்பட வாழ்வோராவர்.

கடலும், கடல்சார்ந்த இடமுமாகிய நெய்தல் நிலத்தில் வாழ்பவர்கள் மீன்பிடித்து மீன்உலர்த்தி உப்புஉண்டாக்கி அதன் வருவாயில் வாழ்பவர்கள்.

## கனவுகளும் கண் அசைவும்

நீங்கள் உறங்கும்போது உங்கள் கண்கள் மேலும் கீழும் அசைந்தால் நீங்கள் எங்கோ ஏறிச் செல்வது போல் கனவு காண்கிறீர்கள். உங்கள் கண்கள் பக்கவாட்டில் அசைந்தால் நீங்கள் கனவு நிகழ்ச்சிகளை நேராக நோக்குகிறீர்கள்.

பொதுவாக, இரவில் ஒருவன் ஏறக்குறைய இரண்டு மணி நேரத்தைக் கனவு காண்பதில் கழிக்கிருன் ஆனல் கனவு எவ்வளவு நீளமாக இருந்தபோதிலும் விழித்தவுடன் அதை அவனல் நினைவு கூர இயலாது. ஐந்து நிமிடங்களுக்குள் விழித்தெழுந்தால் கனவின் பெரும்பகுதி நினைவிருக்கும், பதினைந்து நிமிடங்கள் கழித்து எழுந்தால் கனவில் சிறு பகுதியே நினைவிருக்கும்.

## மூளையின் ஆற்றல்

ஒருவனுடைய மூளை ஆற்றலில் பெரும்பகுதி பரம்பரையைப் பொறுத்து அமைகின்றது. என்ருலும் எந்த மனிதனும் முயற்சி எடுத்துக் கொண்டால் தன் மூளைஆற்றலை நூற்றுக்குப் பத்துப் பங்கு வெகு எளிதாக உயர்த்திக் கொள்ளலாம் என்பது உளநூல் வல்லுநர் பலரின் கொள்கை.

சில ஆண்டுகளுக்குள் தம் மூளை ஆற்றலை இரு மடங்காகப் பெருக்கிக் கொண்ட சிலரும் உலகில் இருக்கிருர்கள்.

பரம்பரையாக வரும் மூளை ஆற்றல் தந்தையிடமிருந்தும் வரலாம். தாயிடமிருந்தும் வரலாம்.

ஆகவே தந்தையின் மூளை ஆற்றலே மகனுக்கும் இருக்கும் என்று சொல்ல முடியாது. ஆண் குழந்தையானலும் பெண் குழந்தையானலும் அதற்குத் தன் தாயின் மூளை ஆற்றலையும் தந்தையின் மூளையாற்றலையும் விட மிகுதியான மூளையாற்றலும் இருக்கும்.

மூளைஆற்றல் என்பது சிக்கலான ஒரு கலப்புப் பொருள்; குறைந்தது அதில் ஏழு அடங்கியுள்ளன எண்களைப் பயன்படுத்தும் ஆற்றல், சொல்லாற்றல், கற்பனை ஆற்றல், நினைவாற்றல் விரைந்த நோக்கு, செல்லால் ஆராய்தல், பொதுத் தொடர்புகளை உணர்தல் ஆகிய ஏழும் கூடிய மூளை ஆற்றலாக அமைகின்றது.

## தமிழ் மொழியில் வழங்கும் தேலுங்குச் சொற்கள்

| தெலுங்கு | தமிழ் |
|---|---|
| ஆஸ்தி | செல்வம் |
| எக்கச்சக்கம் | மிகுதி |
| கச்சிதமாக | ஒழுங்காக |
| பண்டிகை | பெருநாள் |
| தாராளமாக | மிகுதியாக |
| சொச்சம் | மிச்சம் |
| அப்பட்டம் | கலப்பில்லாதது |
| கெட்டியாச | உறுதியாக |
| ஏராளம் | மிகுதி |

## சோவியத்யூனியன்கல்வித்தரம்

சோவியத் யூனியனில் எட்டுக்கோடிகோடி தொழிலாளர்களும் ஒரு கோடி 32லட்சம் விவசாயிகளுமிருக்கின்றனர். நால்வரில்ஒருவர் மூளையுழைப்பாளியாய் இருக்கின்ருர் 1970 குடிசன மதிப்பீட்டை 1979 உடன்ஒப்பிடுபபோது அறிவுஜீவிகளின்அதிகரிப்பு சோவியத் – உஸ்பெகிஸ்தானிலேயே கூடுதலாக (55 சத விகிதம்) இருப்பதுதெரிகின்றது.

கல்வி பெற்றவர்களை அதிகமாகக் கொண்டது ஆர்மேனியக்குடியரசு (இக்குடியரசுதான் கடந்த ஆண்டு இறுதியில் பூகம்பத்தினல் பாதிக்கப்பட்டது) ஆர்மேனியா பொருளாதாரத் துறையில் பணியாற்றுபவர்களில் ஆயிரத்துக்கு891பேர் உயர்தர அல்லது நடுத்தரக் கல்வி பெற்றிருக்கின்றனர் முழு சோ. சோ. கு. ஒ விலும் இது 833 ஆகும். பால்ரீதியில் பெண்கள் 829, ஆண்கள் 837. 1939 அளவில் இது பெண்களுக்குச் சாதகமாயிருக்கவில்லை 60 ஆண்டுகளுக்கு முன் இதை ஒப்பிடவே முடியாதிருந்தது. மத்திய ஆசியாவையோ, கஸாக்கிஸ்தானையோஎடுத்துக் கொண்டால் உயர்தரக்கல்வி கற்ற பெண்களே இருக்கவில்லை.

1981–1982 கல்வியாண்டில் மாணவர் தொகை 10 கோடி 55லட்சம் இதில் உயர்கல்வி மற்றும் விசேட நடுத்தரக் கல்வி கற்றமாணவர்கள் 99லட்சமாகும். ஆண்டு தோறும் 4 கோடி 25 லட்சம் பேர் தொழில் ஞானம் பெறுகிருர்கள். அல்லது நகரத்தில் தாம் தொழில் செய்யுமிடங்களிலோ கூட்டுப் பண்ணைகளிலோதமது தொழில் நுட்ப அறிவை பெருக்கிக் கொள்கின்றனர்

தேசத்தில் 4393 விசேட நடுத்தரக் கல்விக் கூட்டங்களும், 891 உயர்தரக் கல்வி ஸ்தாபனங்களுமிருக்கின்றன. கல்லூரி, மற்றும் பல்கலைக்கழக மாணவர் தொகை 5 284, 000.

உலகிலேயே அதிக வாசகர்களைக் கொண்டது சோவியத் யூனியனே இங்கு 132,400 பொது நூலகங்களுள்ளன. 329,000 நூலகங்களில் விஞ்ஞான மாணவர், தொழில் நுட்பம்போன்றவை தொடர்பாக 470 கோடி தொகுதி நூல்கள் உள்ளன. இதில் வீடுகளில் உள்ள நூல்கள் அடங்கா.

'சோவியத்நாடு'விலிருந்து
கதிர் மாணிக்கம்

# காலங்கள் மாறும்



கே.எஸ்.ஆனந்தன்

சமூக நவீனம்

## அத்தியாயம் எட்டு

தாயின் அந்தியேட்டிக் கிரியைகள் எல்லாம் வெகு சிறப்பாக கொண்டாடிய மாசிலாமணி மறுநாள் நடத்திய வீட்டுக்கிரியையும் செய்து முடித்த பின்பு ஒய்வாகப் படுத்திருந்தான். அவனுடைய உறவினர்கள் எல்லாம் திரும்பிச் சென்று விட்டனர். மூத்த சகோதரியும் புருஷன் ஆறுமுகமும் அவனுக்குப் பக்கத்திலிருந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தனர். ஞானம் வீட்டுக்குள் ஏதோ செய்து கொண்டிருந்தாள். இதுதான் சமயம் என சரசுவதியாகவே கதையை ஆரம்பித்தாள்.

''ஏன்டா தம்பி ஞானம் ஏதும் சொன்னவளே''

''எதைப்பற்றி?''

''அருண்மொழியின்ரை விசயமாய்''

''அவள் பரீட்சை எழுதப் போய்விட்டாள். முடிவு தெரிந்ததும் அது பற்றிக் கதைக்கலாம். என்று கூறி விட்டேன்.''

''தம்பி, இது உங்கடை உள்வீட்டு விசயம். நான் சொல்லுறன் என்று தப்பா எடுக்காதே.எனக்கென்னமோ இவளவை போடுற திட்டம் பிடிக்கல்லே'' என்றார் ஆறுமுகம்.

''உங்களுக்கு எதுதான் பிடிக்குது. பேசாமல் வாயை கிளறுமலிருங்கோவன்'' எரிந்து விழுந்தாள் சரசுவதி.

''அக்கா அவரோடை ஏன் கோபிக்கிறாய் அத்தான் சொல்லுறதிலும் நியாயம் இருக்கு''

''என்ன பெரிய நியாயத்தை சொல்லிவிட்டார். இவருக்கு எங்கடை ஆட்களென்றால் எப்பவும் ஒருஇது''

''ஏன்டி நீ துள்ளுகிறாய் அந்தப்பிள்ளை பட்டப்படிப்பு படிச்ச ஆசிரியை இவள் அவனுக்கு எந்த விதத்தில் பொருத்தம் சொல்லு பார்க்கலாம். வெளிநாட்டுக்குப் போய் கால்சட்டை சேட்டுப் போட்டிட்டால் நீங்கள் என்னவோ பெரிய இஞ்சினியர் என்ற நினைப்பே படிச்ச பிள்ளைக்கு குறைஞ்சது பிழை விடாமல் எழுதத் தெரிந்த ஒருவனுவது வேண்டாம்''

''இஞ்சை பாருங்கோ உங்களை எலலாம் எழுதத் தெரிந்தனீங்கள் என்றுதான் எனக்கு எடுத்தவையாக்கும். நானும் ஓ எல் ஐந்து பாடம் பாஸ் பண்ணிப்போட்டுத்தான் உங்களோடை மாரடிக்கிறன்''

''கேளடா மாசிலாமணி இவளின்ரை கதையை நீ ஓ. எல் பாஸ்பண்ணவில்லை ஐந்து பாடம்தான் பாஸ் பண்ணினுய். அனேகமா எல்லாரும் இப்படித்தான் படிச்சிட்டு அடுப்பு ஊதினம். நீ நெசவுக்குத்தான் போனுய் என்னைக் கட்டிக்கிடடு வேலை செய்தியா? இல்லை, அந்தப் பெண் பட்டதாரி ஆசிரியையாய் படிப்பிக்கின்ற இடத்தில் உன்ரை புருஷன் என்ன தொழில்? என்ன படித்தவரென்றால் அவள் என்னடி சொல்வாள்? ஓ. எல். ஐந்து பாடம் என்று? சுருட்டுக் கொட்டிலென்று? பைத்தியக்காரி ஆசையும் அளவோட இருக்கணுமடி. நீ புரோக்கர் வேலை பார்க்காதே என்றுதான் சொல்லுறன்'' என்றான்.

சுருட்டுத் தொழிலாளி என்றாலும் ஆறுமுகம் சமுதாயத்தின் மேடு பள்ளங்களை அறிந்து பேசும் திறமைசாலியாக இருந்தார் அவர் கூறும் காரணங்கள் மற்றவர்களால் ஏற்ககூடியவை. ஒரு தலைப்பட்சமான முடிவுகளோடு தன் கட்சிக்காக வாதாடும் சட்டத்தரணி போலில்லாது வாதப்பிரதிவாதங்களை ஆராய்ந்து தீர்க்கும் நடுநிலை வாதியாக விளங்கும் அத்தான் ஆறுமுகத்தை மனதுக்குள் பாராட்டினுன் மாசிலாமணி. அக்காவோ தன்கொள்கையை வலுவாக்க முடியாத நிலையில் தத்தளிக்கின்றுள் என்பதையும் உணர்ந்த மாசிலாமணி இருவரையும் சமாதானப் படுத்த முயன்றுன்.

''அக்கா நானும் நீயும் விரும்பிச் செய்யுற காரியம் என்றால் பரவாயில்லை. அத்தான் சொன்ன மாதிரி அவள் படிச்சவள் தொழில் பார்க்கிறுள் நாங்கள் கேட்டு அவள் ஏதும் கூறிவிட்டால் எல்லோருக்கும் மனஸ்தாபம் இல்லையா? ஏன் அக்கா நீயே ஒரு நாளைச்கு அங்கே வாவன் இது பற்றி ஆவளோடை கதைத்துப் பாரன் அவள் இஷ்டப் பட்டால் நான் ஆயிரம் முறையும் சம்யதம் ஆனல் நானுக இதை தலையில் தூககிப் போட மாடடேன்'' என்றான்.

''பெட்டைக்கோழி கூவி விடியும் என்று நினைக்கிறியே மாசிலாமணி'' கிண்டலாக கேட்டார் ஆறுமுகம்.

''சரிதாண்டா தம்பி, நீயும் படிச்சவன் எண்டதை காட்டிப் போட்டாய். தைப் பொங்கலோட நான் வாறன். அவளும் அடுத்த கிழமையளவில் வாறுளாம்'' எள்றாள் சரசு.

ஒரு தொல்லை விட்டது என்று ஆயாசப் பெருமூச்சு விட்ட மாசிலாமணி படுக்கையை விட்டெழுந்தவன் ''அத்தான் புகையிலை இருந்தாத்தாருங்கோ சின்னனு ஒரு சுருட்டு பத்திப்பார்ப்பம் வாய் சவுக்களிக்குது'' என்றுன்.

''ஏன் கோடா போட்ட சுத்து இருக்குது தரட்டே''

''எனக்கு வேண்டாம் புகையிலை தாங்கோ''

''சரசு பாய் சுருட்டுக்குள் தலகணி உறைக்குள் நேற்று வாங்கின புகையிலை இருக்க வேணும் எடுத்துக் கொண்டு வந்து கொடு''என்று கூறவும் அவள் எழுந்து சென்றாள்.

டேய் மாசிலாமணி இவளவைக்கு நல்ல பச்சைமட்டை வெட்டி வாடடப்போட்டு விட்டு குறிவிழ அடிக்க வேணுமடா. அந்தப் பெட்டையை அந்தத் தறுதலைக்கு செய்யுற நேரம் சாப்பிட்டு விட்டு இப்படியே படிப்பிச்சுக் கொண்டு திரிந்தாலும் பரவாயில்லை. எதுக்கும் ஒரு தராதரம் வேண்டாம். அப்புறம் உன் இஷ்டம்''என்று மிக இரகசியமாகவே கூறினர்.

''அத்தான் என்ரை கஷ்ட காலம் நான் செய்த தவறுகள் இப்படி எல்லாம் மற்றவை கேட்கும் போது என்னுலை எதிர்த்துப் பேச முடியலே குற்றம் கேட்டாலும் நீங்கள் தான் எனக்கு உதவணும். அக்காவோடை நீங்களும் வாருங்கோ. தலை எழுத்துப்படி நடப்பது நடந்து திரட்டும்'' என்றான்.

அதற்கிடையில் சரசு வெளியே வர இருவரும் பேச்சை மாற்றி வேறு கதைகளில் திசை திருப்பிக் கொண்டனர்.

மேசை மீதிருந்த கடிதங்களை ஒவ்வொன்றுக பிரித்துப் படித்துக் கொண்டிருந்தான் ரகுவரன். ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மும் மொழிகளிலும் எழுதப்பட்டிருந்த கடிதங்கள், அவனுடைய நண்பர்களால் வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டிருந்த கடிதங்கள். அவற்றுள் அகமட் ஆங்கிலத்தில் எழுதிய கடிதத்தை ஒரு முறைக்கு பல முறை படித்து விட்டான் இடையில் அவன் உணர்ச்சி வசப்பட்டு எழுதியிருந்ததாலோ என்னவொ தமிழிலும் எழுதியிருந்தான், அதைப்படிக்கும் போது ரகுவின் உள்ளத்தில் பெரும் உவகை தோன்றினுலும் வேதனைப் படாமலிருக்க முடியவில்லை.

''ரகு நீ என் நண்பனுயிருந்தாலும் எனககு உபதேசம் செய்த குரு ஸ்தானத்தில் உன்னை தினம் தினம் நினைக்கின்றேன். எனக்காக என் படிப்புக்காகஎன் உயர்வுக்காக உழைத்துப் உழைத்து உருக்குலைந்து போன என் 'பபாதர்' இப்போ படுத்த படுக்கையில். என் குடும்பமே என்னை நம்பித்தான் வாழ்கிறது! ரகு நீ அன்று என்னை அப்படிக் குத்திக் காட்டிப் பேசியிருக்கா விட்டால் நான் படிப்பு முடிந்து இங்கே வந்து தொழில் பார்த்திருக்க முடியாது இடையில் வந்து என் தந்தையின் பிணத்தைத்தான் பார்த்திருப்பேன் உன் மனம் போல நீ வாழ இறைவன் உன்னை மேலும் உயர்த்தியே வைப்பான். அல்லாவின் அருள் உனக்குக் கிடைக்கப் பிராத்திக்கின்றேன்– அகமட்'

கடிதங்களை மடித்து வைக்கப்போனவன் கதவருகே நின்ற சந்திரிகாவைப் பார்த்து விட்டான், புன்னகைத்தவாறே என்ன? என்பது போலத் தலையாட்டினுன்.

''உள்ளே வரலாமா?''

''ஏன்?''

''கடிதத்தைப் படித்துக் கொண்டிருக்கும்போது உங்கள் முகத்தில் ஏற்பட்ட வேறுபாடான உணர்வுகளைக் கண்டு இது யாரோ எழுதிய.....''

''சொல்லேன் ஏன் இடையில் நிறுத்திவிட்டாய்?''

''லவ் லெட்டராயிருக்குமோ? என நினைத்தேன்''

''டோன் பி ஸில்லி. இப்படி என்னுடன் கதைப்பதாயிருந்தால் உள்ளே வரவேண்டாம் போயிடு'' என்றான்.

''போகட்டுமா?''

''போவேன்''

''ரகு''

''ம்''

''விளையாட்டுக்குக் கூட இப்படிப் பேசக்கூடாதா?''

''எனக்குப் பிடிக்காதவை எதையும் விளையாட்டுக்குக் கூடக் கதைக்கக் கூடாது.''

''ஓ ஜேஸ்''

''சரி வா உள்ளே'' என்று சிரித்தவன் ''அது சரி சந்திரி காலையிலிருந்து உன் தொல்லையில்லாமலிருந்தது. எங்கே போயிருந்தே? நான் தெரிஞ்சுக்கலாமா?''

''வை நொட்?''

''அப்புறம் ஏன் தயக்கம் சொல்லேன்?''

''ஷொப்பிங் போயிருந்தேன் டடி கூடவந்திருந்தார்''

''என்னையும் கூப்பிட்டிருக்கலாமே''

''வேண்டாம் வேண்டாம் என்றுதான் எதற்கும் சொல்வான் அவனைக் கூப்பிட வேண்டாம் என்று டடிதான் சொன்ஞர்.''

''நீ தான் சொல்லியிருப்பாய் டடி ஒரு போதும் அப்படிச் சொலலமாட்டாரே''

''சொல்லிவிட்டாரே''

''சரி போகட்டும் விடு நாளை மறுநாள் காலையிலேயே நான் புறப்படணும். அது வரையில் நானும் நீயும் மோதிக்காமலிருப்பதே நல்லம்.''

''வெரிகுட் நல்லபிள்ளை. சொன்ன வார்த்தைகளை காப்பாத்திக்கணும். இதோ ஒரு நிமிடம்'' என்று வெளியே சென்றவள் திரும்பி வரும் பொழுது ஒரு புதிய சூட்கேசுடன் வந்தாள்.

''என்ன நீயும் வாறியா?''

''நோ நோ இது எல்லாம் டடி வாங்கிக்கொடுத்தார். நான்தான் எல்லாம் செலெக்ட் பண்ணினேன்.'' என்று கூறி மேசைமீதிருந்து சூட்கேசை திறந்து ஒவ்வொன்றுக எடுத்து வெளியே வைத்தாள்.

''இந்தக் 'கலர்ஸ்' தான் நீங்கள் அனேகமாக யூஸ் பண்ணுறதாலே இதிலே மூன்று ஷேர்ட் மற்றவை ஒவ்வொன்னு' அவள் சொல்லிக் கொண்டே போனுள். அவன் எதுவும் பேசாமல் பார்த்துக் கொண்டே நின்றான்

''ரகு என்ன பேசாமல் நிற்கிறீங்கள் உங்கள் சுதந்திரத்தில் கூட தலையிட்டு விட்டேன் என்று?''

''இல்லை சந்திரி இதேபோல நான் வாங்கி வந்து உன்முன்னுலே வைத்துஇது பிடிச்சுதா? இது நல்லதா என்று எப்ப கேட்கப்போகின்றேனே அன்றுதான் என் உள்ளத்தில் உண்மையான மகிழ்ச்சி பொங்கி வழியும். அது பற்றித்தான் நினைத்துக் கொண்டு நிற்கிறேன்''

''இதை நீங்கள் சிறுமையாக நினைக்கிறீர்களா?''

''சந்திரி நான் அப்படி நினைக்கவேயில்லை. இப்படி ஒரு அன்புச் சூழ்நிலையில் வாழ என்ன தவம் செய்தேனே என்றுதான் ....''

''ரகு நீ எதை வேண்டுமானுலும் நினைத்துக் கொள். என்ன வேண்டுமானுலும் செய் ஆனல் என்றைக்கு நீங்கள் ஒரு ஜோடியோடு என் முன்னுல் வந்து நிற்கிறீர்களோ அன்றுதான் உங்களை 'அண்ணு' என்று அழைப்பேன்''

''இல்லையென்றால்''

''யூ. ஆர் ஏ சிமோல்போய் ரகு'' என்றாள்

''ஓகே, ஓகே அப்படியே இருந்திட்டுப்போறன்- இதே போல நானும் உனக்குச் சொல்லுறன் நீ ஒரு ஜோடியுடன் வந்து என்னை 'அண்ணு' என்று அழைத்த பின்புதான் நானும் உன்னை தங்கச்சி என்று அழைப்பேன். அது வரை நீ...போ நான்சொல்ல விரும்பலை '' என்றான்.

''ரகு உங்களை ஒன்று கேட்பேன் கோபிக்காமல் பதில் சொல்வீங்களா?''

''ம்''

''ம்' என்று கூறிவிட்டு எரிந்து விடுவீங்களே. நிட்சயமாக கோபிக்க மாட்டேன் என்று 'ப்பிரமிஸ்'' பண்ணுங்கோ'' என்று கையை நீட்டினுள்.

''ப்பிரமிஸ்'' என்றுன்.

''அருண்மொழியைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று அவள் கேட்ட போது அவனுக்கு சிரிக்கத்தான் முடிந்தது,

''என்ன சிரிப்பு அந்த ரீச்சரின் அழகு, குணம், அறிவு இவை யாவும் ஒரு பெண்ணிடமிருந்தால் அவளை ... நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?''

முன்னர் ஒரு நாள் அவன் மனதை உரைத்துப் பார்ப்பது போல ஒரு கேள்வி கேட்டிருந்தாள். அது நினைவுக்கு வரவே அவன் மீண்டும் சிரித்தான் அவன் மனதில் தன்னைப்பற்றி உயர்வான நினைவுகளை வளர்த்து வைத்துக் கொண்டுள்ளபோதும், தான் ஒரு பெண்ணை நினைத்திருக்க வேண்டும், அவளை மணம்புரிய வேண்டும், என்று எதிர்பார்க்கிறுளு? சராசரி மனிதர்கள் எல்லோருக்கும் ஏற்படக் கூடிய நினைவுகள், எதிர்பார்ப்புக்கள் ஏன் என்னிடமும் இருக்கக்கூடாது என்று அவன் நினைக்கிறுன்...

''சந்திரி, உன் கேள்வியின் நோக்கம்தான் என்ன?எனக்கு அதன் தாற்பரியம் புரியவில்லை காவியக் கதாநாயகிகள் போன்ற ஓர் அழகுள்ள இளம் பெண்ணைப் பார்த்தும் ரகு தன் நிலையிலிருந்தும் மாறுபட்டு நிற்கின்றுனே என நினைத்தியா? நான் உனக்கு ஒன்றுமட்டும் சொல்ல விரும்புகிறேன். நான் சந்தர்ப்பவாதியோ–சுயநல வாதியோ அல்லன், என்றைக்கும் ரகு ரகுதான் அந்தப் பெண்ணைப் பற்றி கேட்டியே அதனுல் நான் கோபப்படலை. அவள் அழகி, படித்தவள், தமிழ் பெண், அதற்காக புலவர்களைப்போன்றோ எழுத்தாளர்களைப் போன்றோ அவளது அங்கலாவண்யங்களை நான் வர்ணிக்க விரும்பவில்லை. இருந்தாலும்உன் திருப்திக்காகச்சொல்வதாயிருந்தால் கூட நானுகச் சொல்லவிரும்பவில்லை.

'ஏ ரோஸ் இஸ் ஏ ரோஸ். கோல்ட் பை வட் எவர்நேம், என்று ஷேக்ஸ்பியர் என்ற ஆங்கிலக் கவிஞன் கூறியதைத்தான் கூற முடியும் என்றான்.

''நீங்கள் மனித வர்க்கத்துக்கே வாய்ப்பில்லாதவர்கள் போங்க'' என்று கூறிவிட்டு வெளியேறினுன்.

(வளரும்)

தொடர் காவியம்

# காவேரி

காரை. செ. சுந்தரம்பிள்ளை

## நீயும் மனிதனா?

திங்க ளைப்பழிக் கும்முகச் செவ்விதள்
சீதனம் இவையென் றங்கு செப்புமுன்
எங்க ளின்தகு திக்கிது தங்கச்சி
எந்த மூலைக்கு; எள்ளிந கைத்தனர்
தங்கம் நூறு; டணம் பத்து லட்சம் நீ
தருகு வாயெனில் சம்மதம்; இல்லை யேல்
உங்க ளுக்கொத்தது வாற இடத்தினில்
ஒருவ னைத்தேர்ந்து கட்டிக்கொள் என்றனர்,

சலன மின்றி யக்காவேரி கூறுவாள்
தாயே நீங்கள் திருமணம் செய்வது
பழுதி லாதநற் பெண்ணையோ அல்லது
பார மானதோர் சீதன மூட்டையோ
பலவுரைத் தென்ன உங்கள் மகன்எனைப்
பற்று வேன்கரம் என்றனன்; ஆயினும்
கலகம் செய்திட வில்லையான் எங்களின்
காத லைமதித் தேற்றிடு வீர்என்றாள்.

பருவம் என்னும் பரப்பினில் தோன்றிடும்
பாசம் என்பது கானல்நீர் போன்றது
உருவ மாகத் தெரிந்திட்ட போதிலும்
உண்மை யில்அது உண்மையே அல்லவாம்
திருமணம் செய்யும் போதில் பெரியவர்
சிந்த னைப்படி செய்வதே நல்லதாம்
வருகி றோம்சொன்ன வாறு நடந்திடில்
வரவேற் கத்தயா ராக விருக்கிறோம்.

பதிலைக் கூட எதிர்பார்த் திடாதவர்
பக்கெனச் சென்று வாகனத் தேறினர்
மதிப டைத்த நற் காவேரி யானவள்
மாற்ற மொன்று முரையா திருந்தனள்
விதியெ னச்சொல்லி வாளா விருப்பது
விவேக மல்லவாம்; ஆகையி னால்உடன்
கதியெ னக்கென உள்ள அருணனைக்
கண்டு கேட்பதே நல்லதென் றெண்ணினள்.

அடுத்த நாட்காலை ஆவேச மாய்ச்சென்று
அருண னைக்கண்டு கோவென் றழுதனள்
கொடுத்த வாக்கை மறந்திட லாகுமா
கோதை என்னைத் துறந்திட லாகுமா
விடுத்து நீ செலலல் பாவமே யல்லவா
வேறெ வர்எனை ஏற்பர், முறையிதா?
கடுமை யான சினத்துடன் கேட்டனள்
கவலை யோடருண் கூறத் தொடங்கினன்.

கேட்ட வாறு நீ சீதனம் தந்திடில்
கிஞ்சித் தேனும் தடையில்லை என்கிறார்
போட்ட கோட்டினைத் தாண்டி யறிந்திலேன்
பொல்லா தார்எந்தன் பெற்றோர் பறந்தவர்
விட்டினை விட்டு நான்வரு வேனெனில்
வெட்டி யேகொலை செய்யினும் செய்குவர்
நாட்டினில் எந்த மூலை முடுக்கிலும்
நாமொ ளிப்பினும் தேடிப் புடைப்பரே.

அன்புக் காவேரி உந்தனை ஏமாற்றும்
அந்த எண்ணம் எனக்கில்லை ஆயினும்
என்தன் பெற்றோர் இருக்கும் வரையிலும்
எங்கள் எண்ண மிங்கீடேறு துண்மையே
உன்னை யன்றியான் வேறொரு மங்கையை
உள்ளத் தாலும் நினைக்கிலேன் நானிதை
யன்றி வேறெதும் இந்த நிலைமையில்
அறைந்தி டவிய லாதென்று கூறினன்.

ஆத்தி ரத்துடன் காவேரி கேட்டனள்
அருண னேயிதைக் கூறிட நீயும்தான்
காத்தி ருந்தனை யோஇந்த நாள்மட்டும்
காதல் செய்யத் தொடங்கும் பொழுதிலுன்
கோத்தி ரத்தின் குணம்தெரி யாதோ நீ
கூறும் பெற்றோர் மனந்தெரி யாதோஎச்
சாத்தி ரத்திலே பெண்களை ஏமாற்றச்
சாற்று துநீயும் ஆண்மகனோ வென்றாள்.

காவேரி ஒன்றை நீயும் புரிகிலாய்
காத லித்தது உண்மைதான் ஆயினும்
ஆவ லோடு வளர்த்த என் அன்னையை
அலட்சி யம்செய்ய என்னால் முடியலை
''நீவி ரும்பிய பெண்ணை மணந்திடில்
நிச்ச யம்மடி வேன்'' எனச் சொல்கிறாள்
சாவி லேஎந்தன் வாழ்வை அமைத்திடல்
சரியா யோசித்து ஓர்பதில் கூறுவாய்.

ஆண்கள் என்பவர் ஏமாற்றுப் பேர்களா
அரிவை யர்சிறு போகப் பொருட்களா
விண்க னவுகள் கண்டது மிச்சமா
வேத னைதுயர் என்பன எச்சமா
மாண்பி லாதவர் வாழும் சமூகத்தில்
மங்கை யர்காதல் மாயமான் என்பதா
நானு னைப்பொரு ளாக நினைத்தனே
நாண மேயிலாய் நீயும் மனிதனா?

(தொடரும்)

# தாழ்த்தப்பட்ட தமிழர்களின் கல்வி வளர்ச்சி

இந்த மண்ணிலே சிறப்புற வாழ்ந்து மறைந்தோரை நினைவு கூரும் முகமாக இலக்கிய நூல்கள், ஆய்வு நூல்கள் என்பனவற்றை வெளியிட்டு வைக்கும் முறைமை இன்று எமது மக்கள் மத்தியில் முளைவிட ஆரம்பித்திருக்கிறது இந் நல்முயற்சியானது நான் அறிந்தவரை இரசிகமணி கனகசெந்திநாதன் அவர்கள் அன்னாரின் புதல்வி பராசக்தி காலஞ் சென்றபோது, (1962-63) காலகட்டத்தில் ஈழத்துக் கவிஞர்கள் பலரது சுவைமிக்க கவிதைகள் பலவற்றைத் தொகுத்து,'ஈழத்துக் கவிமலர்கள்' என்னும் அரிய நூலாக வெளியிடப்பட்டதன் மூலம் கால்கோள் நாட்டப்பட்டது. தற்போது எழுத்தாளர் சொக்கன் அவர்கள் அவரை அணுகும் அன்பர்களின் பொருட்டு காலஞ்சென்றவர்களை நினைவு கூரும் வெளியீடுகளாக இலக்கிய நூல்களையும் ஆய்வு நூல்களையும் ஆக்கி அளித்து வருகின்றார்கள்.

அந்த வகையில் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் எம்.ஸி. சுப்பிரமணியம் அவர்களை நினைவு கூரும் முகமாக இன்று வெளிவந்திருக்கும் நூலே 'தாழ்த்தப்பட்ட தமிழர்களின் கல்வி வளர்ச்சி' என்னும் ஆய்வு நூலாகும். காலஞ்சென்ற ஒருவரை நினைவுகூரும் நோக்குடன் வெளிவரும் நூலின் பொருளுக்கும் காலஞ்சென்ற அந்த மனிதருக்கும் எத்தகைய இயைபினை அடிப்படையாகக் கொண்டு இதுவரை வெளிவந்த நூல்கள் அமைந்திருக்கின்றன என்பது நியாயமான ஒரு கேள்வி. ஆனால் அமரர் எம் ஸி சுப்பிரமணியம் அவர்களை நினைவு கூரும் இந்நூலானது அன்னாரின் வாழ்க்கை இலட்சியங்களுடனும் அன்னார் ஆற்றிய அரும்பணிகளுடனும் இயைந்ததாகவும் அவற்றை ஆய்வு அடிப்படையில் வெளிக்கொண்டு வருவதாகவும் காணப்படுகிறது. அது மாத்திரமன்றி இந்த ஆய்வினை அன்னாரின் புதல்வன் சந்திரபோஸ் அவர்கள் மேற்கொண்டுள்ளமை இதன் இன்னொரு சிறப்பு என்றும் கூறலாம். இத்தகைய ஒரு நூல் தமிழ் மக்கள் மத்தியில் வெளிவர வேண்டியதன் அவசியத்தினை நூலாசிரியர் சந்திரபோஸ் அவர்கள் 'நுழைவாயிலில்' கூறியுள்ள பின்வரும் கூற்றின் மூலம் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

'தாழ்த்தப்பட்ட தமிழர்களின் கல்வி வளர்ச்சி என்ற மகுடத்தின் கீழ் ஓர் ஆய்வினை மேற்கொள்ள முனைந்தபோது நீயே இதற்குத் தகுந்தவன் என வாழ்த்தியவர்கள் பலர். உனக்கு வேறு தலைப்புக்கள் கிடைக்கவில்லையா என்று தூற்றியவர்கள் சிலர். ஆயினும்

### நூலகம்

வாழ்த்தியோரின் வாழ்த்துக்களை உரமாகக் கொண்டு, தூற்றியவர்களின் கருத்துக்களை, கருத்து மோதல்களே அறிவு வளர்ச்சிக்கு அடிப்படைத் தத்துவமாகக் கொண்டு இவ்வாய்வினை விரிவாக மேற்கொள்ள வேண்டுமென்ற பேரவாவில் இறங்கினேன். ஆயினும் இவ் ஆய்வு பல்வேறுபட்ட காரணிகளினால் ஒரு சுருக்க வரலாறாகவே அமைந்துள்ளது.

மேற்குறிப்பிட்ட இக் கூற்றானது இத்தகைய ஓர் ஆய்வு நூலானது வெளிவருவதினை விரும்பாதவர்களும் எம் மத்தியில் இருந்துவருகின்றார்கள் என்பதினைத் தெட்டத்தெளிவாக உணர்த்துகின்றது என்பதினை நாம் உணர்ந்துகொள்ளலாம்.

தமிழ் மக்கள் பற்றிய ஆய்வுகள், செயற்றிட்டங்களை முன்வைக்கும் பொழுது, அடக்கி, ஒடுக்கப்பட்டதன் காரணமாக தமிழ் சமூகத்துக்குள்ளே பல்வேறு அம்சங்களில் மிகவும் பின்தங்கியவர்களாகவும் அதன்காரணமாக மாறுபட்ட பிரச்சனைகளைக் கொண்டவர்களாகவும் வாழ்ந்துகொண்டிருக்கும்தாழ்த்தப்பட்ட மக்களின்பால் எவரும் தமது கண்ணோட்டத்தினைச் செலுத்தியதில்லை. இவ்வாறு ஒதுக்கிவிட்டதன் மூலம் தாம் எடுத்துக்கொண்ட செயற்பாட்டினைச் சுலபமாக்கிக்கொண்டதுடன், இந்த மக்களின் பிரச்சனைகளையும், சிக்கல்களையும் வெளியுலகுக்குக் கொண்டு வருவதனைத் தவிர்த்து மேலும் மேலும்அடக்கு முறைக்குள்ளாக்கும் 'அரும்பணி'யினை மிகவும் சாதுரியமாகச் செய்து வந்திருக்கிறார்கள். அரசியல் அடிப்படையிலும், சமயம், கல்வி, தமிழ்மொழி சார்ந்த நோக்கிலும் தமிழர்களுக்குத் தொண்டாற்றிய பெரியார்கள் என்று உச்சிமேல் வைத்துப் போற்றப்படும் பெரியார்கள் இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களைத் தமிழர்களாகக் கணிக்காது ஒதுக்கிவந்திருக்கிறார்கள் என்பதே உண்மையான வரலாறு இந்த வரலாற்று உண்மையினை இந்த நூலுக்களித்துள்ள முன்னுரையில் கலாநிதி சபா-ஜெயராசா அவர்கள் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றார்;

தெணியான்

''இலங்கையிற் பல்வேறு கல்வி ஆணைக்குழுக்கள் காலத்துக்குக் காலம் நியமிக்கப்பட்டாலும், தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி மேம்பாட்டுக்கான உருப்படியான பூட்கைகளோ, பரிந்துரைகளோ, வறிதாகவே காணப்படுகின்றன என்ற மெய்மையைச் சுட்டிக்காட்டுவதும் தவறாக அமையமாட்டாது''.

கலாநிதி-சபா ஜெயராசா அவர்களின் மேற்குறிப்பிட்ட கூற்றே இந்த நூலின் அவசியத்தை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

இந்த நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் ''யார் இந்தத் தாழ்த்தப்பட்ட தமிழர்கள்'', ''கல்வி என்றால் என்ன? கல்வி யாருக்காக?'' '20 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் தாழ்த்தப்பட்ட தமிழர்களின் கல்வி நிலை' 20 ஆம் நூற்றாண்டில் தாழ்த்தப்பட்ட தமிழர்களின் கல்வி வளர்ச்சி' ''முடிவுரை'' என்னும் ஐந்து தலைப்புக்களில் இடம்பெற்றுள்ளன. தாழ்த்தப்பட்ட தமிழர்களின் கல்வி வளர்ச்சிக்காக அருந்தொண்டாற்றிய அமரர் எம். ஸி சுப்பிரமணியம் உட்படப் பல பெரியார்களின் சேவைகள் இவ்வாய்வு நூலிற் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தப் பெரியார்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்கு இடையூறாகச் செயற்பட்ட சக்திகளின் நடவடிக்கைகளையும் இந்த ஆய்வுக்கு உட்படுத்தி இருந்தால், தமிழ்ச் சமூகம் பற்றிய சுவாரசியமான பல தகவல்கள் வெளிவந்திருக்குமென்று நான் கருதுகிறேன். அத்துடன் கல்விப்பெறுபேற்றினை அடிப்படை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் இத்தகைய ஆய்வுகள் எதிர்கொள்ள வேண்டியதாக இருக்கும் பல சிக்கல்களிலிருந்து விடுபட்டு, சுதந்திரமான ஓர் ஆய்வு முயற்சியினை மேற்கொள்ளும்போது கிட்டுகின்ற பெறுமானங்கள் மேலும்பலவாக இருக்கும் போலவும் தோன்றுகின்றது. நூலாசிரியர் சந்திரபோஸ் அவர்கள் அடக்கத்துடன் கூறியிருக்கும் ''சுருக்க வரலாறாகவே'' இந்

[12-ம் பக்கம் பார்க்க]

## காவேரியில் கடந்தவாரம் தவறிய பகுதி

### "தீவினை பழுத்தால் ஆவது மிதுவோ?"

என்ற வரிக்குப் பின்னர் வரவேண்டியவை

### அபஸ்வரம்

நாட்கள் ஓடிக் கழியத் தொடங்கின
நங்கை யுமொரு வாறு தெளிந்தனள்
ஆட்க ளோடு கலந்து பழகிட
அத்துடன் தொழில் தன்னைப் புரிந்திட
வாட்ட மென்பது மெல்லப் பறந்தது
வாழ்க்கை யானது சற்றுப் புரிந்தது
பூட்டி லாதவோர் வங்கிப் பணம்என
பெண்மை யுள்ளது என்ப துணர்ந்தனள்

எனக்கு மோரெதிர் கால முளததை
ஏற்ற வண்ண மமைத்த லவசியம்
தனித்து வாழ்தல் உறுதி யிலையெனத்
தையல் எண்ணினள்;காதல் அருணனை
இனிக்கும் வாழ்வை அமைத்திட வேண்டினள்
ஏன வசரம் என்றவன், பின்னர்தன்
மனக்கி டக்கையைப் பெற்றோர்க் குரைத்தொரு
மாதத் துக்குள் மணப்பன்யான் என்றனன்

இரண்டு வாரம் கழிந்த பின்னரொரு
'லான்சர்' கார்இவள் வீட்டின் முன்நின்றது
திரண்டு ருண்டு கொழுத்த வடிவுடன்
சேயி ழைமார் இருவர் இறங்கினர்
வரண்ட பாலை வனமென நின்றஅவ்
வஞ்சி வீட்டை அடைந்தா ரிளைப்புடன்
மருண்ட தாயவள் வாவென் றழைத்தனள்
மங்கைமார் படியேறி அமர்ந்தனர்.

# மனிதன் உயிர்த்தெழுகிறான்

● வாகரை வாணன் ●

குருதி நீரில்
அடிக்கடி
குளித்தாலும்
காய்ந்து கிடக்கும்
கற்பாறை அது

'மண்டை ஓடு
எனும் பெயர்
அதற்கு
மகா பொருத்தம்
அங்கே தான்–
சமூக விரோதிகளின்
சாவோலைகள்
கிழிக்கப்படுகின்றன

'பாறை'யை நோக்கி
பார்க்கப் பரிதாபம்
ஒரு பரிசுத்தவாளனின்
இறுதிப் பயணம்
ஆரம்பமாகிறது

கத்தியால் கீறப்பட்ட
கனிந்த பழம் போல
குருதி அபிஷேகத்திற்குக்
குறைவில்லை

முத்து மகுடம்
புனைய வேண்டிய
தலையில்
முள் முடி–
முகத்தாமரை
இன்னும்
சிவக்கின்றது

கடைசி நேரத்தில்......
பழகிய ஒருவன்
காலை வாரிவிட
மற்றவர்கள்
காணமற் போகின்றனர்.

தண்ணிழல் சொரியும்
சோலை
தனி மரமாகின்றது
தங்கம்
வெள்ளிக் காசாகத்
தரம்
குறைக்கப்படுகிறது.

அன்பின்
அடையாளம் தான்
முத்தம்
ஆனால், அது
ஆளை விற்கும்
சின்னமாக
ஆக்கப்படுகின்றது

அரசன் ஒருவன்
அடிமையாக்கப்படுகின்றான்

சிங்கம் ஒன்று
சிறு முயல்கள்
நரியிடம்
சிக்கித் தவிக்கின்றது

ஊராளும்
உதவாக்கரைகள் முன்
அவர் ஓர்
உதைபந்து
உருட்டி
விளையாடப்படுகின்றார்.

மனத்தை
ஆடையால்
மறைக்க
முடியுமென
நினைக்கும்
மத குருக்களுக்கு
அவர்
கனத்த இடி;
கைக்குண்டு.

வெடி தங்கள்
தலை மீது
விழ்ந்து விடுமோ
என்றஞ்சிய
அந்த
வேடதாரிகள்
இன்று
விழுந்து விழுந்து
சிரிக்கின்றனர்.

எருசலேம் நகருக்கு
யேசு எனும்
அந்த
மாமனிதன்
எழுந்தருளிய போது

வீதி எங்கும்
ஆடைகளை விரித்தும்
விருட்சங்களின்
இலை குழைகளை
வெட்டிப் போட்டும்

உற்சாகமாக
ஓசான்னா
பாடியோர் வாயில்
இன்று
ஒழிக! கோஷம்!

இந்த மனிதர்கள்
இப்படித்தான்
நிறம் மாறுவதில்
நிபுணர்கள்
உணர்ச்சிக் கடலில்
ஓடும் தோணிகள்

அறிவு அவர்களை
ஆட் கொள்வதில்லை

இருளில் ஜனனம்
எடுப்பவர்கள்
எப்படி
ஒளியோடு
உறவாட முடியும்?

யேசுவுக்கு
இது நன்கு தெரியும்
அவர்
பேசவேயில்லை

வினாக்களைத் தொடுத்த
பிலாத்துவிற்கு
அந்த இரவிலேயே
வியர்த்துக் கொட்டுகிறது
விலகிக் கொள்கிறான்

வியாழன்
விடை பெற
வெள்ளி பூக்கின்றது

அர்ப்பணம்
எனும் சொல்லுக்கு
அர்த்தம் புரிகின்றது

வேள்விக்கு ஒரு
வெள்ளாடு
தயாராகின்றது

ஒரு மெழுகுதிரி
உருகி வழிகின்றது

இனிய நறுமணம் தரும்
ஊதுபத்தி
எரிந்து
சாம்பலாகின்றது

அழுக்குகளைக்
கழுவிக் கொண்டு
ஆறு ஓடுகின்றது

அடிதாங்கா உள்ளம்
இடி தாங்குகின்றது

தியாக மெனும்
யாகத் திருவுலா...
தெரு கண்டு
திளைக்கின்றது

சிலுவையில்
ஒரு சிவப்பு ரோஜா
மலரப் போகின்றது

ஆணி எனும்
முட்களிடையே
மலரப் போகும்
அதன் வாசத்தில்
உலகமே
மயங்கிப் போகும்

வீதிக் கரைகளை
உடைத்துக் கொண்டு
மக்கள் கடல்
பாய்கின்றது

கூம்பிய மலர்கள்
குனிந்த தாமரைகள்
தேம்பிய நெஞ்சங்கள்
தெருவெல்லாம் பெண்கள்

சொற்கள்
சக்தியின்றிச்
சோர்ந்து போக
அழுகையே
அற்புதமான
தொடர்புச்
சாதனமாகின்றது

அழும் பெண்களுக்கு
ஆறுதல் சொல்கிறார்
யேசு–
தொழும் வார்த்தைகள்
தொடும் நெஞ்சங்களை

பச்சை மரத்திற்கு
இப்படியென்றால்
பட்ட மரத்தின் நிலை
எப்படியாகும?

ஏன் அழுகின்றீர்கள்
எனக்காக?
நான் சொல்வேன்
நாளைய சந்ததிக்காக
நன்றாக அழுங்கள்......

சிலுவைப் படுக்கையைச்
சுமந்துகொண்டு
யேசு
செல்கின்றார்

ஓரடி கூட
ஒழுங்காக
வைத்து நடக்கமுடியவில்லை
வேரடி மரமாக
நிலத்தில்
வீழ்கின்றார்......



**உயிர்த்த ஞாயிறு சிறப்புக் காவியம்**

கூலிப்படைக்கு
ஒரே
கொண்டாட்டம்

மரத்தால் வீழ்ந்தவனை
மிதிக்கும்
மாடாக
மாறுகின்றனர்

நான் நீ என்று
போட்டி
போட்டுக்கொண்டு
நன்மை அடைந்த
சனங்கள்
ஏன் என்று
கேட்கவில்லை
இதுதான் உலகம்!

இன்னல்
வரும்போது
எவரும்
எங்களுக்குப் பின்னால்
வரப் போவதில்லை.
இதை
யேசுவின் வாழ்க்கையே
எடுத்துக் காட்டுகின்றதா?

தட்டுத் தடுமாறி
எழுந்த யேசு
தான்
விட்ட
இடத்திலிருந்து
வெற்றிப் பயணத்தை
நடத்துகின்றார்

பலிக்களம்
கண்ணில்
படுகின்றது
பாத யாத்திரை
முடிவடைகின்றது

தோளை
அழுத்திய
சிலுவையில்
யேசுவை
தொங்க வைப்பதற்கான
பணிகள்
துரிதப்
படுத்தப்படுகின்றன.

உடலில்
ஒட்டியிருந்த ஆடை
உரிக்கப்படுகின்றது
இரத்தம்
ஓடிப்பாய்கின்றது.

இடையில்
ஒருதுண்டோடு
சிலுவைப்
படுக்கையில்
யேசு
கிடத்தப்படுகின்றார்

இரண்டு கைகளும்
இழுத்து வைக்கப்பட்டு
இருப்பாணிகள்
ஏற்றப்படுகின்றன.

இடம் வலமாக
இரண்டு கள்வர்கள்
இவர்களுக்கு நடுவே
யேசு.

இவர் தான்
யூதர்களின்
இராசா
இப்படியொரு
துண்டுப் பிரசுரம்
எழுதி
ஒட்டப்படுகின்றது.

சித்திரவதையின்
சிகரத்தில்
யேசு
இருந்தாலும்
நித்திய வார்த்தைகள்
அவர்
நெஞ்சிலிருந்து
வெளி வருகின்றன.

மேகத்திற்குத்
தாகம் .
தண்ணீர்
கேட்கின்றது
தரையைப்
பார்த்து
கண்ணீர்
பெருக்கும்
காட்சி

துயரத்தின்
உச்சக் கட்டத்தில்
தூயவன்
உயரச் சிலுவையில்
இருந்து
ஓவென்று
அலறுகின்றார்

இறுதியாக—
'முடிந்தது
எல்லாம்' என
முகம்
கவிழ்கின்றார்

இயற்கை ஒரு
குலுங்குக்
குலுங்குகின்றது.

காலமானவர்கள் கூட
கல்லறையைத்
திறந்து கொண்டு
இந்தக்
காட்சியைக்
காண வருகின்றனர்.

திரைச்சீலை
கிழிகின்றது
திகில் நாடகம்
அரங்கேறுகின்றது.

அன்று மாலை
அடக்கம் ..
நின்றவர்கள்
நிழல் போலத் தொடர்ந்த
சில நெஞ்சங்கள்

சனி வாரம்
சர்வமும்
அமைதிச்
சாகரத்தில்
மூழ்கின்றது
பூமித்தாயின்
மடியில்
யேசுவுக்கு
பூரண ஓய்வு

ஓடி வருகின்றது
ஒளி ஞாயிறு
உன்னதமான
மனிதன் ஒருவன்
தேவனாக
உயிர்த்தெழுந்ததைக்
காண்பதற்காக
ஆம் ..
அஸ்தமனத்தில்
ஓர் உதயம் – அது
ஆருக்குப் புரியும்?

கல்லறைக்
காவலர்களின்
கண்கள்
கூசுகின்றன

எதிரே தோன்றிய
யேசுவின்
விஸ்வரூபம்
ஏவலரை
இருட்டிற்குள்
தள்ளுகிறது
எதுவும் புரியவில்லை
எழுந்து
ஓடுகிறார்கள்

கூட்டம்
கூடுகிறார்கள்
குருக்கள்
நாட்டிற்கு
உண்மையை மறைக்கும்
நரி வேலை
நடத்தப்படுகின்றது.

பொய்க்கு
அலங்காரம் புனைந்து
வீதியிலே
உலவ விடுகிறார்கள்
விசரர்கள்.

செய்தி அறிந்த
சீடர் சிலர்
கை கால் பதற
கல்லறைக்கு
விரைகின்றார்கள்.

ஆனாலும்
அவர்கள்
ஊன மனத்தினர்
ஒளி
ஒதுங்குகின்றது.

ஆரணங்கொருத்தி
அசைக்க முடியாத
நம்பிக்கையின்
அடையாளம்
அன்பின்
ஆழமும்
அவள் தான் .

பூரணனைக்
காணவில்லையெனப்
புலம்புகின்றாள்

யேசுவின்
விஸ்வ ரூபம்
இந்த ஏழைப்பெண்ணுக்கு
எளிதில்
தெரிகின்றது.

விமானத்தில் ஏறி
விண்ணைக் கிழித்தாலும்
எட்ட முடியாத
இறைவனின்
வடிவம்
இந்தப்
பெண்ணுக்கு
எப்படிக்
கிடைத்தது?
அதற்குப் பெயர்தான்
அன்பு–

அகிலத்தையே
இயக்கும்
அற்புத சக்தி அது
அல்லேலூயா

●

# 24



# இந்துபோர்ட் இராசரத்தினம்
## காலமும் வாழ்வும்

க.சி.குலரத்தினம்

## கல்விச் சூழலில் தூய்மை கருதியவை

இன்றைய சூழலில் சில புறமதப் பாடசாலைகளிலேயே தொண்ணூறு வீதமான சைவப் பிள்ளைகள் கல்வி கற்கிறார்கள். இன்று பெரும்பாலான பாடசாலைகள் அரசாங்கப் பாடசாலைகளாகி நிலவுகின்றன. பல பாடசாலைகள் பழைய பெயரில் புறமதப் பாடசாலைகளென விளங்குகின்ற போதிலும் அங்கெல்லாம் சைவம் கமழ்கின்றது.

இவை இவ்வாறாக அன்று நிலவிய கல்விச் சூழலில் உண்டாகியிருந்த நோய்க்கு அரசாங்கம கொடுத்த பரிகாரம் மருந்தும், பரீட்சார்த்த மருந்து நோயைவிட மிகுந்த துன்பத்தையும் வேதனையையும் கொடுத்தன அந்த வேளையிலே தான் இராசரத்தினம் அவர்கள் அரசாங்கத்திடம் நோய் நாடி தக்க மருந்து கொடுக்குமாறும் கல்விச் சூழலில் தூய்மை நிலவுதல் வேண்டும் என்றும் குரல் கொடுத்தார்.

தென்னிலங்கையில் பௌத்த மதத்தினரிடையே மேத்தானந்தா, குலரத்தின முதலான மேதைகள் தங்கள் மதப்பிரசாரத்தில் வெகுவாக ஈடுபடுவாராயினர். வடக்கில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் காட்டிய வழியை தெற்கில் அனகாரிக தம்மபாலா, கேணல் ஒல்கொட் முதலானோர்களும் பணி செய்து வழிகாட்டியிருந்தார்கள் பௌத்தர்கள் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்று நடத்தினால் நல்லது என்று கருத்துத் தெரிவித்த போது, தங்கள் பிள்ளைகளுள் கல்வி பயின்ற 14,00 000 பேருள் 47,500 பிள்ளைகள் கத்தோலிக்க பாடசாலைகளிலும்,77,600 பிள்ளைகள் புரட்டஸ்தன் பாடசாலைகளிலும் பயின்றார்கள் என்றும்அவர்களுக்குச் சொந்த மதச் சூழல் வாய்ப்புக் கிடைக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்கள்.

இப்பால் சைவ சமயஞ் சார்ந்த 2,21,000 பிள்ளைகளுள் 21,800 பிள்ளைகள் கத்தோலிக்க பாடசாலைகளிலும், 45,300 பிள்ளைகள் புரட்டஸ்தன் பாடசாலைகளிலும் பயின்றார்கள் என இராசரத்தினம் அவர்கள் கணக்கிட்டுக் காட்டினார். இவர்களுக்குச் சைவச்சூழல் இன்றியமையாததாகும் என்று இராசரத்தினம் அவர்கள் இந்துபோர்ட் சார்பில்எடுத்துக் கூறினார்? நாவலர் காட்டிய நல்வழியை நாங்களும், அனகாரிக தம்மபாலா காட்டிய வழியை அவர்களும் மறக்க முடியாது என்றும் புறமதத்தவர்கள் அவற்றை மறைக்க முடியாது என்றும் எடுத்துக் கூறினார். இச்செய்தியை அவர் பின்னரும் 15-8-1960 ஆம் நாளில் அரசாங்கம் பாடசாலைகளைக் சுவீகரித்த வேளையில் சுட்டிக்காட்டினார். கல்வி மந்திரியார் கன்னங்கரா அவர்கள் 1943-ம் ஆண்டளவில் உண்டாக்கிய கல்விச் சீர்திருத்தங்களின் பயனாக, இலங்கைக்கு உகந்தது ஏதுவோ அதனையே கற்பித்தல் வேண்டும் என்பனவாதிய முடிபுகள் நடைமுறைக்கு வந்தன இலங்கையர் இடையில் வந்த வேற்று நாகரிகங்களைப் பின்பற்றிய நடை உடை பாவனைகளில் ஈடுபட்டாலும், தம் சொந்த நாகரிக அடிப்படையை மறந்துவிடலாகாது என்ற அமைவு வலுப் பெறலாயிற்று நாடு தேசிய மயமாக அமையும் போது, நாட்டின் எந்தச் சன சமூகத்தையும் அரசு புறக்கணித்தலாகாது என்ற முடிபும் கருத்தில் வந்தது.

### கல்வியின நோக்கம்

கல்வியின் நோக்கம் சமூகத்தைப் பொறுத்தது. எனவே சமூகத்தின தேவையையே முதற்கண் கவனித்தல் வேண்டும் சனநாயக, தேசியம் என்றெல்லாம குரல் எழுப்பும் வேளையில் மக்களை உத்தம குடிகளாக்குதலே கல்வியின் பயனெனக் கருதப் பெற்றது. உடல் நலம், மனநலம், குணநலம் என்பன அபிவிருத்தியடைதலும், அபிவிருத்தியடைந்தவர்கள் நாட்டின் பயன் கருதித் தம்மை அர்ப்பணித்தலும கலவியின் பயன் என்று கருதப் பெற்றது. கல்வி கட்டுப்பாடுகளின்றிச் சுயாதீனமாயமைதல் விரும்பத்தக்கதாயிருந்தது. உடல் சம்பந்தமாகவும ஆத்மிக சம்பந்தமாகவும் வாழ்வைப் பண்படுததல், மனநலன், குண ஒழுக்கம், கலாசாரம், ஆளுமை விவேகம் என்பனவற்றை வளர்த்தல் கல்வியின் பயன் எனக் கண்டனர். வேலை செய்யுந் திறனை விருத்தி செய்து, ஒருவனைச் சமூகத்திற்கு உபகாரியாக்கி விடுதல் வேண்டும்.

புலப் பயிற்சியில் மரவேலை, உலோக வேலை, தோட்ட வேலை, ஓவியம்,இசை, நடனம் முதலிய கலைத்துறைகள் ஒருவனின் ஆற்றலை வெளிப்படுத்தும். கலைதுறைகளுக்காகவே கலாயோகி எனப்புகழ் பெற்ற கலாநிதி ஆனந்த கென்ரிஸ் குமாரசுவாமி அவர்கள் இருபதாம் நூற்றுண்டின் ஆரம்ப ஆண்டுகளிலேயே தம்மை அர்ப்பணித்தார்கள்.

தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், கண்டிச் சிங்களவர் கண்ட மத்திய காலக் கலைகள் என்பனவற்றை மதிப்பீடு செய்த ஆனந்தகுமாரசுவாமி அவர்களின் ஆலோசனைகள் அக்காலத்தில் செவிடர்காதில் உபதேசமாயின. அவர் அமெரிக்காவில் வாழ்ந்து கலை விளக்கஞ் செய்து உலகப் புகழ் பெறுவாராயினர். அவர் 1947 இல் மறைந்த பின்னரே அவரை அறிவதற்கு இலங்கையர் முற்பட்டார்கள். ஆற்றலை வெளிப்படுத்த வல்ல அருங்கலைகளையும் பாட வகைகளோடு பரவலாகப் படிப்பித்தல் வேண்டும். ஏனைய பாடங்களை இரசிக்கும் பாவனையில் இலக்கியம், வரலாறு, நாடகம் முதலியவற்றையும் கொள்ளலமையும் எனக் கொண்டனர்.

கலாசாரம், நன்நடத்தை முதலியன சமூகத்தின் நல்லமைப்புக்கு இன்றியமையாதவையாகும். இவற்றுக்குச் சமய அறிவு அடிப்படையாய், அத்திவாரமாய் அமைதல் அவசியம். நாங்கள் எதிர்காலத்துப் பெற்றோர்களுக்கே படிப்பிக்கிறோம் என்னும் கருத்தைக் கொள்ளுதல் வேண்டும். வருங்காலச் சந்ததியினரை உருவாக்குவதற்கு இக் காலச் சந்ததி நல்லமுறையில் அமைதல் வேண்டும் இக்காலச் சந்ததியினர் சிறப்படைவதற்கு முதலில் கல்வியடிப்படை சிறத்தல் வேண்டும்.

உலகில் மக்கள் தொகையில் பெண்கள் பாதிப்பங்கினர் பெண்களின் கல்வி பெருமைக்குரியது. நாரியர் உயர்ந்தால் நாடுயரும். பெண்களே தாய்மாராக வரும் தகுதியுடையவர்கள்.

தாய்மார் தகுதியுடையவர்களானல் வீடுகளும், வித்தியாலயங்களும் இணைந்து பிள்ளைகளை உருவாக்கலாம். இருசாராரும் இணைந்து செயலாற்றின் சுற்றுடல் செம்மையாகும். சுற்றுடலின் செம்மை அவசியமாகும். பாடசாலைகள் யாவும் படிப்பதற்குத் தகுதியாயமைதல் வேண்டும் பாடசாலைகளுள் உயர்வு, தாழ்வு நிலவுதலாகா. ஆசிரியர் யாவரும் தகுதிவாய்ந்தவர்களே எனும் எண்ணம் நிலவுதல் வேண்டும். பிள்ளைகளின் நாட்டம், சட்டத்துறை, மருத்துவத்துறை, பொறியியல், வணிகம், வேளாண்மை முதலியவற்றைக் காட்டலாம் பாடசாலைகள் அவர்களை நெறிப்படுத்த உதவியாய் நிலவுதல் அவசியமாகும்.

முன்னர் 1923 ஆம் ஆண்டு முதல் தமிழ், சிங்களம் ஆகிய தாய்மொழிகள் இலவசமாகக் கற்க வசதியிருந்தாற் போல, 1-10-1945 முதல் ஆங்கிலத்தையும் இலவசமாகக் கற்கக்கூடிய வாய்ப்புக்கிடைத்தது. அன்று 1945 ஆம் ஆண்டு முதல் எவரும் எங்காயினும் முப்பதின்மருக்காக ஒரு பாடசாலையை ஆரம்பிக்கலாம் என்னும் நியதியும் கிடைத்தது. அன்று இலங்கையெங்கும் அரசினர் பாடசாலைகள் அமைதல்வேண்டும் என்று அமரசூரியா அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை இராசரத்தினம் அவர்கள் வன்மையாக எதிர்த்துப் பத்திரிகைகளில் கண்டனங்கள் வரைந்து வந்தார். வட இலங்கையில் அரசினர் பாடசாலைகளிற் பார்க்கத் தனியார்களின் சைவத் தமிழ்ப் பாடசாலைகள் தரத்தால் உயர்ந்து விளங்கின என்றும், அவற்றை நடத்துவதற்குச் செலவும் குறைவாகும் என்றும் அரசாங்கம் ஏகபோக உரிமை கோரல் அடாத்தான செயலாகும் என்றும் கூறினார் பாடசாலைகளை அமைக்கும் பணி, திருக்கோயில்களை அமைக்கும் புனிதமான திருப்பணி போன்றதாகும் என்றும் இப் பணி செய்வதைத் தடுக்கும் அரசாங்கம் நாட்டுக்கு நன்மை செய்வது எங்ஙனமாகும் என்றும் கேட்டார்.

ஓரிடத்தின் தேவையினை அறிந்ததும் சூழலில் உள்ளவர்கள் உடனடியாகப் பாடசாலையை அமைத்துவிடுவார்கள். ஆனால் அரசாங்கம் அமைப்பதானால் ஆயத்தங்கள், அத்திவாரங்கள் யாவும் ஆறுதலாகவே நடைபெறும் என்றார். அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்கள் சுயமுயற்சி குன்றுநவர்களாய், சமூக சேவை, நாட்டுச்சேவை முதலியவற்றில் ஈடுபாடு கொள்ள முடியாதவர்களாயிருப்பார்கள். அன்று பிரித்தானிய பாராளுமன்றத்தில் முப்பது ஆசிரியர்கள் பிரதிநிதிகளாயிருந்து பணி செய்ததையும், அங்ஙனமே இலங்கையின் பழைய சட்டசபையில் ஆசிரியர் சிலர் பிரதிநிதிகளாயிருந்து பெருஞ்சேவை செய்ததையும் எடுத்துக் காட்டினார். அரசாங்கம் பாடசாலைகளை ஆரம்பித்தால் அதில் கடமையாற்றும் ஆசிரியர்கள் உள்ளூராட்சிச் சபையில் தானும் பணிபுரிதல் இயலாததாகும் என்றார்.

இவ்வாறாகக் கல்வி விசாரணைக்குழுவினர், அரசாங்கப் பாடசாலைகளும் தனியாரின் பல்வேறு மதப்பாடசாலைகளும் பக்கம் பக்கமாக சமாதான முறையில் நிலவலாம் என்றார்கள். ''வித்தியாசாலையிற் கல்வி கற்கும் மாணக்கர் எந்தச் சமயக்கொள்கைகளை அனுசரிப்பார்களோ, அவர்களுக்கு அந்தச் சமயம் சார்ந்த ஆசிரியர்களே அடிப்படை பிசகாமல் கற்பித்தல் வேண்டும் என்று ஒரு வகுப்பினர் விரும்பினல், அரசாங்கம் அதற்கு வேண்டியவற்றைச் செய்து கொடுக்கும்.

முன்னர் அரசாங்கம் மாத்திரம் புதிய பாடசாலைகளை ஆரம்பிக்கலாம் என 1945-ஆம் ஆண்டுவரை நிலவிய கட்டுப்பாடு, பெரிய சேனநாயக அவர்களின் திருத்தப் பிரேரணையினல் நீக்கப்பட்டுத் தனியார் பாடசாலைகளை உண்டாக்குவதற்குச் சாதகமான சூழ்நிலை உருவாயிற்று.

அந்தச் சூழ்நிலையில் 1947-ஆம் ஆண்டின் ஆடிமாத முதல்நாள் தொடக்கம் அமைக்கப் பெறும் பாடசாலைகளில் முகாமையாளரின் மதத்தைச் சேர்ந்த பிள்ளைகளின் எண்ணிக்கையே உதவி நன்கொடைக்குக் கணிக்கப் பெறும் இதனல் வேற்றுமதப் பிள்ளைகளின் எண்ணிக்கை நன்கொடை மதிப்பீட்டுக்கு இடம்பெருது போயிற்று அது எவ்வாறெனில் பிள்ளைகளின் பெற்றோரும் முகாமையாளரின் மதத்தவராயிருந்தால் தான் பிள்ளைகளின் எண்ணிக்கை கணிப்பில் இடம் பெறும். எனவே பிள்ளைகளை மதம் மாற்றும் செயல் நடைபெறுதென்பது சாத்தியமாயிற்று.

### இலவசக் கல்வி முறை

நாட்டில் 1.10.1947முதல் இலவசக் கல்விமுறை நடைமுறைக்கு வரத்தொடங்கியதும் பிள்ளைகள் ஆங்கிலப் பாடசாலைகளையே நாடினர். ஆங்கிலப் பாடசாலைகள் பெரும்பாலும் புறமதத்தவர்களின் பொறுப்பிலேயே நிலவி வந்தன. அன்று புறமதத்தவர்களின் குடித்தொகை நாட்டில் எட்டு வீதமாகவே இருந்தது. எனவே தொண்ணூற்று இரண்டு வீத மக்களின் (முகாமையில் ஆங்கிலப் பாடசாலைகள் குறைவாகவே இருந்தன. யாழ்பாணத்துப் பிள்ளைகளுக்குப் போதியளவு சைவாங்கில பாடசாலைகள் இயங்கவில்லை. எனவே சைவப் பிள்ளைகள் புறமதப் பாடசாலைகளுக்குப் படிக்கப்போன விடத்தில் போதியளவு சைவச்சூழல் நிலவவில்லை.

இத்தகைய சூழ்நிலையில் இராசரத்தினம் அவர்கள் துவிபாஷா பாடசாலைகளை ஆரம்பித்திருந்தார் அவைநாளடைவில் நல்ல தரமுள்ளனவாய் ஆங்கில வித்தியாலயங்களாக உயர்ந்தன. இந்த வரிசையில் சன்மார்க்க போதன வித்தியாலமும் செங்குந்த வித்தியாலயமும் மதிப்பு வாய்ந்த முன்னேடிக்கல் லூரிகளாயின, அன்று 1947 ஆம் ஆண்டின் மதிப்பீட்டில் சைவவித்தியாவிருத்திச் சங்கம் பரிபாலித்த 118 பாடசாலைகளில் 18500 பிள்ளைகளை 650 ஆசிரியர்கள் பயிற்றி வந்தார்கள்.

### கைகூடிய திருத்தங்கள் சில

நீண்டகாலமாக இராசரத்தினம் அவர்கள் கருதிய கல்விச் சீர்திருத்தங்கள் சில நாளடைவில் 1950 ஆம் ஆண்டளவில் நடைமுறைக்கு வந்தன. பாடசாலைகளின் பராமரிப்புக்கான நன்கொடைப் பணம் சிறிதளவு அதிகரித்தமையால் வசதியான தளபாடங்கள், உபகரணங்கள் பெறுவதற்கு வாய்ப்புக் கிடைத்தது. ஆனல் சைவவித்தியாவிருத்திச் சங்கப் பாடசாலைகள் பலகிடுகினால் வேயப்பட்ட கொட்டிலகளாயிருந்தமையால் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை வேய்வதற்கான செலவு பெரிதாகவே வளர்ந்து வந்தது

முன்னர் சைவாசிரியர்களுக்கான பயிற்சிக் கல்லூரியைக் காலமறிந்து ஆரம்பித்த இராசரத்தினம் அவர்கள் இருபதாண்டுகளின் பின் சைவாசிரியைகளுக்கான பயிற்சிக் கல்லூரி அமைக்க வழி தேட வேண்டியவராயினர். இதற்கு முன் இணுவில் இராமநாதன் கல்லூரியோடு இணைந்திருந்த சைவாசிரியைகளுக்கானபயிற்சிக்கல்லூரி, இடையில் தடைபட்டமையால், இராசரத்தினம் அவர்கள், ஆசிரியைகளை உருவாக்குவதற்கு சைவாசிரியகலாசாலையையே கலவன் கல்லூரியாக்கி 1947ஆம் ஆண்டிலே சைவப் பெண்களும் பயிற்சி பெறவாய்ப்பளித்தார். முதலில் இருபத்தைந்து பெண்கள் பயிற்சி பெற்றபின தொடர்ந்து ஐம்பது பெண்கள் பயிற்சி பெற வாய்ப்புத் தேடினர்.

இராசரத்தினம் அவர்கள் திருநெல்வேலியில் ஆரம்பித்த பெண் ஆசிரியர்க்கானபயிற்சி நாளடைவில் கோப்பாய் மகளிர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியாக மலர்ந்தது. முன்னர் கோப்பாயில் பயிற்சி பெற்று வந்த ஆண்கள் தமது பயிற்சியைப் பலாலியில் பெறுவதற்கு வசதி செய்யப் பெற்றது.

(தொடரும்)

## வெற்றிக்கு வேண்டியது

வெற்றிக்கு வேண்டியது கடுமையான உழைப்பு முன்னேறியவர்கள் அனைவரும் கடுமையான உழைப்பாளிகளாகவே இருந்திருக்கிறார்கள். முன்னேற வேண்டும் என்ற உள்ளுணர்வும் கடுமையான உழைப்பும் உடையவர்கள் வாழ்வில் முன்னேறாமல் இருக்கவே முடியாது.

தாழ்வு மனப்பான்மை கொண்டிருப்பது முன்னேற்றத்திற்கு முதல் முட்டுக் கட்டையாகும்.

தன்னைப் புரிந்துகொண்டபின் வாழ்க்கையைக் கண்டு அஞ்சவேண்டியதில்லை. தனக்குப் பிடித்தமான வேலையை மன நிறைவோடு செய்பவன் வெற்றிக்கு வழி வகுக்கிறான்.

சில சமயங்களில் வெற்றியை விடத் தோல்விகளே நமக்குப் பெரும் ஆசானாக அமைந்து விடுகின்றன. ஆரம்பத் தோல்விகளால் தங்களைத் திருத்திக்கொண்டவர்கள் இறுதியில் வெற்றியை அடைகிறார்கள்.

வாழ்க்கையின்ஒவ்வொரு படியிலும் முயற்சி செய்தால் வாழ்வில் முன்னேறுவது அப்படி ஒன்றும் முடியாத காரியம் இல்லை. தங்களையே சரியாக எடைபோட முடியாதவர்கள் தம் வாழ்க்கையில் தோல்வியடைகிறார்கள்.




# கல்வி ஈடுபாடு, வளர்ச்சியில் மாணவிகள் முன் நிற்கின்றனர்

## வேம்படி அதிபர் கூறுகிறார்

யாழ்ப்பாணத்தின் பிரதான பெண்கள் கல்லூரிகளில் ஒன்றான வேம்படி மகளிர் கல்லூரி அதிபா திருமதி ராஜரட்ணம் வாரமுரசொலிக்கென அளித்த சிறப்புப் பேட்டி இங்கு பிரசுரமாகின்றது.

பேட்டி கண்டவா
ஊரெழு தர்ஷினி

**கேள்வி:** நீங்கள் உங்கள் அனுபவத்தில் பல தலைமுறையினரைச் சந்தித்திருப்பீர்கள்... அக்காலப் பெண் கல்வி நிலைக்கும்— இக்காலப் பெண் கல்வி நிலைக்கும் நிச்சயம் வேறுபாடிருக்கும் கல்வி ஈடுபாடு-, வளர்ச்சி– ஆற்றல்– என்பனவற்றில் அவர்களிடையே எத்தகைய வித்தியாசங்கள் என்பதைக் கூற முடியுமா?

**பதில்:** அக்காலப் பெண் கல்விக்கு நிறைய தடைகள்– எதிர்ப்புகள் இருந்தன. மீறி கல்வி கற்றவர்கள் குடும்பக் கல்விக்கேற்ற தையல்– மனையியல் என்பனவற்றில் தான் அதிக ஆர்வம் காட்டினர். ஏதோ அறிவுக்குச் சிறிது படித்தால் போதும் என்றும், கல்விக்கு முற்றுப் புள்ளி வைத்து விடுவார்கள். ஆனால் இக்காலப் பெண்கள் கல்வியில் அதிக ஆர்வமும், ஈடுபாடும்– திறமையும் உடையவர்களாக உள்ளனர். எல்லாத் துறைகளிலும் இக்காலத்தவர்கள் சிறந்து விளங்குகின்றனர். அக்காலத்தில் பெண்கள் படித்து வேலை வாய்ப்பு பெறுவதோ, பட்டதாரிகளாய் அல்லது, மருத்துவம் போன்றவற்றில் ஈடுபடுவதோ மிக மிக அரிது. ஆனால் இன்று அத்தகைய நிலை பெண்களுக்கு இல்லை என்பதை நாம் காணக் கூடியதாக உள்ளது.

**கேள்வி:** நீங்கள் பெண்கள் கல்லூரியில் அதிபராக இருப்பதால் மாணவிகளின் தற்போதைய நிலைப்பாட்டினை அறிந்திருப்பீர்கள். இந்த வகையில் தற்கால மாணவிகள் தமது கல்வி வளர்ச்சியினை வேலை வாய்ப்பினைப் பெற்று– சம்பாதிக்கும் குறியோடு விஸ்தரிக்கின்றனரா? அல்லது அறிவை விருத்தி செய்து போதிய அனுபவங்களைப் பெற்று முன்னோடிகளாக ஆளுமையுடன் திகழ விரும்புகிறார்களா?

**பதில்:** புத்திசாலித்தனம்– துணிச்சல்– முயற்சி– தன்னம்பிக்கை .. இவற்றின் ஒட்டுமொத்தமாக திகழ்பவர்கள் தற்காலப்பெண்கள் .. 'பெண்' என்ற முறையில் பின்தங்கல் இவர்களிடம் இல்லை பெரும்பான்மையினர் டாக்டராகவோ, எஞ்ஜினியராகவோ அல்லது சிறந்த கணக்காளராகவோதான் வர வேண்டும். சுயமாக சம்பாதித்து, தனித்து இயங்க வேண்டும் என்றுதான் குறிக்கோளோடு இருக்கின்றனர். ஒரு சிலர் தான் முன்னோடிகளாகத் திகழ விரும்புகின்றனர்.

**கேள்வி:** எமது கல்வி முறைக்கும் வெளிநாட்டுக்கல்வி முறைக்கும் அதிகவேறுபாடுகள் இருக்கின்றன நீங்கள் உங்கள் அனுபவத்தில்ஏதாவது புதியகல்வி மாற்றங்களை– வெளிநாட்டுக் கல்விமுறைகளை புகுத்த நினைத்திருக்கின்றீர்களா? நமது கல்வி முறை திருப்திகரமானதாக உள்ளதா?

**பதில்:** மிகவும் திருப்திகரமானதாக உள்ளது சமய அடிப்படையில் எமது கல்விமுறை மிகச்சிறந்ததே! சமயம்– அழகியல் என்பன நமது கல்வி முறைக்கு சிறப்பளிக்கின்றன' மேலும் புதிய 'கம்பியூட்டர்' கல்வி முறைகளைப் புகுத்துவதை வரவேற்கின்றேன்.

**கேள்வி:** தற்காலத்தில் பல்கிப்பெருகி வரும் 'Tuition' கல்வி பற்றி என்ன கூறவிரும்புகின்றீர்கள்? பாடசாலையின் கல்வித்தகுதிகளையும், தரத்தினையும் எவ்வகையில் அவை பாதிக்கின்றன? இக் கல்வி மூலம் மாணவர்கள் அடையும் நன்மை- தீமைகளைக் கூறமுடியுமா?

**பதில்:** பாதிப்புகள் என்று கூறுவதற்கு ஒன்றுமில்லை! தீமைகள் பற்றி கூறப்போனால் மாணவர்களின் சக்தி அளவுக்கு மீறி செலவழிக்கப்படுகின்றது. எதையும் நின்று நிதானித்து சிந்தித்து செயல்படும் தன்மைகள் அற்றுப் போகின்றன. மனமும் உடலும் விரைவில் களைப்படைந்து போகின்றது. இதனால் நோய்கள் ஏற்பட வாய்பிருக்கின்றது. அமைதியும், ஓய்வும் மாணவர்களுக்கு அவசியம். ஓய்வின்றி இயந்திரங்கள் போல் அளவுக்கு மீறிய பிரயாசை எடுப்பதால் நரம்புத் தளர்ச்சி வந்திடுமோ என்று நினைக்க வேண்டி உள்ளது. பெற்றோர்களின் அளவுக்கு மீறியஆசையும்போலிக்கௌரவமும ஒருவகையில்காரணமாகும். நன்மைகள் என்றுசொல்லப் போனால் .. பரீட்சையில் மாணவர்களுக்கு உதவியளிக்கின்றது. பாடநெறிகளை அதிகமாகபடிக்கும் வாய்ப்பிருக்கின்றது. கட்டுப்பாடுகளுடன் கூடிய கல்வி நெறியை பாடசாலைகளிலே அதிகம் பெறலாம். தனிப்பட்ட மாணவர்களுக்கு Tuition கல்வி நன்மையளிக்கின்றது. நன்மைகளும் தீமைகளும் சேர்ந்தே இருக்கின்றன.

**கேள்வி:** தற்போது ஏற்படுக்தப்பட்ட 'ஒப்படை' எனப்படும் புதிய கல்வி முறை ஒரு வெளிநாட்டு கல்வி முறையைச் சார்ந்ததே. ஆனால் அங்கு இந்த ஒப்படைக்கான நடைமுறைக் கல்வி யாவும் மாணவர்களால் .. பாடசாலைகளில் மட்டுமே கையாளப்பட்டு, மாணவர்களின் தனி முயற்சி மூலமே உருவாக்கப்பட்டு. மதிப்பீடுகள் வழங்கப்படுகின்றன. ஆனால் நமது பாடசாலைகளில் நமது ஒப்படைக்குரியவைகளை வீட்டில் இருந்தோ- வெளியிடங்களில் இருந்தோ– மற்றவர்களின் உதவியுடன் உருவாக்கிவிடுகின்றனர். இதனால் ஒரு மாணவரின் தனித்திறமைகள்– கெட்டித்தனம் என்பன மழுங்கடிக்கப் பட்டுவிடுகின்றன. இதனால் மதிப்பீடுகள் சரியான முறையில் தகுதிக்குரியவர்களுக்கு வழங்கப்படாமல் போய்விடுகின்றது. இது பற்றி உங்கள் கருத்து என்ன? இக் கல்வி முறை வரவேற்புக்குரியதா?

**பதில்:** இப்பாடநெறி வரவேற்புக்குரியதே! நல்லதொரு புதிய முறை. ஆனால் மேற்கூறிய முறையில் அல்லாது– பாடசாலையில் ஓர் மேற்பார்வையில் உருவாக்கப்படுமேயானால் மாணவர்களின் முழுத் திறமைகள் விருத்தி செய்யப்படும். சரியான முறையில் திறமைகளும் – மதிப்பீடுகளும் கணிக்கப்படக் கூடியதாக இருக்கும். எனினும் மாணவர்கள் மற்றவர்களின் துணையை நாடுவது தவிர்க்கப்பட வேண்டும். தாங்களாக இயங்க பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்!

**கேள்வி:** பல்கலைக்கழக அனுமதிகளிலும் - கல்வி ஈடுபாட்டிலும் வளர்ச்சியிலும் ஆண்களா .. பெண்களா முன் நிற்கின்றனர்?

**பதில்:** பெண்கள் தான் முன் நிற்கின்றனர்! ..

**கேள்வி:** நீங்கள் அதிபராக இருந்து இதுவரை சாதித்ததாக எதைக் கூற விரும்புகின்றீர்கள்?

**பதில்:** நான் கடமையாற்றும் பாடசாலைகளில் மாணவிகள் சகல துறைகளிலும் சிறப்புடன் திகழ்வதும், கலைத்துறை– விளையாட்டுத் துறைகளில் எல்லாம் முதலிடம் பெறும் போது எனக்கு மிகவும் பெருமையாக உள்ளது. எங்கள் பிள்ளைகள் நன்றியுடையவர்களாக இருப்பதும்– மகிழ்ச்சிக்குரிய தொன்றே. அவர்களின் சிறப்பிற்கு நான் மட்டும் காரணம் அல்ல. ஆனாலும் என் மாணவிகளால் கிடைக்கும் பெருமைகளையும் வெற்றிகளையும் நான் சாதனைகளாக கருதுகிறேன்.

**கேள்வி:** நீங்கள் உங்கள் ஆசிரிய-அதிபர் காலத்தில் சமூகத்திற்கு நல்ல அறிவும், ஆற்றலும் தீர்க்கமான சிந்தனையும் நிறைந்த மாணவர்களை உருவாக்கியுள்ளீர்கள் இந்த ரீதியில் தற்கால இளம் ஆசிரியர்களுக்கு என்ன கூறவிரும்புகிறீர்கள்?

**பதில்:** முதலில் ஆசிரியத் தொழிலை மதிக்க வேண்டும், வேண்டா வெறுப்பாக வெறும் கடமைக்காக பணியாற்றக் கூடாது. ஆத்ம திருப்தியுடன் தொழிலை நேசித்து. ஒன்றிப் போய் கடமையாற்ற வேண்டும். எம்மால் இயன்ற வரை ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் பணியாற்ற வேண்டும். அதுமட்டுமல்ல, இக்கால மாணவர்களை புரிந்து கொண்டு நடக்க வேண்டும் மாணவர்கள் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடிய வண்ணம் பாடநெறிகளைப் போதிக்க வேண்டும்.

**கேள்வி:** முரசொலி மூலம் மாணவர்களுக்கு ஏதாவது கூறுங்கள்?

**பதில்:** சமய அடிப்படையில் பாடங்களில் கவனம் செலுத்துங்கள். கலைத்துறையிலும்– விளையாட்டுத்துறையிலும் அக்கறைகாட்டுங்கள். எத்துறையிலேனும் உங்களை நிலை நிறுத்திக் கொள்ளுங்கள்! இறைவன் நிச்சயம் உங்களுக்குத் துணை புரிவான்.

# இலக்கியச் சுவைமிக்க ஒப்பாரிப் பாடல்கள்

● பூ. நவரட்ணராஜா

இறந்தார்க்கு இரங்கி இருப்பார் அழுவது மனித வர்க்கம் முழுவதுக்குமான ஒரு பொதுப்பண்பு. ஆயினும் இறந்தவர்களைப் பற்றித் தம் இதயத்தே எழும் எண்ணங்களை, இசையோடு கலந்து வெளியிட்டு அழுவது, தமிழர்க்கு மட்டும் உரித்தான பண்பாகும் இதனாற்றான் தமிழினத்தின் பெருமை கூற வந்த நாமக்கல் கவிஞர்;

''இழவில் அழுதிடும் பெண் கூட
இசையோடழுவது கண்கூடு''

என்று ஒப்பாரிக் கலையை உவமை கூறினார்.

இறந்தவரின் உடலைக் கூடத்தின் நடுவே வைத்து, அதன் இரு பக்கங்களிலும் பெண்கள் வரிசையாயமர்ந்து எதுகை இடறாமல்– மோனை முறியாமல் கவிபாடி அழுவதை இன்றும் தமிழ் மக்களிடத்தே கண்டு வருகிறோம். கணவனை இழந்த பெண்கள் தம் இரு கைகளாலும் மார்பில் அறைந்து அழுவர். தான் பெற்ற குழந்தைகளை இழந்தவள் தன் வயிற்றில் அடித்துக் கொண்டு அழுவாள். சாதாரணமாக, வட்டமாக நின்று கைகளைக் கோத்தபடி இடைவிடாது சுற்றிக் கொண்டு சாய்ந்தாடி அழுவது மற்றொரு வகையாக அமைகிறது.

பண்டைக் காலத்திலே, போருக்குச் செல்லும் கணவன், களத்திலே வீரமரணம் எய்திவிட்டால், ''முலைபொலியாக முருப்பநூறி'' முலை விளங்கும் மார்பிலே அனல் எழும்படியாக அடித்துக் கொண்டு அழுதகதைப் பல நூல்கள் கூறுகின்றன.

மேலும் அன்றைய புலவர்கள் தாம் இயற்றும் நூல்களிலே ஒப்பாரிக் கலைக்கும் இடமளித்துள்ளமையையும் அவதானிக்க முடியும்.

உதாரணமாக கவியரசர் கம்பர், தான் இயற்றிய இராமகாவியத்தில் இந்த ஒப்பாரிக் கலையைக் குறிப்பிட்டிருக்கிறார்.

'மண்ணெனுஞ்செவிலிமேல்
வைத்த கையினள்
பண்ணெனுங் கிளவியாற்
பன்னியேங்கினாள்''

தசரதன் இறந்த செய்தியைப் பரதன் மூலம் அறிந்த சீதை, தனது இடதுகையை நிலத்தில் ஊன்றி பண்ணோடியைந்த பாடல்களைப் பாடித் தன் ஆற்றாமையை வெளிப்படுத்தி அழுதாளாம்.

ஒரு சமயத்தில் கம்பர் ஒரு கிராமத்தில் தங்க நேரிட்டது. அப்போது ஒருநாள் அதிகாலையில் படுக்கையை விட்டு எழுந்து வெளியே சென்றார். வழியில் ஒரு வீட்டினின்று இளம் பெண்ணொருத்தியின் அழுகுரல் கேட்டது. அவ்வழுகையினூடே ஒப்பாரியாக, ''சில்லென்று பூத்த என்ற சொற்றொடர் அவள் வாயினின்று வெளிக்கிளம்பியதும் அடுத்த வார்த்தை வெளிவராதவாறு யாரோ அவள் வாயைப் பொத்தி அழுகையை அடக்கியதாகத் தெரிந்தது அதை அறிந்த கவிச்சக்கரவர்த்தி ''சில்லென்று பூத்த'' என்ற சொற்றொடர் கவிச்சுவை வாய்ந்ததாக இருந்தமையால் அதன்பின் அவள் சொல்ல விரும்பியது எதுவாக இருக்கலாம் என்பதை அறிய ஆவல் கொண்டார். எனவே அக்கம் பக்கத்தாரது வீடுகளை அணுகித் தனது மனநிலையைத் தெரிவித்தார். அவர்கள், அந்த அழுகுரல் சமீபத்தில் தன் நாயகனை இழந்த இளம் விதவையினுடையது எனவும் அங்ஙனம் அழுகையை நிறுத்துவது வயதான பெண்களின் கடமை என்றும் தெரிவித்தனர். கவிச்சுவையில் ஆர்வம் கொண்ட கம்பருக்கு அப்பாடலை முழுமையாகக் கேட்க வேண்டுமென்ற ஆர்வம் மேலோங்கி நின்றது. மறுநாளும் அந்த வீட்டு நடுத் திண்ணையில் சென்று தங்கியிருந்தார். அதிகாலையில் அழுகை வெளிக் கிளம்பிற்று. அதிர்ஷ்டவசமாக அவள் வாயைப் பொத்த ஆட்கள் சற்றுப் பின்தங்கி வர நேரிட்டது. அவள்,

சில்லென்று பூத்த சிறு
நெருஞ்சிற் காட்டினுள்ளே– என்னை
நில்லென்று சொல்லி
நிறுத்தி வைத்துப்
போனீரே!

எனப் புலம்பி அழுதாள். அப்பாடலின் சொற் சிறப்பும், கருத்துச் செறிவும் கம்பரைப் பரவசப்படுத்தின.

படித்தறியாப் பாமரப் பெண்கள் கூட இந்த ஒப்பாரிக் கலையில் பண்பட்டு விளங்குகிறார்கள்.

ஒரு அம்மையாரின் மருமகள் திருமணமாகி மாமி வீடு வந்த ஏழு நாட்களுக்குள் இறந்துவிட்டாள். உயிர் நீப்பதற்கு ஒருமணி நேரத்திற்கு முன்னர் கூட அம் மங்கை இறந்து விடுவாளென எவரும் எண்ணவில்லை. எதிர் பாராத நிலையில் மருமகளைப் பறிகொடுத்த மாமியார் ஒப்பாரியால் பாடுகிறாள்.

பந்தக்கால் நட்ட இடம்–
அங்கே
பள்ளம் மறையலையே
முகூர்த்தக் கால் நட்ட
இடம்– அங்கே
மேடு உயரலையே
பூமாலை சூட்டியல்லே– உன்
பெற்றூர்
புண்ணியனைத் தேடிவைத்
தார்– அந்தப்
பூமாலை வாடுமுன்னே– நீ
பொன்னுலகம் போன
தென்ன?

தமிழரின் ஒப்பாரிப் பாடல்கள் தனித்துவமானவை. கலைத்தன்மை மிக்கவை.

# கொல்வினை எழுப்பிவிட்ட 'சதாசிவம்' கொலைவழக்கு



## புகழ்பெற்ற விசாரணை

பரபரப்பூட்டும் அநேக வழக்குகளை இலங்கை நீதிமன்றங்கள் கண்டுள்ளன. மக்கள் அனைவர் மத்தியிலும் மிகப் பரபரப்பூட்டிய ஒன்று சதாசிவம் கொலை வழக்கு ஆகும். உள்ளதைச் சொல்வதானால், காலஞ்சென்ற டாக்டர் கொல்வின் ஆர் டி. சில்வாவுக்கு உச்ச வெற்றியீட்டிக் கொடுத்த வழக்கு அது எனலாம். அதில் ஆஜரானமை காரணமாக, இலங்கை வழக்குரைஞர்களில் தனிசிறந்த ஒருவர் என கொல்வின் புகழ் பெற்றார். அது மட்டுமல்ல அகில உலகக் கீர்த்தி வாய்ந்தவர் மாபெரும் பிரிட்டிஷ் பாரிஸ்ரர். சேர் எட்வர்ட் மார்ஷல் ஹோல் அத்தகைய பேராற்றல் படைத்தவர் கொல்வின் எனக் கணிக்கப் பெறவும் அவ்வழக்கு ஏதுவாயிற்று.

இவ்வழக்கில் கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர் மகாதேவன் சதாசிவம். இலங்கை வரலாற்றிலேயே வெகுசிறந்த ஒரு கிரிகெட்விளையாட்டு வீரர் என்றும். கண்ணுக்கினிய தோற்றம் உடையவர். அவர் வாழ்ந்த தோரணையோ இடாம்பீகமானது. அவருடைய மனைவியின் பெயர் ஆனந்தம். அப்பிரபு வாழ்க்கைப் பாணியின் விளைவாக, மனைவியின் கொலைஞர் அவர்தான், என மிக அநேகர் கருதினர்.

அந்நாட்களில் நான் ஒரு சிறுவன், பள்ளி மாணக்கன். கொழும்பு மாநகரில், நீதி மன்றங்கள் யாவும் அநேகமாக ஹல்ல்ட்ஸ்டோர்ப் எனும் பிரதேசத்திலேயே குழுமிநிற்கின்றன. அங்கே, இவ்வழக்கு விளக்கம் நடைபெற்ற நாடகக் களம், சுப்றீம் நீதிமன்றம். வழக்கு விசாரணையைக் கண்கூடாகக் காணும் பாக்கியம் இலகுவிற் கிடைப்பது அல்ல. பார்வையாளர் ஆசனங்களில் ஒருவனாக அமர இயன்றளவு முன்வரிசையில் இடம் பிடித்தாக வேண்டுமே! அதற்கு, அதிகாலையிலேயே நீண்டு செல்லத் தொடங்கும் சனவரிசை 'கியூ' வில் நானும் ஒருவன்.

இதுவரை காலமும் கிரிக்கெட் துடுப்பெடுத்தாடுவதில் இலங்கை கண்ட தலை சிறந்த 'பாட்ஸ்மன்' யார்? இன்றும் இதற்கு மகாதேவன் சதாசிவம் என்று தயங்காது பதில் தரும் உணர்வு. அவ்விளையாட்டு ஆர்வலர் அநேகரிடம் உண்டு. இரவு முழுவதும் நித்திரை பறந்து கேளிக்கை கும்மாளங்களில் ஈடுபடுவது மறுநாட் காலை, 'பர்ஸ்ற் கிளாஸ் கிரிக்கெட் மாட்ச்சில் பங்குபற்றி நூறு 'றன்'கள். சிலவேளை இருநூறு 'றன்'கள் அடிப்பது அதிலும், எத்துணை லாவகம், இவர் மேற்கிந்திய கிரிக்கெட் வீரர் ஃபிறங்க் உவொறெலோ என்று எண்ணத் தோன்றும் அழகு சொட்டும். மதராஸின் சேப்பாக்கம் மைதானத்தில் அவரது இரட்டை 'செஞ்சரி' இன்னமும் கிரிகெட் பிரியர்களின் நினைவில் பசுமையாக நிலைத்திருக்கிறது. இப்பேர்ப்பட்டவற்றை எல்லாம் சர்வ சாதாரணமாகச் சாதிக்க வல்ல ஒரேயொரு கிரிக்கெட் வீரர், சதாசிவம்.

சதாசிவம் தமது மனைவியைக் கொலை செய்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டார். திருமதி சதாசிவம் ஆனந்தம், பர்த்தாவின்மீது பரறுமிக்கவர். தமது குழந்தைகளைக் கண்மணி போலச் சீராட்டி வளர்க்கும் தாய். அவரது பிறந்தகம் ஒரு செல்வந்தக் குடும்பம். கணவருடைய போக்குகளைப் பார்க்கும் எவரும், அப்பெண்மணியிடம் அளவில்லாத சகிப்புத் தன்மையும் கூடவிருக்கும் என நினைப்பர்.

மகாதேவன் சதாசிவம் பிரக்கியாதி வாய்ந்த கிரிக்கெட் வீரர்- எனப் பெயரீட்டியவர். இலங்கையின் சார்பில் விளையாடியவர். மலேசியாவில் ஈராண்டு காலம் வாழும் போது அந்நாட்டின் சார்பிலும் கிரிக்கெட் விளையாடிய பெருமை அவருக்கு இருந்தது. அதேபோல, கேளிக்கை மன்னன் என்றும் பெயர் வாங்கியவர். இவ்வகையில் அவர் மனைவியின் தன்மை அதற்கு முழுமாறாக அமைந்து இருந்தது. அவரோ அடக்கம் எனும் பண்பினர். தானுண்டு. தனது வீடு உண்டு என அடங்கிக் கிடப்பவர்

இரண்டாவது உலகப்போரின் போது இலங்கை காலாட் படையில் சதாசிவம் சொற்ப காலம் ஒரு லெப்டினட் பதவி வகித்தார். கொழும்பு கோட்டையில் பிளாக்ஸ்ராவ் ஸ்ற்ரீற்றில் சகா ஒருவருடன் அவர் தங்கியிருந்தார். இரவு பூராவும் களியாட்டத்தின் பின், ஒரு சனிக்கிழமை அதி காலை தமது வசிப்பிடம் வந்து

**ஆங்கிலத்தில் ஜோவ் விஜேசிங்க தமிழில் மணியம்**

சேர்ந்த அவர், குளித்தார். ஒரு சிகரட் புகைத்தார். காலை ''பறேட்''டில் பங்குபற்றினர் ஒரு சில மணித்தியாலம் கழிந்ததும் இராணுவ அணியின் சார்பில் கிரிக்கெட் மாற்ச் 'சில்' கலந்து. எழிலுற நூறு ஓட்டங்கள் எடுத்தார். எதிரணியோ, பலம் வாய்ந்த ஒரு கிளப் கிரிக்கெட்ஆட்டத்தில் சதாசிவத்தின் மேதா விலாசம் ஒருபுறமிருக்க உண்மையில் அவர் ஒரு புதிர் மனிதர் இப்படிக் கூறுகிறார் அவருடன் வசித்த சகா.

இனி, சுப்றீம் நீதிமன்றம் வருவோம் அங்கே குற்றவாளிக் கூண்டில் அமர்ந்திருக்கிறார் சதாசிவம். அப்பழுக்கற்ற வெள்ளை வெளேரென்ற ''சூட்.''

சதாசிவத்துக்கு எதிரான குற்றச்சாட்டு ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தோராம் ஆண்டு அக்டோபர் ஒன்பதாம் திகதி காலை, மனைவி ஆனந்தத்தின் குரல்வளையை நெரித்து அவரைக் கொலை செய்தார் என்பது. பம்பலப்பிட்டியில், சென்ற அல்பன்ஸ் பிளேஸ் எனும் கடலோர ஒழுங்கையிலுள்ள அவர்களது இல்லத்தில் இச் சம்பவம் நடந்தது

சதாசிவத்தின் இல்லப் பின் கட்டில் நின்று கீழே பார்த்தால்,வெகு அருகில் தெரிவது பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையம்.

திருமதி சதாசிவம் இறந்து பதினேழு மாதங்களாகிவிட்டன. ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்து மூன்றும் ஆண்டு மார்ச் மாதம் இருபதாம் திகதியன்று சுப்றீம் நீதிமன்றத்தில் வழக்கு ஆரம்பமாயிற்று. நீதியரசர் ஈ எஃவ் என். கிறேஷியென், நகர் உதைபந்தாட்ட முன்னணியில், ஆஜானுபாகுவாகத் திகழ்ந்த ஒரு முன்னைநாள் வீரர். சட்டத்துறையில் அவரை அறியாதோர் இல்லை ஜூரர் சபையின் ஏழு பேரும் ஆங்கிலம் அறிந்தவர்கள்.

அரசு தரப்பில் தலைமை தாங்கி வழக்கை நடத்தியவர், ரி. எஸ் பர்ணந்து. கியூ ஸி. உருவத்திற் சிறியவர். ஆழ்ந்த சட்ட அறிவுடையவர். பின்னர், பிரதம நீதியரசர் பதவிக்கு ஏற்றம் பெற்ற சிறப்பினர். அவருக்குத் துணை நின்ற வழக்கறிஞர்கள் மூவர். சிரேட்ட ஆலோசகர், டக்ளஸ் ஜான்ஸ். முடிக்குரிய 'கௌன்ஸெல்'கள் ஆனந்த பெரேரா, வி. ரி. தாமோதரம் ஆகியோர் இவர் பின்னர் 'பியூனிஜஸ்ரிஸ்'' நீதியரசராக நியமிக்கப் பெற்றவர். இப்படியாக வாதி தரப்பு வலிமை மிக்கதாக,எதிரி தரப்பினர்க்கு அச்சமூட்டுவதாக, அமைந்து விளங்கியது.

''பிருஸிக்கியூஷன்'' பக்கம் இப்பேர்ப்பட்டதானலும், எதிரி பக்கம் அதற்கு எவ்வகையிலும் சளைத்ததாகத் தோன்றவில்லை. பராக்கிரமம் வாய்ந்த டாக்டர் கொல்வின் ஆர் டி. சில்வா தலைமை தாங்கினர். வழக்கு விசாரணை நெடுகிலும் உயர் ஆற்றல் வெளிப்பட, அங்கு நடுநாயகமாகத் துலங்கியவர் அவரே அவருக்குப் பக்கபலமாக நின்றோர் இருவர்: நியாய துரந்தரர் கே ஸி. நடராஜா. இவர் வெளிநாடுகளிலும் தமது துறையில் புகழ் ஈட்டிக் கொண்டவர்; ரி டபிள்யூ. ராஜரட்ணம் ஆகியோராவர். இவர் காலக் கிரமத்தில் சுப்றீம் நீதிமன்ற நீதியரசரானார். இப்பொழுது பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பெற்றுள்ளார்.

சதாசிவம் வழக்கில் கேந்திர முக்கியத்துவம் வகித்தது வைத்தியச் சாட்சியம். விசேடித்த அறிவுடைய சிரேட்ட வைத்தியர்கள் அளித்த சாட்சியம் ஒன்றுக்கொன்று முரணாக இங்கு இடம்பெற்றது

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் சத்திரசிகிச்சை இணைப் பேராசிரியர் டாக்டர் எம். வி பி.பீரிஸ் பின்னர் ஓர் அமைச்சர் ஆனர் டாக்டர் மில்றோய் போல் இன்னுமொரு சாட்சியானர். அரச தரப்பில் சாட்சியம் அளித்த இவ்விருவரும் ''டோவ் ஹவுஸ்'' கொலை வழக்கிலும் அவ்வாறே சாட்சிகளாயினர்

எதிரி தரப்பிற்குத் துணை வந்த இன்னும் இருவர், டாக்டர் ஜி.எஸ் டபிள்யூ த சேரம் ;சேர் ஸிட்னி ஸ்மித் ஆகியோராவர் சேர் ஸிட்னி எடின்பறோ பல்கலைக்கழகச் சட்ட வைத்தியப் பேராசிரியர் அத்துறையில் அனைத்துலகக்கீர்த்தி பெற்றவர்

இங்ஙனமாக வாதிதரப்பு எதிரி தரப்பு ஆகிய இரு பக்கத்திலும் தோற்றியவர்கள் இந்நாட்டிலேயே உச்ச ஆற்றலுள்ள சட்ட அறிஞர்கள் ஆவர் நாளாந்தம் நடந்தேறிய இவ் வழக்கு நிகழ்வுகள் பெரும்பாலும் தினசரிப் பத்திரிகைகளின் முன்பக்கச் செய்திகள் ஆயின.

ஸொலிஸிட்டர் ஜெனரல் ரி எஸ், பர்ணந்து வாதி தரப்பில் வழக்கைத் தொடக்கி வைத்தார். கொலைச் சம்பவம் நேர்ந்தது இவ்வாறு என அவர் விவரித்தார்: முதல் எதிரி சதாசிவம், அவ்வீட்டுச் சமையற்காரப் பையன் வில்லியம் என்பவனுடைய துணையோடு இக்கொலையைப் புரிந்தார். வில்லியம் கரிய நிறமுடையவன் சாதாரண உடற்கட்டுடைய இளைஞன்.

கொலைச்சம்பவம் 1951, அக்டோபர் ஒன்பதாம் திகதி. காலை சதாசிவம் வீட்டுமேல் மாடிப்படுக்கையறையில்நேர்ந்தது எஜமாட்டி ஆனந்தத்தின் வலது கையை நிலத்தோடு அமர்த்தியபடி கணவன் சதாசிவம் அவருடைய தோளை அழுத்திப் பிடித்துக்கொண்டு அவர் கழுத்தை நெரிக்கலானர். அவருடைய பிடி வர வர இறுகியது. ஆனந்தம் தன்னால் ஆனமட்டும் திமிறினர், துடிதுடித்தார். பிடி தளர்ந்தபாடில்லை. எஜமாட்டியின் ஆவி பிரிந்தது.

திருமதி. சதாசிவம் காலை எட்டு மணிக்கும் எட்டரை மணிக்கும் இடையே படுகொலை செய்யப்பட்டார். வாதி தரப்புப் பிரதான வக்கீலின் வாத நிலைபாடு இது.

வாத ஆதாரமாக வைத்தியச் சாட்சியம் அமைந்தது. அதற்கு ஆதரமாக இருந்தது, சமையற்காரன் வில்லியம் அளித்தசாட்சியம். இப்போது அவன் முடிக்குரிய சாட்சியாக மாறிவிட்டிருந்தான்.

[14-ம் பக்கம் பார்க்க]

## தாழ்த்தப்பட்ட . . .

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

நூல் அமைந்துள்ளது. எதிர்காலத்தில் இபபொருளில ய்வு செய்ய முற்படுகின்றவர்களுக்கு உதவத்தகுந்த அடிப்படையான அத்திபாரம் இந்நூல் என்று சொல்லலாம். இலங்கைத் தமிழர்களின் மறைக்கப்பட்ட ஒரு பகுதியினை இந்த நூல் வெளிக்கொண்டு வருவதனல் வரலாற்று அடிப்படையிலும் இந்த நூலுக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. நூலின் மேலட்டையில் ''தாழ்த்தப்பட்ட தமிழர்களின் கல்விவளர்ச்சி' பெயர் சுட்டப்படும் இந்த நூலின் உள்ளே, 20ஆம் நூற்ருண்டில் தாழ்த்தபபட்ட தமிழர்களின் 'கல்விவளர்ச்சி' எனப் பெயர் பொறிக்கப்பட்டுள்ளமையைத் தவிர்த்திருக்கலாம். ஆயினும் இந்த நூல் ஒவ்வொரு தமிழ் மகனும் தவருது படிக்க வேண்டிய புத்துருவாக்கம் என்பதனை உறுதியாகக் கூறலாம்.


**SPOKEN ENGLISH**

ஆங்கிலம் கூச்சமின்றிப் பேசவேண்டுமா? மூன்றே மாத காலத்தில் பிறரைப்போல் நீங்களும் ஆங்கிலத்தை கூச்சமின்றி பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள். முற்றிலும் புதுமையான உளவியல் அடிப்படையில் அமைந்த பாடத்திட்ட முறையில் தபால் மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள். இலகுவான அஞ்சல்வழிப் பயிற்சி

எம்மிடம் மிகப் புதுமையான முறை மூலம் கற்றுக் கொண்ட மாணவ / மாணவிகளின் சில கருத்துகள்.

★ ஆங்கில பேச்சை பொறுத்தவரை உங்களுடைய பாடங்கள் உளவியல் ரீதியானதும், விஞ்ஞான ரீதியானதுமான அணுத முறையினை தன்னுள் அடக்கியிருக்கின்றன. ஆங்கிலத்தை ஆரம்பமாகப் பயில்வோர்க்கு ஆங்கில அபிவிருத்தியை உண்டாக்க கூடிய கூறுகள் பாடங்களில் உள்ளோட்டமாக அமைந்திருப்பதை என்னல் உணர முடிகிறது.

எம். பாலசுப்பிரமணியம்
மாதகல் வடக்கு
மாதகல்

★ உங்கள் நிறுவனத்தின் அளப்பரிய சேவையின் மூலம் எனக்கு ஆங்கிலம் பேசத் தெரியாது என்ற மனக்கவலை தீர்ந்தது ஆங்கில பயிற்சியில் சிறந்த தேர்ச்சி பெறுவேன் என்னும் நம்பிக்கையை ஊட்டுகிறது உங்கள் பாடத்திட்டம்.

செல்வி T. பத்மாதேவி
இலட்சு பவனம், பருத்தித்துறை வீதி,
நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்

★ Practice Makes Perfect எனும் அடைமொழியோடு தொடங்கும் உங்கள் பாடத்திட்டம் மிக இலகுவானதும், மாணவர்கள் குறுகிய காலத்தில் பயிற்சி பெறக் கூடியதாகவும் உள்ளது.
'கண்ணுடையவர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்'

V ஜெயரட்ணம்
அதிபர், சரஸ்வதி சிறுவர் முன்னேற்ற பாடசாலை,
மஹா இறம்பைக்குளம், வவுனியா.

★ உங்கள் பாடத்திட்டம் மூலம் ஓரளவு பயமின்றி ஆங்கிலம் பேசக் கூடியதாக உள்ளது. தங்கள் சேவைக்கு எனது நன்றிகள்.

செல்வி எஸ் மைதிலி
கரம்பன் மேற்கு,
ஊர்காவற்துறை

எமது பாடத்திட்டம் பற்றிய விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க

**BRIGHT TRAINING CENTRE**
P. O BOX 162
COLOMBO.

03561

# வல்லவனுக்கு வல்லவன்

பட்டிக் காட்டுப் புளுகனின் கெட்டித்தனங்களைக் கேள்விப்பட்ட பட்டணத்துப் புளுகன் அவன் மீது பொருமை கொண்டு அவனைப் புளுகில் மடக்கிவிட வேணுமென்ற தலைக்கனத்தோடு பட்டிக்காட்டுப் புளுகனின் வீட்டிற்குச் சென்ருன்.

அப்போது பட்டிக்காட்டுப் புளுகன் வீட்டில் இல்லை. அவனது மகன் ஐந்து வயதுச் சிறுவனே வீட்டில் இருந்தான். பட்டணத்துப் புளுகனைக் கண்டதும் "வாருங்கள் வாருங்கள்" என்று வரவேற்ற சிறுவன் நீங்கள் யார், எங்கிருந்து வருகிறீர்கள் என்று விஞவிஞன் அதற்குப்பட்டணத்துப புளுகன் "நான் தான் ஆனையை அலாக்காகத் தூக்கி ஆகாய மார்க்கமாக வீசிஎறியும் அசகாய வீரன்; பட்டணத்திலிருந்து வருகிறேன்; உனது தந்தையைப் புளுகில் வெற்றி கொள்வதற்காக" என்ருன்.

அதற்குப் பட்டிக்காட்டுப் புளுகனின் மகன்: "சற்றுப் பொறுங்கள், இப்போது தான் எனது தந்தையார் ஒரு சிற்றெறும்பின் தோலை உரித்து அதனல் ஆகாயத்தின் ஓட்டையை அடைப்பதற்காகச் சென்றுவிட்டார்; சொற்பநேரத்தில் வந்து விடுவார்" என்று கூறிவிட்டு அப்பால் எழுந்து சென்றுவிட்டான். சிறுவன் கூறியதைக் கேட்டதும் அதிர்ச்சியடைந்த பட்டணத்துப் புளுகன் "இந்தச் சிறு பையன் இவ்வளவு புளுகினல் தகப்பன் எவ்வளவிற்குப் புளுகுவான்" என்று சிந்தித்தவாறு வந்த வழியே நடையைக் கட்டினன்.

❁ நித்திலா மாணிக்கம்

# 'க' வில் தோடங்கும் பழமோழிகள்

கசடருக்கு யோகம் வந்தால் கண்ணுந் தெரியாது காதும் கேளாது.

★

கடையில் கட்டித் தூக்கினுலும் அழுகல் பூசனி அழுகல்தான்.

★

கட்டிக் கொடுத்த சோறும், சொல்லிக் கொடுத்த சொல்லும் எத்தனை நாளுக்கு வரும்?

★

கண்ணுடி நிழலிற் கண்ட பணம் கடனுக்கு உதவுமா?

★

கதிகெட்ட மாப்பிழைக்கு எருமுட்டைப் பணியாரம்.

★

கரடியிடம் உதைபட்டவனுக்கு கம்பளிக்காரனைக் கண்டால் பயம்.

★

கம்மாளன் நாய் சம்மட்டி ஒலிக்கு அஞ்சுமா?

★

கரும்புகட்டோடிருந்தாலும் எறும்பு தன்னுலே வரும்.

★

கல உமி தின்ருலும் ஓர் அவல் அகப்படாது.

★

கள்ளுளிச் சித்தன் போன வழி காடுமேடெல்லாம் தவிடு பொடி.

சுதுமலையூர்
வி எஸ் ஸ்ரீராம்

# பூஞ்சிட்டு

## விஞ்ஞானக் கதை

# கூட்டுறவு

கடற்கரையில் அமைந்திருந்த அந்தப் பாறை வெப்பமாய் இருந்தது. காற்று வேகமாக வீசிற்று. சமுத்திரத்தில் இருந்து கடும் குளிர் எழுந்தது.

பாறை வெப்பமும், ஊதற்காற்றும், அப்பால் இருந்த சமுத்திரக் குளிரும் அந்தப் பெரிய கடல் அனிமனிக்குப் பழக்கமானவை தான்:

அது பாறைக்கு மேல் அசையாமல் இருந்தது.

முன்விரவின் மோன மயக்கத்தில் அது ஆழ்ந்திருப்பது போலத் தெரிந்தது.

சிறிய மீன் ஒன்று அதன் வாயில் இருந்து வெளியே நீருக்குள் குதித்து நீந்தத் தொடங்கியது.

சுற்றிச் சுற்றிக் கடல் அனிமனிக்கு அருகிலேயே அது காணப்பட்டது.

அதை விட்டு வெகுதூரம் விலகிச் செல்வதாக இல்லை.

திடீரெனப் பெரிய மீன் ஒன்று இந்தச் சின்ன மீனைக் கண்டுவிட்டு அதைப் பிடிப்பதற்காகத் துரத்தத் தொடங்கியது.

பயத்தால் பரிதவிக்கும் நிலை சிறிய மீனுக்கு ஏற்பட்டதா?

அதுதான் இல்லை.

மனதில் பொருத்தமற்ற பொருமல்கள் எதுவும் இன்றி, அது நேராக ஒடி வந்து கடல் அனிமனியின் வாய்க்குள் புகுந்தது.

ஒற்றை ஒளி வட்டமான நிலவு வானத்தில்:

பெரிய மீன் சிறிய மீனைத் தவறவிட முடியாது.

வெகு வேகமாகச் சிறிய மீனைத் துரத்தி வந்த பெரிய மீன், தன்னுடைய வேகத்திற்குத் திடீரென பிரேக் போடமுடியாமல் தானும் கடல் அனிமனியின் வாயுள் புகுந்தது.

பெரிய மீனைக் கடல் அனிமனி கொன்று தின்பதற்கு முன் சிறுமீன் மீண்டும் வெளியே வந்துவிட்டது.

வெளியே வந்து கடல் நீரில் நீந்திக் கொண்டே, "நல்லாச் சமைச்சு வை. நானும் சாப்பிட வாறன்" என்றது சிறுமீன்.

"நீ பிடிச்சுத் தந்த இரை. உனக்கும் பங்கு தரத்தானே வேணும்" என்றது கடல் அனிமனி.

"நீ சில வேளை முழுதையும் சாப்பிட்டு முடிச்சிட்டால்?"

என்று கேட்டது சிறுமீன்.

"எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்பது வள்ளுவர் வாக்கு. தெரியாதே உனக்கு?" என்றது கடல் அனிமனி.

"உந்தப் பாட்டு மனிசரிலை கன பேருக்குத் தெரியாது" "தெரிந்தாலும் அவை கடைப்பிடிக்கிறேல்லை"

நீ கட்டாயம் கடைப்பிடிப்பியோ?"

"இந்தா... வேலை முடிஞ்சுது நானும் உறிஞ்சி முடிஞ்சுது நீ வந்து மிச்சத்தைச் சாப்பிடு" என்று அழைத்தது அனிமனி.

சிறுமீன் அதன் வாயிக்குள் இறங்கி, வயிறு முட்டும் வரை ஒரு பிடிபிடித்தது.

"நீஎந்த நாளும் எனக்கு இப்பிடி உதவி செய்ய வேணும்" "நீயும் செய்ய வேணும்".

கடல் அனிமனியும் சிறுமீனும் அருகில் நின்று,

'கூட்டுறவு நாட்டுயர்வு' எனப் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டன.

★ பிரவீன்ஸ்

## முரசொலி பூந்தோட்டம்
### அங்கத்தவர் பத்திரம்

முழுப்பெயர்: ..........................................

வயது: ..........................................

பாடசாலையின் பெயர்: ..........................................

கல்விகற்கும் வகுப்பு: ..........................................

வீட்டு முகவரி: ..........................................

கையொப்பம்: ..........................................

மேலுள்ள விபரங்கள் சரியானவை என்று உறுதி கூறுகின்றேன்.

.................... ..........................

திகதி பெற்ருர் / வகுப்பாசிரியர் கையொப்பம்

(பதினன்கு வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரம் உறுப்பினராகலாம். மூன்று பத்திரங்களை ஒன்றுக நிரப்பி அனுப்ப வேண்டும்.)

## விலங்குகள் விதம் விதம் 22:

# எலண்ட்

மரைஇனத்தைச்சார்ந்த எலண்டகள் ஆபிரிக்காவின் காடுகளில் வாழ்கின்றன. இவை காட்டின் அடர்த்தி குறைந்த பகுதிகளிலேயே வாழ்கின்றன. கூடியளவு வெப்பத்தை விரும்புகின்றன.

கூடியளவு நீரின்றிவாழும் சக்திஇந்த எலண்ட்களுக்கு உண்டு அதிகளவு தாவரங்களையே விரும்பி உண்கின்றன.

இவைநூறு அல்லது இருநூருகச் சேர்ந்து கூட்டம் கூட்டமாகவே வாழும். சில இடங்களில் காளைகள் தனித்தும் சில இடங்களில் குடும்பமாகவும்வாழும் இயல்புடையவை எலண்ட்கள்

எலண்ட்கள் காட்டில் அதி வேகமாக ஓடக்கூடியவை. வேகமாக ஓடுவது மட்டுமல்ல. அதிகளவு உயரம் பாயக்கூடியவையும் கூட, ஆம் சாதாரணமாக ஒரு எலண்ட் இரண்டு மீற்றர் உயரத்திற்கு பாய வல்லது.

எலண்டகளின் இனச் சேர்க்கைக் காலம் நவம்பர் டிசம்பர் மாதங்களாகும். கன்றுகளை ஈனும் காலம் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களாகும். ஒருபெண் எலண்ட் இரண்டு ஆண்டிற்கு ஒரு கன்றையே ஈனும்.

ஒரு எலண்ட் சராசரியாக 6 அடி நீளம்வரை வளரும் அப்போது அதன் நிறை ஒரு தொன்னிற்கு மேலாக இருக்கும்.

உலகில் எலண்ட்களில் இரண்டு இனங்கள் உண்டு. முனை இனம் இது சிவப்பும் கபிலமும் கலந்த நிறத்தில் இருக்கும். இதன் முதுகில் 14 வெள்ளை வரிக்கோடுகள் காணப்படும். பின் பகுதியில் கறுப்புக் கோடுகள் இருக்கும் முதுகின் நடுத்தண்டில் விசிறி போன்று மயிர்கள் அமைந்திருக்கும்.

அடுத்த இனம் ராட்சத இனம் இதற்கு வரிகள் எதுவும் கிடையாது தோற்றம் மிகப் பெரியதாக இருக்கும்

இவை தவிர 'டி ஒரிக்ஸ் லிவிஸ்டன்' என்ற இனமும் எலண்டில் உண்டு. எலண்ட்களின் உணவு உண்ணும் நேரம் இரவு அல்லது அதிகாலைப் பொழுது ஆகும். ஆபிரிக்காவின் காட்டு இன மக்களுக்கு சத்தான பாலை வழங்கும் எலண்ட்களை அதே மக்கள் இறைச்சிக்காக அழிப்பதால் 'எலண்ட்' உலகில் அருகி வருகின்றது.

தி. தவபாலன்

# வயிற்றின் கதை

முற்காலத்தில் வயிற்றுக்கும் மற்ற உறுப்புகளுக்கும் வழக்கு உண்டாக, மற்ற உறுப்புக்களெல்லாம் ஒன்றுகூடி வயிறு ஒரு வேலையுஞ் செய்யாமலிருப்பதால் இனி வயிற்றுக்காகத் தாங்கள் ஒருபாடும் படுகிறதில்லையென்று உறுதி செய்து கொண்டன

கைகள் "ஒரு வேலையும் செய்யோம்" என்று சும்மாவிருந்தன. கால்கள் வயிற்றுக்காக ஓர் அடி கூட எடுத்துவையோம் என்றன. கண், காது முதலியனவும் தங்களுடைய வேலையைச் செய்யோம் என்றன.

இவ்வகையாக அந்த உறுப்புக்கள் செய்த கட்டுப்பாடு அவைகளுக்கே தீங்காய் விளைந்தது

வயிற்றுக்கு உணவு இல்லாமையால் கைசோர்ந்து. கால் அயர்ந்து, கண் இருண்டு, காது அடைத்தது

துன்பம் உண்டானபடியால் வயிறுதான் முதன்மையானதென்றும் வயிற்றுக்கு உணவு கொடாவிட்டால் தாங்கள் வாழ்கிறதுக்கு வழியில்லை என்றும் அந்த உறுப்புக்கள் அறிந்து கொண்டன.

(பிரதாப முதலியார் சரித்திரத்திலிருந்து)

## பூந்தோட்டம் அங்கத்தவர்

இலக்கம் 251 ரேணுகா கந்தையா
வயது12, சாவகச்சேரி இந்துக் கல்லூரி,

இலச்கம் 252 சிவசோமசுந்தரம் கிருஷ்ணகுமார்
வயது 09, அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி

இலக்கம் 253 கோபாலபிள்ளை சந்திரதாசன்
வயது 13, கொக்குவில் இந்துக் கல் லூரி,

இலக்கம் 254 அருளன்னராஜா மெ. அமுதாங்கன்
வயது 11, பர்யோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்

இலக்கம் 255 கந்தசாமி வரகுணன்
வயது 11, மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி

இலக்கம் 256 ஈஸ்வரகுமார் குணவீரசிங்கம்
வயது 08, மட்டுவில் மகா வித்தியாலயம்,

இலக்கம் 257 கெங்காகுலதிலகம் காண்டீபன்
வயது 11, யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை

இலக்கம் 258 ஹா. மு முகம்மது ஜவாஸ்
வயது 13, பரி. யோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்

இலக்கம் 259 நவரட்ணம் ஜெயபாலசிங்கம்
வயது 13, புனித ஹென்றி அரசர் கல்லூரி, இளவாலை

இலக்கம் 260 கருணனந்தசிவம் அனிதா
வயது 06, புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் யாழ்ப்பாணம்

# பூகோளத்தில் பான வாரம்

# இந்திரா கொலை சூத்திரதாரி தவான்? மர்மம் நாளை துலங்கும்

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் அவரது அரசாங்கத்திற்கும் அடிக்கடி பல தொல்லைகளை ஏற்படுத்தி வரும் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' புதிதாக ஒரு பிரச்சனையையும் கிளறிவிட்டுள்ளது.

பிரதமர் காந்தியின் அந்தரங்க ஆலோசகராக அண்மையில் நியமிக்கப்பட்ட ஆர். கே. தவான் இந்திரா காந்தி கொலையுடன் தொடர்பு கொண்டுள்ளவர் என 'எக்ஸ்பிரஸ்' வெளியிட்ட செய்தி இந்திய அரசியலில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்திரா கொலையை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட தக்கார் - நடராஜன் கமிஷனின் அறிக்கையின் ஒரு பகுதியை அடிப்படையாக வைத்தே பிரஸ்தாப செய்தியை எக்ஸ்பிரஸ் வெளியிட்டது

இதனையடுத்து பகிரங்கப்படுத்தப்படாமல் ரகஸியமாகவே வைக்கப்படுள்ள இவ் அறிக்கைகையை உடனடியாக வெளியிடுமாறு எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒரே குரலில் பாராளுமன்ற இருசபைகளிலும் குழப்பம் செய்தன. இதனைத் தொடர்ந்து 63 எம் பிக்கள்பாராளுமன் றத்திலிருந்து வெளியேற்றப்பட்டதும் எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்து வருவதும் தெரிந்ததே.

## இந்திரா கொலையில் தவான் சம்பந்தம்?

இந்திரா காந்தியின் கொலையுடன் அவர் கொலையுண்ட போது அந்தரங்க ஆலோசகராகவிருந்த தவான் சம்பந்தப்பட்டுள்ளாரா என்பதற்கான பதில் இன்னும் பகிரங்கமாக்கப்படவில்லை.

இருபத்து நான்கு வருடகாலம் நேருவின் குடும்பத்தில் சேவை செய்த தவான் திடீரென ராஜீவ் காந்தியால் தூக்கி எறியப்பட்டதற்கும், திடீரென அவராலேயே அணைத்துக் கொள்ளப்பட்டமைக்கும் பின்னணி என்ன என்பது எவருக்குமே புரியவில்லை.

எனினும் இந்திராவின் கொலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் இவருக்கு ஒரு இக்கட்டான நிலையை ஏற்படுத்தியது உண்மைதான்.

முக்கியமாக இரண்டு காரணங்களால் தவான் இந்திரா காந்தியின் கொலையுடன் சம்பந்தப்பட்டுள்ளார் எனச் சந்தேகிக்கக் காரணமாகிறது முதலாவது இந்திரா காந்தியைக் கொலை செய்த சீக்கிய மெய்ப்பாதுகாவலர்களை அப் பதவிக்கு தவானே நியமித்தார். இரண்டாவது இந்திரா காந்தி அன்று வழங்கவிருந்த தொலைக்காட்சி, பேட்டியை அரைமணி நேரத்திற்கு தாமதப்படுத்தினர் என்பது.

இவை இரண்டையும் திரு. தவான் தனது சொந்தச் செல்வாக்கைப் பயன்படுத்தியே செய்துள்ளார். தொலைக் காட்சிப் பேட்டியை மட்டுமன்றி வேறு பல சந்திப்புக்களை வழமைக்கு மாறாக தாமதப்படுத்தியும், சில சந்திப்புக்களை ரத்துச் செய்தும உள்ள தவானின் செயலையிட்டு சந்தேகப்படுவது தவிர்க்க முடியாததே.

இச் சந்திப்புக்களில் மாற்றங்கள் செய்ததற்கான காரணம என்ன என்று விசாரணையின்போது தவானிடம் கேட்கப்பட்டது, இவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்திரா கொலைக்கான சூழ்நிலைகளை ஏற்படுத்தவே அவை செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

'ஆர்பி'

வெளியிடப்படாத தக்கர்–நடராஜன் கமிஷன் அறிக்கையில் தவான் தொடர்பாக தனியான ஒரு அத்தியாயம் உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

## பழைய பதவியில் மீண்டும் தவான்

இவ்வாறான ஒரு நிலையில் தான் தவான் மீண்டும் ராஜீவ் காந்தியின் அந்தரங்க ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது பலருக்கும் வியப்பையளித்துள்ளதுடன் ராஜீவின் அமைச்சரவையிலுள்ள பல மூத்தஅமைச்சர்கள்கூட இதனை விரும்பவில்லை. முக்கியமாக உள்துறை அமைச்சர் பூட்டா சிங் இதனை ஏற்கவில்லை.

இதனால் தக்கர் கமிஷன் அறிக்கை தொடர்பான செய்தி வெளியானதற்கும் அதைத்தொடர்ந்து ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கும் தனது அமைச்சரவையிலுள்ள சில மூத்த அமைச்சர்களே பின்னணியிலிருந்திருக்கலாம் என ராஜீவ்காந்தி சந்தேகப்படுவதற்கும் வாய்ப்புள்ளது காங்கிரஸ் தலைமைபீடத்திற்குள்ஏற்பட்டுள்ளசிலஉள் முரண்பாடுகளின் வெளிப்பாடே இது எனவும் சில பத்திரிகையாளர்கள் கருத்துத் தெரிவித்ள்ளது குறிப்பிடத்தக்கது

தவான் ஒரு சிறந்த ஆலோசகர் என்று கருதப்படுபவர்; சகல காங்கிரஸ் தலைவர்களையும் தனிப்பட்ட முறையில் நன்கு தெரிந்து வைத்துள்ள இவருக்கு அவர்களது பலம் என்ன பலவீனம் என்ன என்பதும் நன்றாகத் தெரியும். இதனாலும் அவருக்குத் தனிப்பட்ட முறையிலுள்ள பல தொடர்புகளாலும் கிறந்த ஆலோசகராக விளங்கமுடியும் என்பது உண்மையாக இருக்கலாம்.

ஆனால் நான்கு வருடங்களுக்கு முன்னர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட அவரை மீண்டும் தனது அந்தரங்க செயலாளராக நியமித்ததற்கான காரணம் பிரதமர் ராஜீவை விட வேறு எவருக்குமே தெரியாது.

## கமிஷன் அறிக்கையை வெளியிட இணக்கம்

'இந்தியன் 'எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் இது தொடர்பான செய்தி வெளியானதையடுத்து இந்தியப் பாராளுமன்றத்தில் அது தொடர்பாக எதிர்க்கட்சிகள் கேள்விக்கணைகளைத் தொடுத்தனர். தக்கார்- நடராஜன் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும் எனவும் எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்தன.

முதலில் தேசிய பந்தோபஸ்துக்கு பாதகமாக அமையுமென்பதால் நூல் அறிக்கையை வெளியிட முடியாதென மறுத்த இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி, எதிர்மட்சிகளின் வற்புறுத்தல்களைக் கயடுத்து நாளை திங்கட்கிழமை இவ் அறிக்கை பாராளுமன்றக்தில் சமர்ப்பிக்கப்படுமெனத் தெரிவித்துள்ளார்.

அறிக்கை முழுமையாக வெளியிடப்பட வேண்டும் என எதிர்கட்சிகள் கோரியுள்ளன. பிரதமர் ராஜீவ் காந்திக்கும், ஜனாதிபதி வெங்கடராமனுக்கும் மட்டுமே தெரிந்த இவ் வறிக்கை நாளை பகிரங்கப் படுத்தப்பட்டு விடுவதால் மட்டும் தவான் மீதான சந்தேகம் தீர்ந்தும் விடும் என்றோ, இப் பிரச்சனை முற்றுப்பெற்று விடும் என்றோ சொல்லமுடியாது.

---

## பெண் அமைப்பு . . .

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

பெண்ணினத்தால் வளர்க்கப்பட்டு வந்த மரபு. இம்மரபை இன்றும் எம் ஆண்வர்க்கம் அறிந்திருக்குமோ தெரியாது. இன்றும் நம் சமுதாயத்தில் கெடாத பெண்ணையும் கெட்டவள் என்று தூற்றுபவள் பெண் சீதனத்தை கொடுப்பவள் பெண் விலைபேசி தன் மகனை விற்பவள் பெண் விதவையை சமுதாயத்திலிருந்து ஒதுக்குபவள் பெண் சீராக சிறப்பாக அடக்கமாக இருக்கும் பெண்ணை அறிவற்றள் என்று கூறுபவள் பெண். எனவே பெண்ணால் பெண் நசுக்கப்படுகிறாள் என்பதனைப் பெண் இனம் புரிந்து பெண்களே பெண்களை வாழவைத்து அவர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக அமைந்தால் அங்கு பெண்ணுக்கு நீங்கள் விரும்பும் விடுதலை கிடைக்கும் எனவேஇதற்காக அமைப்பொன்றை உருவாக்கி உங்கள் பொன்னான காலத்தைமண்ணாக்கி பச்சிளம் பெண்குழந்தைகளை தவறான வழியில் கொண்டுசெல்லாதீர்கள்.

எம் சான்றோர் காட்டிய தவறான வழியினால் இன்று எம் மினம் எம்மினத்திற்கு எதிராகவே ஆயுதம் ஏந்திநிற்கின்றது நாளை உங்களைப்போன்ற பெண் வர்க்கத்தால் தன் கணவனுக்கெதிராக ஒரு பெண் ஆயுதம் ஏந்தி நிற்கும் ஒரு சூழ்நிலையை எம் தமிழ்ச் சமுதாயத்தில் உருவாக்கிவிடாதீர்கள்.

அமைப்பு அவசியம். உங்கள் அமைப்பின் மூலம் அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கி, அனாதை இல்லங்களை உருவாக்கி, வாழ வழி தெரியாத பெண் குலத்திற்கு வாழ வழிவகுக்கும்செயற்றிட்டங்களை உருவாக்குங்கள் ஆண்களும் பெண்களுமாக இணைந்து உயர்கல்வி கற்றுக்கொண்டிருக்கும் பல்கலைக் சழகத்தில் நாளை ஒரு ஆணின் அன்பையும் துணையையும் பெற்று இன்பமான இல்வாழ்க்கை அடைய இருக்கும் பெண்கள் அறிவுபெறும் அறிவுச் சாலையில் இவ்வாறான பகுத்தறிவற்ற தவறான எடுகோள்களை மாணவர்கள் மத்தியில் பெண்களாகிய எங்கள் மத்தியில் விதைக்காதீர்கள். நற்பயிரை வளர்க்க பாடுபடுங்கள். அதற்காகக் பெண் அமைப்பை உருவாக்குங்கள் செயற்படுத்துங்கள்.

அம்பலவாணர் அன் சன்ஸ்
196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
எமது நிறுவனத்தில் பலவிதமான திருமண அழைப்புக் காட்டுக்கள், புதுமனைப் புகுவிழா அழைப்புக் காட்டுக்கள், விருந்துபசாரக் காட்டுக்கள் அறிமுக அட்டைகள் அடிக்கும் காட்டுக்கள். பிறந்ததின அழைப்புக்காட்டுகள், காகிதாதிகள், எழுதுகருவிகள், மின்சார உபகரணங்கள், அன்பளிப்புப் பொருட்கள் யாவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்ளவும்.
03628

## கொல்வினை . . ,

[12-ம் பக்கத் தொடர்ச்சி]

சம்பவம் இடம்பெற்ற களம், சதாசிவத்தின் வீடு, ஸொலிஸிட்டர்- ஜெனரல் பர்ணந்து அவ்வீட்டு அமைப்பைத் தெளிவுறக் கோட்டாரிடம் விபரித்தார். இலக்கம் ஏழு, செனற் அல்பன்ஸ் பிளேஸ், பம்பலப்பிட்டி, என்பது அதன் முகவரி. அது ஓரளவு புறம்போக்கான ஒரு மேல் வீடு. பிள்ளைகள் விளையாடவென அதன் சிறு குடிசைப் பூந்தோட்டம் ஒன்று இருந்தது பக்கத்தில் அதன் கராஜ்ஜுக்கு அடுக்களையிலிருந்து ஒருவரை இட்டு வரும் ஒரு கதவு உண்டு. பூந்தோட்ட எல்லையான உயரம் குறைவான மதிற் சுவரோடு,செடி வேலி ஒன்றும் உள்ளது.

படுக்கை அறைகள் இருந்தது முதல் மாடியில். அங்குள்ள ஒரு யன்னல் வழியாகக் கீழே நோக்கினால், தெரிவது பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையம்

கீழ்வீட்டில், ஒரு சமையல் அறையும், உணவுப் பண்டங்களை வைத்திருக்கும் 'பன்ற்றி' சிற்றறையும் இருந்தன.

திருமதி சதாசிவம் சிறிய உடலமைப்பு உடையவர். எஜமானப்படுக்கை அறையில் வைத்தே அவர் திருகிக்கொலை செய்யப்பட்டார். கொலைக்கு முந்திய இரவு அவரும் கணவனும் துயில் கொண்ட அறையும் அதுவே இது வாதிதரப்பின் நிலைப்பாடு.

கணவன் மனைவிக்கு இடையே நிலவிய திருமண வாழ்க்கை உறவை ஸொலிஸிட்டர்-ஜெனறல்கோர்ட்டாரிடம் எடுத்து உரைத்தார், ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தோராம்ஆண்டு பெப்ருவரியில் திருமணம் நடந்தேறியது. ஆனந்தம் பிறந்த வீடு செல்வம் நிறைந்தது பெரும்பணம் படைத்தோர் வசிக்கும் ''கறுவாக்காடு'' பகுதியில் ஒரு வீடு. இலங்கையின் ''தென்னந்தோட்ட முக்கோணத்தினுள்'' உள்ள லுணுவிலவில் ஒரு தென்னமரத் தோட்டம் இவை திருமதி சதாசிவம் ஆனந்தம் கொண்டு வந்த நிலபுலச் சொத்துக்கள்.

திருமணமாகிச் சில காலம் செல்லுமுன்பே சதாசிவம் கிளப்களுக்குச் செல்வதிலும் உல்லாசமாகப் பொழுதுபோக்குவதிலும் தமது நேரத்திற் பெரும்பாகத்தைக் கழிக்கலானார் இவற்றுக்கெல்லாம் புதிய மனைவியின் செல்வமே அவருக்குப் பயன்பட்டது எனவே, வாழ்க்கைத் துணைவி இவற்றை விரும்பாதது வியப்பல்ல. புருஷன் தம்மைக் கவனியாதிருப்பதும் அவருக்கு மனவேதனை அளித்தது. மனைவியோ அடக்கமான பண்பு உடையவர். கணவன் ''டீக்காக''உடுப்பதும், சங்கிலித் தொடராக சிகரெட் புகைப்பதும், விளையாட்டு வேடிக்கைகளில் ஈடுபடுவதுமாக இருப்பதையும், முகஸ்துதிக்காகப் பணம் செலவழிப்பதையும் அவரால் சகிக்கு முடியவில்லை

(அடுத்தவாரம் முற்றும்)

BITSMANS
INSTITUTES - MANIPAY
91 A/L கணித, விஞ்ஞான வகுப்புக்கள்
ஆரம்பம்: 27-03-89 திங்கள் 1-30 P. M.
பௌதிகம் : திரு. சௌந்தி B. Sc (Hons)
இரசாயனம் : திரு. மணியம் B. Sc. (Hons)
தூய/பிரயோக கணிதம் : திரு கமலசிங்கம் B, Sc. (Hons)
விலங்கியல் : திரு. ஈசன் B. Sc. (Hons)
தாவரவியல் : திரு குகாதரன் நேசன் B.Sc .(Hons)
91 A/L கலை, வர்த்தக வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.
03696

## யூனிவேர்சல்

FOR GOD AND COUNTRY
UNIVERSAL

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

**A/L 91**

கலை, வர்த்தகபிரிவு

ஆரம்பம்:

27 - 03 - 1989 பி. பகல் 2.30

| | | |
|---|---|---|
| பொருளியல் | - | திரு. கலாகரன் |
| கணக்கியல் | - | திரு. மரியதாஸ் |
| வர்த்தகம் | - | திரு. கனகரட்ணம் |
| அளவையியல் | - | திரு. சுப்பிரமணியம் |
| தமிழ் | - | திரு. வைகுந்தநாதன் |
| இந்துநாகரிகம் | - | திரு. சுப்பிரமணியஐயர் |
| புவியியல் | - | திரு. முருகையா |
| அரசியல் | - | திரு. மஃறூப் |
| வரலாறு | - | செல்வி உமாசங்கரி |

03688

---

பிரத்தியேக வகுப்புக்கள்

பிரம்படி லேன், கொக்குவில்.

**A/L 1991**

கணக்கியல்

ஆரம்பம்:

03. 04. 1989

ஆசிரியர்:

ஸ்ரீ B. Com(Hons)

குறிப்பு: முற்கூட்டியே அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும்.

(குறிப்பிட்ட மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்) 03732

---

## அக்குபஞ்சர் D.Ac. டிப்ளோமா

வட இலங்கை அக்குபஞ்சர் சங்கம் நடாத்தும் 11-வது விரிவுரைகள்

அக்குபஞ்சர் - விரிவுரை செய்முறைப் பயிற்சி

ஆரம்பம்: 16 - 04 - 1989

வைத்தியர்களும், வைத்திய மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்

**Dr. S. T. பூரணேஸ்வரன்**

செயலாளர்

வட இலங்கை அக்குபஞ்சர் சங்கம்

5, நாவலர் வீதி, இந்து சந்தி,

யாழ்ப்பாணம். 03610

---

## BITSMANS

Institutes, Manipay.

**89 O/L**

பழைய, புதிய பாடத்திட்டத்திற்கான

**(Day Class)**

முழுப்பகல் நேர வகுப்புக்கள்

ஆரம்பம்:

**27. 03. 89**


திங்கள் 7. 30

03695

---

## வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான இலகுவான நவீன

## கம்பியூட்டர் பயிற்சி



COMPUTER PROGRAMMING IN dBASE III+

ஆரம்பம்: 02-04-89 (சனி, ஞாயிறு வகுப்புகள்)

கட்டணம்: 1250/- (பகுதி பகுதியாக செலுத்தலாம்)

பயிற்சிக்காலம்: 2 மாதம்

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப்பயிற்சி குளிரூட்டப்பட்ட அறையில் I B M COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி (முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவியரே சேர்க்கப்படுவார்களாகையால், விண்ணப்பப் படிவத்தைப்பெற்று பதிவுசெய்து கொள்ளவும்.


விண்ணப்ப முடிவு நாள்: 01 . 04 . 89

## UNIKCO COMPUTER CENTRE

No 5, Power House Road
2nd Lane, Jaffna
(Near Sub Post Office)

---

## 3-ம் வருட நினைவஞ்சலி



**S. A. கொன்ஸ்ரன்ரைன்**

எம் அன்புத் தந்தையே !
கத்தனின் பாதமதில் பக்தியாய் வாழ்கின்ற
சுர்த்தர்களோடு நீங்கள் நித்தியம் வாழ
நாம் இறைவனை இறைஞ்சுகின்றோம்

சில்லாலை அன்பு நெஞ்சங்கள்

03731

---

**91 A/L**

கலை

வர்த்தகம்

விஞ்ஞானம்

வகுப்புக்கள்

ஆரம்பமாகிவிட்டன

விபரங்கட்கு:

**BITSMANS**

Institutes, Manipay 03606

---

**A/L MATHS**

ஆசிரியர்:

ரவிமோகன்

யாழ்ப்பாணம்

[பெருமாள்கோவிலடி]

---

பேராதனை ஸ்ரீ ஜெவர்த்தனபுர பல்கலைக்கழகங்களின் (வெளிவாரி) மாணவர்களுக்கான விரிவுரைகள்

கல்வியாண்டு - 1989/90

இலங்கை பல்கலைக்கழகங்களின் பட்டப்பாட நெறிகளான

★ கலைமாணி B. A.

★ விஞ்ஞானமாணி B. Sc. (புள்ளிவிபரவியல்)

★ வணிகமாணி B.Com.

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

கலை முதற்தேர்வுக்கு (G.A.Q) ஆங்கிலத்தையும் ஒரு பாடமாக எடுக்க விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்

**3-வது பிரிவு விரிவுரைகள் 02. 04. 1989-ல் ஆரம்பமாகின்றன**

பேராதனை பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யும் விண்ணப்ப முடிவுத்திகதி ஏப்பிரல் 10-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதால் பதிவு செய்யத் தவறிய மாணவர்களுக்கான இறுதி அறிவித்தல் இதுவே.

விபரங்களைப்பெற உடன் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

உதவிப்பதிவாளர்: **பட்டப்படிப்புகள் கல்லூரி** 148/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 03660

சிறந்த முறையில்
வீடியோ படம் பிடித்திட
வீடியோ விகோன்ஸ்
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில்)
353 C, மணிக்கூட்டுவீதி

வார முரசொலி
VARAMURASOLI

For Quality Video Filming
Video Vihons
353 C, Clock Tower Road,
★ Wellington Junction.

ஜி. சி. ஈ. (சாதாரணதர) பரீட்சையிலிருந்து

# ‘ஒப்படை’ மதிப்பீட்டு திட்டத்தை

# நீக்குவதென முடிவு

புதிய தொடர் மதிப்பீட்டு பரீட்சை முறை (ஒப்படை) இனிமேல் கல்விப்பொதுத் தராதரப்பத்திர சாதாரணதர பரீட்சையில் அமுல் நடாத்தப் படமாட்டாது. அதற்கு பதிலாக தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை முறையை பாடசாலை தவணை பரீட்சைகளுக்கு மட்டுமே அமுல் நடத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

இதன்படி தொடர் மதிப்பீட்டு முறையில் மாணவர்கள் பெறும் புள்ளிகள் இனிமேல் கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதரப்பரீட்சையுடன் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது.

இவ்வருடம் பெப்ரவரி மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதர பரீட்சையிலே இந்த தொடர் மதிப்பீட்டு முறை முதல்முறையாக அமுல் படுத்தப்பட்டிருந்தது. இந்த முறையை கைவிடவேண்டுமென கல்விமான்கள் தெரிவித்த கருத்தையடுத்து கல்வியமைச்சு இது குறித்து உயர் மட்டத்தில் கடந்த சில வாரங்களாக ஆராய்ந்தது. அதனைத் தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை மாணவர்களின் ஒழுக்கம், நடத்தை, விளையாட்டுத்திறன், சமயஉணர்வு ஆகியவை குறித்து பாடசாலை மட்டத்தில் புள்ளிகள் வழங்கப்பட்டு மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியேறும் பொழுது தொடர் மதிப்பீடு தொடர்பான சான்றிதழ் இனிமேல் வழங்கப்படுமாம். தொடர் மதிப்பீட்டு முறை கைவிடப்படவுள்ளதாக முரசொலி பெப்ரவரி மாதம் 28-ம் திகதியன்றே செய்தி வெளியிட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## வெட்கக்கேடான சம்பவம் என்று சொல்கிறார் மூப்பனார்

தமிழக சட்டசபையில் நேற்று இடம்பெற்ற சம்பவம் வெட்கக்கேடானசெயல்என்று திரு. மூப்பனார் கருத்துவெளியிட்டுள்ளார்

ஆனால், அரசியலில் இவ்வாறான சம்பவங்களைக் கண்டு ஒதுங்கிவிடமுடியாது என்றும் அவர் சொன்னார்

அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றிதனது கட்சி முடிவெடுக்கும் என்று மூப்பனார் தெரிவித்துள்ளார். காங்கிரஸின் பொதுச் செயலாளர் சிங் இது பற்றித்தெரிவிக்கையில், "இதனை வெறுமனே பார்த்துக்கொண்டிருக்க முடியாது" என்று தெரிவித்துள்ளார்.

## நாதஸ்வர சகோதரர்களுக்கு மாகாண அரசின் வாழ்த்து

இன்று வெள்ளிவிழாக் கொண்டாடும் நாதஸ்வரகான சகோதரர்கள் கானமூர்த்தி பஞ்சமூர்த்தி ஆகியோருக்கு வடகிழக்கு மாகாண அரசின் சார்பில், மாகாணசபை உறுப்பினர் திரு. க. ரவீந்திரன் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி விபரம் வருமாறு:-

இசைக்கலைஞர்களான கானமூர்த்தி – பஞ்சமூர்த்தி சகோதரர்கள் நாதசுரக் கலைத்துறையில் இணைந்து செயற்பட்ட இருபத்தைந்து ஆண்டு பூர்த்தியைக் கௌரவிக்க எடுக்கும் முயற்சி பாராட்ட வேண்டிய விடயமாகும்.

கானமூர்த்தி சகோதரர்களின் நாதஸ்வரப்பணி அனைவராலும் பாராட்டப்பட வேண்டிய கலைப்பணியாகும். இவர்களும் இவர்களின் உறவினர்களும் இணுவில் இசைக்கலைஞர் மரபைச் சேர்ந்தவர்கள்.

இணுவில், தமிழ் கலாசாரத்தின் தொட்டில் என்றால் மிகையாகாது. நாடகக்கலைஞர்கள், பாதநாட்டியக்கலைஞர்கள், சங்கீதக் கலைஞர்கள், காவடியாட்டக் கலைஞர்கள், தவில் நாதஸ்வரக் கலைஞர்களின் பிறப்பிடமும், வாழ்விடமும் இணுவில் என்பது அனைவரும் அறிந்ததே.

இவ்விதம் சிறப்புப் பெற்ற கலையகத்துடன் பிறப்பாலும், வாழ்வாலும், ஞானத்தாலும் மக்களுடன் கானத்தாலும் தொடர்பு கொண்டு வாழ்ந்த கானமூர்த்தி சகோதரர்களின் வெள்ளிவிழாக் கொண்டாட்டத்திற்கு எமது இதய பூர்வமான நல்வாழ்த்துக்கள்,

# காடுகளில் தொடர்ந்து மோதல் ராணுவத்தில் ஒன்பதுபேர் பலி

(வவுனியா)

அலம்பில் - நாயாறு பகுதிகளில் தொடர்ந்தும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. கடந்த வியாழக்கிழமை இப்பகுதியில் இடம்பெற்ற மோதலில் ஒன்பது இந்தியப் படையினர் உயிரிழந்ததாகவும், பதினாறுபேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குமுழமுனை, நித்திகைக் குளம், ஆண்டான் குளம், அலம்பில் போன்ற காட்டுப் பகுதிகளிலேயே கடும்மோதல்கள் இடம்பெற்றுவருகின்றன. அங்கு தொடர்ச்சியானவேட்டுச்சத்தங்கள் கேட்டுக்கொண்டிருப்பதாக வவுனியாவுக்கு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இதுவரை மோதல்கள் இடம்பெறாத தண்ணீரூற்று, நெடுங்கேணி, ஒட்டுசுட்டான் சமணங்குளம் ஆகிய பகுதிகளில் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். அங்கிருப்போர் வெளியேறுவதற்கும், வெளியிலிருந்து அப்பகுதிக்குச் செல்வதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஜெயலலிதா

நேற்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் வரவு செலவுதிட்டம் சமர்ப்பிக்கப்படுகையில் தோன்றிய கூச்சலும் குழப்பமும் காரணமாக முதலில் சபை பத்து நிமிடத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டது. குழப்பத்திற்குக் காரணமாக இருந்த எதிர்க்கட்சித் தலைவி செல்வி ஜெயலலிதாவும் ஏனைய அ. தி. மு. கவைச் சேர்ந்த இருபத்தெட்டுப் பேரும் இம்மாதம் முடியும் வரை சபை நடவடிக்கைகளில் கலந்து கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் தமிழ்குடிமகன் அறிவித்தார்.

நேற்றுக்காலை சபை கூடிய போது செல்வி ஜெயலலிதாவும், இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் குமரி அனந்தனும் முதலமைச்சர் கருணாநிதி எதிர்கட்சிகளின் மீது போலியான குற்றச்சாட்டுகளை சுமத்துவதாகவும் தம்மீது தேவையற்ற விதத்தில் நடவடிக்கைகள் எடுப்பதாகவும் கண்டித்தனர். இவைபற்றி உடனடியாக அவையில் விவாதிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர்

ஆனால் இதை மறுத்த சபாநாயகர் தமிழ்குடிமகன் வரவு செலவுத்திட்டம் குறிப்பிட்ட நாளிலேயே சமர்ப்பிக்கவேண்டுமெனவும் வேறு எந்த விவாதங்களும் அன்றைய தினம் நடக்கக் கூடாதெனவும் கூறினார்.

இதையடுத்து முதலமைச்சர் கருணாநிதி வரவுசெலவுத் திட்டத்தை வாசிக்கத் தொடங்கியதும் சபையில் ஒரே கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது தி மு க. உறுப்பினர்களும், அ தி மு. க. உறுப்பினர்களும் ஒருவரை ஒருவர் தாக்கினர். பட்ஜட் அறிக்கைகள் தூக்கி வீசப்பட்டன. உள்ளூராட்சி அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தலையில் காயமேற்பட்டது. முதலமைச்சர் கருணாநிதியின் கண்ணாடியும் உடைக்கப்பட்டது. ஜெயலலிதா தலைவிரி கோலமாக அவையில் இருந்து வெளியேறினார். மூப்பனார் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது இதையடுத்து சபை ஒத்தி வைக்கப்படுவதாக தமிழ்குடிமகன் தெரிவித்தார். பத்து நிமிடங்களின்பின் சபை மீண்டும் கூடியபோது முதலமைச்சர் வரவுசெலவு திட்டத்தை சபையில் சமர்ப்பித்தார். இந்திரா காங்கிரஸ் கட்சியினர் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

## நாடகக்கலைஞர் சூட்டுக்குப்பலி

நகைச்சுவை எழுத்தாளரும் நாடகக் கலைஞருமான குமார் தனபால் (47) நேற்று முன்தினம் இரவு நல்லூர் மருதடிவீதிப் பகுதியில் வைத்து இனம்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார். நான்கு பிள்ளைகளின் தந்தையும் அரியாலை முள்ளி வீதி வாசியுமான இவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது

## குமுழமுனையில் ..

படவில்லை. குமுழமுனையில் இராணுவத்தினரால் குழு உறுப்பினர்கள் ஒன்றரை மணி நேரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். அங்கு பாதிக்கப்பட்ட மக்கள் சிலரையும் இவர்கள் சந்தித்தனர். இது தொடர்பான பூரண அறிக்கை நேற்று நண்பகல இக்குழுவினரால் ஈரோஸ் தலைமைபீடத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. புலைத்திவு விஜயம் பற்றிய பூரண விபரம் மூன்று வெளியிடப்படுமென ஈரோஸ் வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

## தம்மை..

ளித்த ஜெயலலிதா பின்னர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டார்.

இவரை திரு மூப்பனார் உட்பட பல காங்கிரஸ் எம். பிக்கள் சென்று பார்வையிட்டனர். சபையில ஜெயலலிதா தாக்குதலுக்குள்ளான போது முன்னாள் அமைச்சர்களான திருநாவுக்கரசு, கே. கே. எஸ். எஸ். ஆர் இராமச்சந்திரன் ஆகியோரே இவரைக் காப்பாற்றுவதில் முக்கியபங்கு வகித்தனர்.

## கண்ணிவெடிக்கு இரு ஜவான்கள் பலி

(வவுனியா)

கடந்த வியாழனன்று முருங்கன் வீதியில் நடந்த கண்ணிவெடிச் சம்பவம் ஒன்றில் இந்தியப்படையைச் சேர்ந்த இரு ஜவான்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர், மேலும் இருவர் காயமடைந்தனர்.

இதேவேளை வவுனியாப்பகுதியில் ஏழு ஜே வி பியினரை பொலிஸார் கைது செய்துள்ளதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

## அரசடி விநாயகர் மண்டலாபிஷேகம்

நாயன்மார்கட்டு அரசடி விநாயகர் ஆலய நவோத்தர மகா சங்காபிஷேகமும், மண்டலாபிஷேக பூர்த்தி விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை முதல் நடைபெறும். பிற்பகல் திருவூஞ்சலும், விநாயகப் பெருமான் பூந்தண்டிகையில் அமர்ந்து திருவுலா எழுந்தருளலும் இடம்பெறும்.

## ஆனைக்கோட்டையில் இரு சடலங்கள்

ஆனைக்கோட்டை சந்தியில் நேற்று மாலை இரு இளைஞர்களின் சடலங்கள் சூட்டுக் காயங்களுடன் கிடக்கக் காணப்பட்டன.

காலமானார்
சங்கரப்பிள்ளை திருநாவுக்கரசு

முல்லைத்தீவு கணுக்கேணியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை திருநாவுக்கரசு (கிராம சேவை உத்தியோகத்தர். சிலாவத்தை) அகால மரணமானார். இவர் தனலெட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மாணிக்கம் தம்பதியினரின் கனிஷ்ட புதல்வரும், வாசுகி, தனஞ்செயன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். இவரின் ஈமச்சடங்குகள் 21-03 89 (செவ்வாய்க்கிழமை) பி. பகல் 2-00 மணிக்கு கரைச்சிக் குடியிருப்பில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
திருமதி தனலெட்சுமி திருநாவுக்கரசு

03741

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 62ல் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 26-03-1989 அச்சிட்டு வெளியிடப்பெற்றது